# கிரிக்கெட் ஆட்டத்தின் கதை





பல்கலைப் பேரறிஞர்

## டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா

M.A., M.P.Ed., Ph.D., D.Litt., D.Ed., FIWAI

417

# கிரிக்கெட் ஆட்டத்தின் கதை


தேசிய விருது பெற்ற நூலாசிரியர்
பல்கலைப் பேரறிஞர்

**டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா**

M.A., M.P.Ed., Ph.D., D.Litt., D.Ed., FUWAI

முன்னாள் பேராசிரியர், ஆய்வுத்துறைத் தலைவர்,
ஒய்.எம்.சி.ஏ. உடற்கல்விக் கல்லூரி,
சென்னை - 600 035.



SILVER JUBILEE YEAR 1970-95
RAJMOHAN PATHIPPAGAM

ராஜ்மோகன் பதிப்பகம்

'லில்லி பவனம்'

8, போலீஸ் குவார்ட்டர்ஸ் ரோடு,
தி.நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 044 - 24332696

## நூல் விபர அட்டவணை


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | கிரிக்கெட் ஆட்டத்தின் கதை |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | கிரிக்கெட் வரலாறு |
| ஆசிரியர் | : | டாக்டர்.எஸ்.நவராஜ்செல்லையா (1937-2001) |
| முதல் பதிப்பு | : | 1980 |
| இரண்டாம் பதிப்பு | : | 1988 |
| மூன்றாம் பதிப்பு | : | 1996 |
| நான்காம் பதிப்பு | : | 2009 - நவம்பர் |
| நூலின் அளவு | : | கிரவுன் |
| படிகள் | : | 1200 |
| அச்சு | : | 12 புள்ளி |
| தாள் | : | என்.எஸ். |
| பக்கங்கள் | : | 96 |
| நூல்கட்டுமானம் | : | பேப்பர் அட்டைக்கட்டு |
| **விலை** | : | **ரூ. 35.00** |
| உரிமை | : | பதிப்பகத்தாருக்கு |
| தயாரிப்பு | : | ஆர். ஆடம் சாக்ரட்டீஸ் |
| வெளியிட்டோர் | : | **ராஜ்மோகன் பதிப்பகம்**<br>**'லில்லி பவனம்'**<br>8,போலீஸ் குவார்ட்டர்ஸ் ரோடு,<br>தி.நகர், சென்னை-600 017. |
| அச்சிட்டோர் | : | **கலர்விங்ஸ்**<br>சென்னை - 600 005. |

# முன்னுரை

கிரிக்கெட் ஆட்டம் பற்றி வருகின்ற எனது இரண்டாவது நூலாகும் 'கிரிக்கெட் ஆட்டத்தின் கதை' எனும் இந்நூல். ஏற்கெனவே, கிரிக்கெட் ஆட்டத்தில் கேள்வி பதில் என்ற முதல் நூல் வெளி வந்து, மாணவர்களிடையேயும் பொது மக்களிடையேயும் சிறந்த வரவேற்பினைப் பெற்றிருக்கிறது.

இதைத் தொடர்ந்து, கிரிக்கெட் விளையாடுவது, எப்படி? 'கிரிக்கெட் ஆட்டத்தில் சுவையான நிகழ்ச்சிகள் ' எனும் நூல்களும் விரைவில் வெளிவர இருக்கின்றன.

எனது விளையாட்டுத்துறை தமிழ் இலக்கிய நூல்களைப் பார்க்கும் அன்பர்கள், ஏன் நீங்கள் கிரிக்கெட் பற்றி எழுதுவதில்லை. என்று அடிக்கடி கேட்டதின் விளைவாகவும்; கிரிக்கெட் பற்றி தமிழில் எழுதவே முடியாது என்று அடித்துச் சொன்னவர்களுக்குப் பதிலாகவும், கிரிக்கெட் நூல்கள் இப்பொழுது தொடர்ந்து வெளிவருகின்றன.

மக்களிடையே அதிகம் வரவேற்பினைப் பெற்றிருக்கும் கிரிக்கெட் ஆட்டம், அதிகமான அளவில் ஆங்கிலச் சொற்களாலேயே பேசப்படுகிறது. அதற்குரிய கலைச் சொற்களாக தமிழில் சொற்களை உருவாக்கி கற்கிற பொழுது, 'இவை வேண்டாமே' என்று கேட்கின்றவர்களும் உண்டு.

'தமிழில் விளையாட்டுகளுக்கும் ஏற்ற கலைச் சொற்கள் இருக்கின்றன. ஏற்ற சொற்களை முயன்றால்' நிச்சயம் உருவாக்க முடியும்' என்ற நம்பிக்கையில் தான் மிகவும் முயன்று, பல கலைச்சொற்களை உருவாக்கி இருக்கிறேன்.

முதலில் படிக்கத் தொடங்கினால், நாளாவட்டத்தில் வாய்மொழியில் பழக்கமாகிவிடும் என்ற நம்பிக்கை உண்மையாகிக் கொண்டு வருவதையும் நான் உணர்கிறேன்.

கிரிக்கெட் ஆட்டத்தின் வரலாற்றைத்தான், கிரிக்கெட் ஆட்டத்தின் கதை என்ற பெயரில் எழுதியுள்ளேன். மிகவும் சிக்கலான வரலாறுதான். ஆங்காங்கே குழப்பங்களும், குறிப்புச் சிக்கல்களும் கிளைத்தெழுந்து என்னை கலக்கியிருக்கின்றன.

என்றாலும், முடிந்த அளவு, நீரோட்டம் போல நிகழ்ச்சிகளையும், வரலாற்றுக் குறிப்புக்களையும் வடிவமைத்து இங்கே தந்திருக்கிறேன்.

எல்லோரும் எளிதாகப் புரிந்து கொள்ளவும், தொடர்ந்து ரசித்துப் படிக்கவும் ஏற்ற வகையில் சுவையாகவே எழுதிச் சென்றிருக்கிறேன். இன்னும் எவ்வாறு எழுதவேண்டும். எழுதினால் நன்றாக அமையும் என்று வாசகர்கள் எடுத்துரைத்தால், அக்கருத்துக்களை ஏற்றுக்கொள்கிறேன். பின்பற்றுகிறேன்.

கிரிக்கெட் ஆட்டத்தின் தொடக்கம் சரிவரத் தெரியாவிட்டாலும், வளர்ச்சி ஒவ்வொன்றும் மிகச் சிறப்பாகவே எழுதப் பெற்றிருக்கிறது. ஒவ்வொரு முக்கியத் திறனும் எவ்வாறெல்லாம் காலத்தால் மாறி வந்தது, ஆட்டக்காரர்களால் மெருகேறி வந்தது என்கிற நிகழ்ச்சிகள் எல்லாம், நாவலில் வருகின்ற நிகழ்ச்சிகள் போலவே அமைந்து, நம்மை வியப்படையவும், திகைப்படையவும் செய்கின்றன.

ஆட்டத்தில் பங்கு பெற்றவர்கள், பொழுது போக்குக்காக, மகிழ்ச்சிக்காக மட்டும் ஆடாமல், இதை

ஒரு உயிரினும் மேலான ஆட்டமாக எண்ணி ஆடியதின் விளைவே, காப்பாற்றியதின் முடிவே, இந்த 'உலக மகா புகழ்பெற்ற நிலைக்குக்' கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது.

தாய்நாட்டு சட்டத்தைப் போலவே, கிரிக்கெட்டின் விதிகளை மதித்தார்கள் ஆங்கிலேயர்கள் என்றால், அந்த உணர்வே, ஆட்டத்தின் செழுமைக்கும் சீரிய வளர்ச்சிக்கும் வித்தாக, சத்தாக விளங்கியிருக்கிறது.

'கிரிக்கெட் ஆடுபவர்கள் பண்பாளர்கள்' என்று பேசுகின்ற அளவில் ஆட்டம் பண்பு நடைபோடுவதால்தான், மக்கள் மிகவும் விரும்புகின்றார்கள். மதித்துப் பேசுகின்றார்கள். பாராட்டி மகிழ்கின்றார்கள்.

அத்தகைய அரிய ஆட்டத்தின் வரலாற்றை, வளர்ச்சியைத்தான், கிரிக்கெட் ஆட்டத்தின் கதை என்று உங்கள் கையில் உருவாக்கித் தந்திருக்கிறேன்.

நூலைப் படிக்கத் தொடங்கும் உங்கள் ஆர்வம் எனக்குப் புரிகிறது. படித்து மகிழுங்கள். என் முயற்சிக்கு ஆதரவு தாருங்கள்.

மேலும் பல விளையாட்டுத்துறை தமிழ் இலக்கிய நூல்களை எழுதி வெளியிடும் ஆற்றலை எனக்குத்தாருங்கள் என்று உங்கள் கையில் நூலைப் படைக்கிறேன்.

வணக்கம்.

**டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா**

# உள்ளே . . .

1. வரலாறு வளர்கிறது 7

2. வளர்ச்சி வரலாறாகிறது 45

1. விக்கெட் வந்த வரலாறு 45
2. பந்தாடும் மட்டையின் பரிணாமம் 52
3. பந்தும் பந்தெறி தவணையும் 56
4. காலுறையும் கையுறையும் 60
5. பந்தெறி முறை 63
6. எட்டாத பந்தெறி 68
7. விக்கெட்டின் முன்னே கால் 71
8. பந்தாடும் தரை 75
9. ஆடையும், அணி முறைகளும் 81
10. ஓட்டத்தைக் குறித்த முறைகள் 86
11. இரு நாடுகளுக்கிடையே பெரும் போட்டிகள் 90-91

3. கலைச்சொற்கள் 92-93

# 1. வரலாறு வளர்கிறது

## கீர்த்திமிக்க ஆட்டம்

கீர்த்திமிக்க ஆட்டமாக, இன்று கிரிக்கெட் விளங்குகிறது. ஒலிம்பிக் பந்தயங்களுள் ஒரு விளையாட்டாக கிரிக்கெட் இடம் பெறாவிட்டாலும், உலக அரங்கிலே உன்னதமான ஓரிடத்தைப் பெற்று, பெருமை மிகு ஆட்டமாகத் திகழ்ந்து வருகிறது.

ஐந்து நாட்களும் போட்டி நடக்கிறது என்றாலும், பகல் முழுவதும் இயற்கையின் துன்பங்களைத் தாங்கிக் கொண்டு, பல்லாயிரக்கணக்கான ரசிகர்களை ஒரே இடத்தில் உட்காரவைத்து, உணர்ச்சிப்பிழம்பான நிலையில் அவர்களை அமர்த்தி, மகிழ்ச்சியில் பேரின்ப நிலையில் நிறுத்திவைத்திருக்கும் பண்பினால்தான், கிரிக்கெட் ஆட்டம் அன்றும் இன்றும் ஒரு கீர்த்தி மிக்க ஆட்டமாக விளங்கி வருகிறது.

கைப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் போன்று ஒருவரால் உருவாக்கப்படாமல், வளைகோல் பந்தாட்டம், கால்பந்தாட்டம் போன்று வரலாற்றுக்கு அகப்படாத, ஆராய்ச்சிக்கும் அப்பாற்பட்ட நிலையில் கிரிக்கெட் உலாவருகிறது. ஆராய்ச்சி நிபுணர்களும் ஆட்ட அறிஞர்களும் கூட கண்டுபிடிக்கும் தங்கள் முயற்சியில் தோல்வியடைந்து போயிருக்கின்றனர். இந்த கிரிக்கெட் ஆட்டம் எங்கு தோன்றியது, எப்பொழுது தோன்றியது என்பதைக்கூட கண்டுபிடிக்க முடியாமல் சுற்றிவளைத்துச் சொல்கின்ற அளவிலேதான் ஆராய்ச்சியாளர்களை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது.

ஆகவே, கிரிக்கெட் ஆட்டத்தின் தோற்றமானது என்னவென்பது இன்னும் புரியாத புதிராகவே இருக்கின்றது.

ஆனாலும், இங்கே தான் இந்த ஆட்டம் தோன்றியிருக்கக்கூடும் என்ற அபிப்ராயங்களை பல ஆசிரியர்கள் கூறியிருக்கின்றனர். அதற்கும் மறுப்பும் எதிர்ப்பும் என்று பல நிகழ்ச்சிகள் நிகழ்ந்திருக்கின்றன.

## பிரான்சில் பிறந்திருக்கலாம்

ஒரு சில சரித்திர ஆசிரியர்கள் கிரிக்கெட் எனும் இந்த ஆட்டம் கிராகெட்(**Croquet**) என்று அழைக்கப்பட்ட ஆட்டத்திலிருந்து பிறந்தது என்றும், அந்த ஆட்டம் பிரான்சு நாட்டில் மிகவும் பிரபலமாக ஆடப்பட்டு வந்தது என்றும் அபிப்ராயப்படுகின்றார்கள்.

பிரான்சு நாட்டில் ஆடப்பெற்றுவந்த கிராகெட் எனும் ஆட்டம், திருத்தமடையாத ஒருவிதத் தொடக்க நிலையில், இருந்ததாகவும், அதை பிரெஞ்சு மக்கள் மிகவும் பிரியத்துடன் ஆடி மகிழ்ந்திருக்கலாம் என்றும், கிராகெட் ஆட்டத்திலிருந்தே தற்பொழுது அழைக்கப்படும் கிரிக்கெட் ஆட்டம் கிளைவிட்டுப் பிரிவது போல உருமாறி வந்திருக்கலாம் என்றும், இந்த இனிய ஆட்டத்தைக் கண்ட ஆங்கிலேயர்கள் ஆட்டத்தின் அமைப்பையும் கருத்தையும் ஏற்று இங்கிலாந்துக்குக் கொண்டு வந்து, திருந்திய ஆட்டமாகப்பொலிவுபெற அமைத்துக் கொண்டிருக்கலாம் என்றும் சரித்திர ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் அப்பொழுது நெருக்கமான அரசியல் பிணைப்பும், மண உறவும், இருந்து வந்த காரணத்தால், இந்த அடிப்படையில் வைத்து மேற்கூறிய கருத்தைக் கொண்டிருக்கலாம்.

அத்துடன் நில்லாமல், கிரிக்கெட் என்ற சொல்லானது பிரெஞ்சு மொழியில் கிரிக்கே (**Krickkay**) என்று உச்சரிக்கப்படுவதன் திரிபாக சொல்லை மாற்றி, உச்சரித்து

ஏற்றுக்கொண்டிருக்கலாம் என்றும், இதனால், பிரான்சு தேசமே கிரிக்கெட் ஆட்டத்தின் பிறப்பிடம் என்று கருத இடமுண்டு என்று கூறுவோருக்கு, ஆதாரப் பூர்வமாக வேறுபல சான்றுகளைக் காட்டி மறுப்புரை பகர்வோரும் நிறைய பேர்கள் இருக்கின்றார்கள்.

## இங்கிலாந்து என்பாரும் உண்டு

பிரான்சு நாட்டில் கிரிக்கெட் பிறந்தது, பிரபலமாக இருந்தது என்ற அடிப்படை கருத்தையே தகர்ப்பதுபோல, இங்கிலாந்தில் கிரிக்கெட் ஆட்டம் சிறந்ததொரு இடத்தைப் பெற்று, மக்கள் மத்தியிலே பவனிவந்த நெரத்தில், பிரான்சு நாட்டினர் கிரிக்கெட் பற்றியே தெரிந்திருக்கவில்லை என்று கூறி ஒரு சாரார் மறுப்பினைத் தொடங்குகின்றனர்.

கி.பி.1478ம் ஆண்டுவரை, கிராகெட் என்ற சொல் பிரெஞ்சு மொழியில் தோற்றமடையவோ, இடம்பெறவோ இல்லை என்றும், 1478ம் ஆண்டுக்குப் பிறகே இங்கிலாந்தில் ஆடப்பெற்றுவந்த இந்த ஆட்டம் பற்றி விளக்குவதாக இந்த கிராகெட் எனும் சொல் பிரெஞ்சு மொழியில் தோன்றியிருக்க வேண்டும் என்றும் சில சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

மேற்கூறிய கருத்தினை மிகவும் வலியுறுத்திக் கூறுகின்ற சரித்திர ஆசிரியர்கள், இங்கிலாந்தில் எப்பொழுது கிரிக்கெட் ஆட்டம் தோன்றியது. எங்கே தோன்றியது என்பதைத் திட்டவட்டமாகக் குறிப்பிட இயலாது. திண்டாடிப் போகின்றார்கள். ஆனாலும் இலைமறைகாய்களைப் போன்று இங்குமங்குமாக ஒரு சில குறிப்புக்கள் வரலாற்றுப் பின்னணியிலே ஆங்காங்கு மறைந்து கிடப்பதை சுட்டிக் காட்டி, இப்படியும் இருக்கலாம் என்கின்ற தங்களது குறிப்பினையும் கூறிக்கொண்டிருக்கின்றனர்.

## மலர்களும் மாலையும்

கிரிக்கெட் ஆட்டமானது யாராலும் கண்டுபிடிக்கப்படவில்லை. சிறுதுளி பெருவெள்ளமாக உருவெடுப்பது போல, பல மலர்கள் சேர்ந்து மாலையாவதுபோல, பல விளையாட்டு நிகழ்ச்சிகள் ஒன்று சேர்ந்து, இவ்வாறு ஒரு சிறப்பான ஆட்டமாக உருவெடுத்து இருக்கிறது என்பதுதான் கிரிக்கெட் ஆட்டத்தின் பிறப்பினைப் பற்றிக் கூறும் விளக்கமாகும். மலை உச்சியிலிருந்து கீழே உருளத் தொடங்கிடும் ஒரு சிறு பனிக்கட்டி, கீழே உருண்டு வரும் பொழுதே பனித்துகள்களின் மீது படிந்து படிந்து தன்னைப் பெரிதாக்கிக் கொண்டு, கீழே விழும் பொழுது பெரிய பனிக்குன்றாக விழும் என்று காவியம் ஒன்று உருவாவதை விளக்குவதற்கு உதாரணமாகக் கூறுவார்கள். சிறுகதையாகத் தோன்றிய ஒரு கதை, பலரது வாயில் புகுந்து, கற்பனையில் மிதந்து விளக்கமாக வெளியேறும்பொழுது, நிகழ்ச்சிகளில் பெருகி பெருங்கதையாக, காவியமாக மாறும் என்பது போலவே, கிரிக்கெட் ஆட்டமும் சிறு ஆட்டமாக அதுவும் பொழுது போக்கு ஆட்டமாகத் தோன்றி வளர்ந்து வளர்ந்து, இன்று உலகப் புகழ்பெற்ற ஆட்டமாக விளங்கியிருக்கிறது என்றும் கூறுவார்கள்.

அப்படியானால் சிறுதுளி போல, நறுமலர்போல, உருளத் தொடங்கும் சிறு பனிகட்டி போல, மூலம் ஒன்று கிரிக்கெட் ஆட்டத்திற்கும் இருந்திருக்க வேண்டும். அந்த மூலம் எதுவாக இருந்திருக்க வேண்டும் என்பதைக் கண்டுபிடிக்கவும் பல ஆராய்ச்சியாளர்கள் முயன்றிருக்கிறார்கள்.

## மூலமும் காலமும்

கிளப் பால் (Club Ball) என்பதாக ஒரு ஆட்டம் இங்கிலாந்தில் முன்னாளில் ஆடப்பட்ட ஒரு ஆட்டமாகும்.

பிரபலமாக ஆடப்பட்டு வந்த கிளப்பால் ஆட்டத்திலிருந்து கிளைவிட்டு பிரிந்து, சிறப்பாகத் தோன்றிய ஆட்டமே கிரிக்கெட் என்பதாக ஸ்ரட் (Srutt) என்பவர் குறிப்பிடுவதாக ஆர்கி ரிச்சட்சன் (H. Arche Richardson) எடுத்துக்காட்டுகிறார். ஆனாலும், கிளப் பால் எனும் ஆட்டம் பற்றிய குறிப்பும், எந்த விதமான விவரமும் இன்னும் தெரியாமலே இருக்கிறது என்பதால், இதைப் பற்றி ஒரு முடிவெடுக்காத நிலையில் நின்று போகவேண்டியிருக்கிறது.

அடுத்ததாக, ஸ்காட்லாந்தில் ஆடப்பட்டுவந்த கேட் அண்ட் டாக் (Cat and Doug) என்ற ஆட்டத்தின் அடிப்படையில் தான் கிரிக்கெட்டின் ஆரம்பகாலம் அமைந்தது என்பாரும் உண்டு. ஆனால், கேட் அன்ட் டாக் ஆட்டமானது டிப்கேட் (Tip Cat) என்ற ஆட்டத்தின் வழி வந்தது என்றும் கூறப்படுகிறது. அந்த டிப்கேட் ஆட்டமானது 1688ம் ஆண்டுக்குப் பிறகே நன்கு தெரிய வந்தது என்றும், அதற்கு முன்னரே, கிரிக்கெட் ஆட்டம் இங்கிலாந்து நாட்டில் குடியிருந்த மக்களால் ஆடப்பட்டு வந்திருந்தது. அதற்கான பெயரும் இருந்தது என்று கூறி, கேட் அண்ட் டாக் ஆட்டத்தின் கிளை ஆட்டம் அல்ல இது, என்று மறுதலிப்பாரும் மறுந்துரைப்பாரும் உண்டு.

மூன்றாவதாக, கிரிக்கெட் ஆட்டம் தோன்றுவதற்கும், ஆட்ட அமைப்பு உருவாவதற்கும் ஸ்டூல்பால் (Stool Ball) தான் காரணமாக இருந்தது என்றும் கூறுகின்ற ஆசிரியர்களும் உண்டு. ஆனால், ஸ்டூல்பால் ஆட்டமானது கிரிக்கெட்டுக்குப் பின்னால்தான் தோற்றம் கொண்டது என்றும், கிராமப்புற சிறுவர்கள் ஆடி வந்த ஒருவாறான ஆட்டத்தை ஆடமுடியாத பெண்களுக்காக, மென்மையான வடிவில் அமைக்கப்பட்டதே ஸ்டூல்பால் என்றும், ஆகவே, கிரிக்கெட்டிற்குப் பின்னரேதான் ஸ்டூல்பால் தோன்றியது என்றும் கூறி, எதிர்ப்பு தெரிவிக்கின்றார்கள் சில ஆசிரியர்கள்.

நான்காவதாக, ஹேண்ட் இன் அல்லது ஹேண்ட் அவுட் (Handyn or Handoute) என்ற ஆட்டத்தின் மறுவடிவுதான் கிரிக்கெட் என்பதாகவும் சிலர் கூறுவார்கள்.

ஆனால் இங்கிலாந்தில் லண்டன் நகரத்தில் உள்ள அரசர்கள் நூலகத்தில் (Kings Library) இருந்த படங்களுள் ஒன்றினைக் காட்டிக் குறிப்பிட்டு, கிரிக்கெட் ஆட்டம் பற்றி கி.பி. 1344ம் ஆண்டே எழுதப் பெற்றிருக்கிறது என்று சான்று காட்டுவார்கள். அந்தத்திரை ஓவியத்தில், ஒருவர் பந்தை எறிபவராக (Bowler) நிற்க, இன்னொரு ஆட்டக்காரர் பந்தாடும் மட்டையை (Bat) கையில் வைத்துக்கொண்டு, எறிகின்ற பந்தை அடித்தாடத் தயாராக நிற்பது, பந்தாடும் மட்டையை கீழே தரையில் ஊன்றி, இப்பொழுது ஆட்டக்காரர்கள் நிற்பது போன்ற நிலையிலே நிற்பதால், அப்பொழுதே ஆட்டம் மக்கள் மத்தியில் பிரபலமாக இருந்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்துவதாகவும் அமைந்திருக்கிறது என்பார்கள்.

அதனால் 1344ம் ஆண்டில் வரையப்பெற்ற திரை ஓவியத்தைக் கிரிக்கெட் ஆட்டம் பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே இங்கிலாந்தில் சிறப்பான வளர்ச்சியுற்றிருக்க வேண்டும் என்றும், அப்படி பார்த்தால், கிரிக்கெட் ஆட்டம் ஏறத்தாழ 12 அல்லது 13வது நூற்றாண்டிலே தோன்றியிருக்க வேண்டும் என்றும் அபிப்பிராயப்படுகின்றார்கள்.

## சட்டம் கண்ட ஆட்டம்

இவ்வாறு பெரும் வளர்ச்சியுற்றதினாலோ என்னவோ, இந்த ஆட்டம் 1365ம் ஆண்டு அரசாள்வோருக்கு அதிருப்தியை உண்டுபண்ணும் வகையில் ஒரு பெரிய மாற்றத்தையே ஏற்படுத்தி இருந்தது. வில்வித்தைப் பயிற்சியில் மக்கள் விருப்பமுடன் ஈடுபடாமல் ஹேண்ட் இன் ஹேண்ட் அவுட்

ஆட்டத்திலும், கிரிக்கெட் ஆட்டத்திலும், அதிகமாக ஈடுபடுவதால், வில்லாற்றலில் மக்கள் தேர்ச்சி பெறாமல் போகின்றனர். ஆகவே நாட்டின் பாதுகாப்புக்கு உரிய கலையான வில் பயிற்சியைக் கற்கும் பொருட்டும், அதனைக் காக்கும் பொருட்டும், மேலே குறிப்பிட்ட இரண்டு விளையாட்டுக்களையும் மக்களை ஆடவிடாமல், தடைச்சட்டத்தை நான்காம் எட்வர்ட் என்பவர் இயற்றித் தடை செய்தார்.

மக்கள் இந்த ஆட்டங்களை ஆடக்கூடாது என்று சட்டம் போட்டு தடைவிதித்ததல்லாமல், மீறியவர்களுக்குக் கடுமையான தண்டனை என்றும் குறிப்பிட்டிருந்தார். தடைச்சட்டத்தை மீறி விளையாடும் ஆட்டக்காரர்களுக்கு 50 ஷில்லிங் அபராதத்துடன், இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் நில்லாமல், விளையாடுவதற்கு இடம் தருகின்ற (மைதான) உரிமையாளருக்கு 100 ஷில்லிங் அபராதமும், மூன்றாண்டுகள் சிறைத்தண்டனையும் கொடுக்கப்படும் என்றால், யார்தான் இடம் தருவார்? எவர் வந்து தடையை மீறி விளையாடுவார்? இவ்வாறாக, 185 ஆண்டுகள் தடை போட்ட சட்டத்தின் கீழ் அடையாளம் தெரியாமல் இந்த இரண்டு ஆட்டங்களும் முடங்கிக் கிடந்தன. அடங்கிக் கிடந்தன.

ஆயுள் காலம் வரை தடைபோட்டவாறே ஆட்சியை முடித்துக் கொண்ட நான்காம் எட்வர்ட் மன்னருக்குப் பிறகு, தொடர்ந்து அரியணை ஏறியவர்கள் அனைவரும் இவ்வாறே தடை போட்டனர் என்பதால், ஹேண்ட் இன் ஹேண்ட அவுட் ஆட்டத்துடன் கிரிக்கெட்டும் இணையாகவே இருந்தது என்பதும், அதனால் கிரிக்கெட் ஆட்டத்தின் முன்னோடி என்று இதனைக் கூற முடியாது என்றும் ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

ஏறத்தாழ 1300ம் ஆண்டில் முதலாம் எட்வர்ட் மன்னர் **(Kind Edward)** அரண்மனை செலவு கணக்குப்பட்டியலைப் பார்க்கும் பொழுது, வேல்ஸ் இளவரசன் அதாவது எட்வர்ட்

இளவரசன் பற்றிய செலவுக்கணக்கு வருகிறது. அதன் வழி ஆராய்ந்து பார்த்தால், நியுவெண்டன், கெண்ட் மாகாண சுற்றுப்புறங்களில் கிரிக்கெட் ஆட்டம் பரவலாக விளையாடப்பட்டு வந்தது என்பதற்குரிய ஆதாரமாக அக்குறிப்பு அமைந்திருக்கிறது.

அப்பொழுது பழக்கத்தில் இருந்த வந்த பேச்சுவழக்கான இலத்தின் மொழியில் எழுதிய குறிப்பின்படி, குறிப்பிட்ட ஒரு தொகையை இளவரசனுக்காக மற்றவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பதும், இளவரசனின் இறகானது (Feather) சரே பகுதி (Surrey) அடையாளச் சின்னமாகவும் பயன்படுத்தப்பட்டு வந்தது என்றும் அறிய இடம் தருகிறது. ஆகவே, 1300ம் ஆண்டு காலத்திலேயே, கிரிக்கெட் சிறந்த வளர்ச்சி பெற்றிருக்கிறது என்று நம்மால் உணர முடிகின்றது. என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள்.

மேலும் ஒரு சான்றினைக் கூறி, கிரிக்கெட் ஆட்டம் சிறு பையன்களால் அதாவது கில்ட்போர்டில் (GuildFort) இருந்த இலவசப்பள்ளியில் பயின்ற பையன்கள் ஆடியதாகவும், ஆண்டு எறத்தாழ 1550ம் ஆண்டு என்றும் கூறுகின்றார். கில்போர்டு என்பவர், 1550 ம் ஆண்டு எழுதிய "கில்போர்டு வரலாறு" என்பதில், 'கிரிக்கெட் ஆட்டம்' மீண்டும் பொது மக்களின் பொழுது போக்கு ஆட்டமாக மாறியிருக்கிறது! என்பதையும் குறித்திருக்கின்றார். அவர் கிரிக்கெட் ஆட்டம் என்ற பெயரை முதன் முதலாகக் குறிப்பிடுவது தான் மிகவும் முக்கியம் என்று பெயர் விளக்கத்திற்கும் சான்று காட்டுவார்கள்.

அதற்கு மேலும் ஒரு படி மேலே சென்று, இன்னும் ஒரு சான்றினையும் காட்டுவார்கள். ஜான் டெர்ரிக் என்பவர் தரிசு நிலம் ஒன்றைப் பற்றிய வழக்குக்காக நீதிபதி முன்னே வாதாடும் பொழுது, தன்னைப் பற்றிய உதாரணம் ஒன்றைக் கூறி வாதிட்டார். வாதாடிய ஆண்டு 1493ம் ஆண்டு. நான்

பள்ளியில் மாணவனாக இருந்த பொழுது, என் சகமாணவர்களுடன் அந்த நிலத்தரையின் மீது, கிரிக்கெட்டும் இன்னும் மற்ற விளையாட்டுக்களையும் விளையாடி இருக்கிறேன். என்று குறிப்பிடுகின்றார். ஆகவே, இங்கிலாந்தில் கிரிக்கெட் தோன்றியது. அங்கே தான் இந்த பெயரும் இடம் பெற்றது என்றும் கூறவே இந்த சான்றுகளைக் காட்டியிருக்கிறார்கள்.

இனி, மெரிலிபோன் கிரிக்கெட் கழகத்தின் முன்னாள் செயலராக விளங்கிய ரெயிட் கெர் (Rait Kerr) என்பவர் எழுதிய குறிப்பின்படியும், இங்கிலாந்தில் தான் கிரிக்கெட் ஆட்டம் தோன்றியது, வளர்ந்தது. பெரும் ஆட்டமாகப் பெருகி பரவியது என்ற குறிப்புக்களையும் வரலாறு சுட்டிக்காட்டுகிறது.

## கிராமப்புற ஆட்டம்

கிரிக்கெட்டின் வரலாறு, ஆராய்ச்சியாளர்கள் குறிப்புக்களுக்கு எட்டாத ஒன்றாகும். 1744ம் ஆண்டில் தான் ஒரு குறிப்பிட்ட முறையில் ஒரு சில விதிமுறைகள் உருவாயின. அதற்கு முந்தைய காலங்களில், கிரிக்கெட் எந்த முறையில், எந்தவிதமான விதிகளுடன் எப்படி ஆடப்பெற்றது என்பதே தெரியாத இருண்டகாலமாக இருந்தது. ஆனால் குறிப்புக்கள் எல்லாம் அச்சுப்பிரதிகள், எழுத்தோவியங்கள் இவற்றின் அடிப்படையில் கற்பனை சேர்ந்த கலவையாகவே வெளிவந்தன. ஆனால், ஒன்று மட்டும் உண்மையாக உலவியது. அது, கிராமப்புறத்தில்தான், கிரிக்கெட் ஆட்டம் தோன்றியது என்பது தான்.

அது, இங்கிலாந்து நாட்டில் கென்ட் மாகாணத்தில் உள்ள வீல்டு கிராமம்,மற்றும் சரே (Surrey) சசக்ஸ் (Sussex) போன்ற பகுதிகளில், கிராமப்புற மக்களுக்கு ஒரு வகை பொழுது போக்கு ஆட்டமாகத் தொடங்கியது என்கிற கருத்தை, எல்லா ஆராய்ச்சியாளர்களுமே மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டிருக்கின்றனர்.

கி.பி.1550ம் ஆண்டுக்கு முன்னர், அந்தப் பகுதிகளின் சிறுவர்கள் ஓடியும், ஆடியும், ஆடுவதற்கு வசதியாகக் கிடைத்த இடங்களில் எல்லாம் ஆடிமகிழ்ந்திருந்தார்கள் என்று ஜான்டெரிக் என்பவர் எழுதியிருக்கின்றார்.

ஒரு சிலர் இக்கருத்தை மறுத்துரைத்தாலும், ஒவ்வொரு மாகாணத்தில் வசித்தவர்களும், இந்த கிரிக்கெட் விளையாட்டை அவரவர்க்கு ஏற்ற வகையில் விதிமுறைகளை அமைத்துக்கொண்டே விளையாடி வந்தனர். ஒருவர் பந்தை எறிவதும் மற்றொருவர் பந்தை மட்டையைக் கொண்டு அடித்து ஓட்டுவது என்பதும் தான் ஆட்டத்தின் அடிப்படைத் தத்துவமாக இருந்ததாம். அவர்கள் இந்தக் கருவை மையமாக வைத்து, வேண்டியவர்களுக்கு வேண்டிய வகையில் விதிகளை அமைத்துக் கொண்டு விளையாடி மகிழ்ந்தனர் என்பதற்கு எந்தவிதமான குழப்பமும் யாரிடையிலும் எழவே இல்லை.

## பந்தயமும் பணக்காரர்களும்

பொழுது போக்குக்காக விளையாடிய கிராமத்தார்கள், தங்களுக்கு இடையே ஆட்டம் விறுவிறுப்பாகவும் உற்சாகமாகவும் அமைய வேண்டும் என்ற ஆசையில், பந்தயம் கட்டிக் கொண்டும் விளையாடி மகிழ்ந்திருக்கின்றனர். கிராமத்தில் உள்ளவர்களுக்குப் பணவசதி ஏது? அதனால் குறிப்பிடத் தக்கப் பந்தயத் தொகை அதிகமாக எதுவும் இல்லை. அவர்களுக்கு என்ன கிடைக்குமோ, கையில் இருக்குமோ அதையே பணயமாகக் கட்டி ஆடினார்கள்.

அவர்கள் கட்டிக்கொண்டு ஆடிய பந்தயப் பொருட்களின் பட்டியலைப் பாருங்கள். வெல்லும் ஆட்டக்காரர்களுக்கு அரைகிரௌன் நாணயம். ஆனால் பரிசுப்பொருட்கள் தான் அதிக அளவில் இருந்தன. அதுவும் ஆட்டக்காரர்களை மதித்து கௌரவிப்பதற்காகவே!

கரடித்தோல் கையுறைகள் (Gloves) ; தங்கம் அல்லது வெள்ளி சரிகையிட்ட குல்லாய்கள்; சிறிய கால்சட்டைகள்; அல்லது கொடுக்கப்பட்ட கையில்லாத மார்புச் சட்டைகள் (Waistcoat) இவையெல்லாம் பரிசாகப் பணம் வைத்து ஆடியவை. எல்லாமே விளையாட்டுக்குத் தேவையீான பொருட்களே.

ஆனால், விளையாட்டையே பந்தயப் பொருளாகவும், விளையாட்டு மைதானத்தையே சூதாட்டக் களமாகவும் மாற்றிய பெருமையும் திறமையும் அந்தப் பகுதியில் உள்ள செல்வாக்கு மிக்க செல்வந்தர்களுக்கே உரிமையாக அமைந்திருந்தது. ஆமாம்! அந்த சூதாடும் பழக்கம் அவர்களது பரம்பரை உரிமையாக, பாரம்பரியச் சொத்தாக அமைந்திருந்தது போல, அவர்கள் எப்பொழுதும் பந்தயம் கட்டியே பழகிப்போய், பைத்தியமாகத் திரிந்த நாட்களில்தான், கிரிக்கெட் அவர்கள் கையில் சிக்கிக்கொண்டது.

செல்வந்தர்கள், பிரபுக்களின் குடியில் பிறந்தவர்கள், தங்களது பொழுது போக்குக்காக ஆடி வந்த சூதாட்டங்களில் பிடிப்பிழந்து அலுத்துப் போய் இருந்த வேளையில், மாற்றாக ஒரு விளையாட்டு வேண்டுமென்று கோயில் மாடாகத் திரிந்த போது தான் கிராமத்து மக்கள் ஆடி மகிழ்ந்த கிரிக்கெட் ஆட்டம் அவர்கள் கண்களிலே பட்டது. கருத்தினைத் தொட்டது. பிறகு, விட்டோமா பார் என்று முற்றுகையிட்டது போதாதென்று, விடாப் பிடியாகத் தங்களுடன் கடத்திக் கொண்டே போய்விட்டார்கள்.

ஆமாம்! வரலாறு அப்படித்தான் விரித்துரைக்கின்றது. கிரிக்கெட் ஆட்டம் கிளர்ச்சியூட்டும் ஆட்டமாக அவர்களுக்குத் தெரிந்தது. நெடுநேரம் ஆடுவதால், நேரம் போவதும் எளிதாக, இனிதாக இருந்தது. ஆகவே, பந்தயம் கட்டி ஆடுவதற்கும், பேரின்பமாகப் பொழுதைப் போக்குவதற்கும் கிரிக்கெட் அவர்களுக்கு வசதியாகவும் வாய்ப்பாகவும்

அமைந்துவிட்டிருந்ததால், முற்றிலுமாக, கிரிக்கெட்டைப் பயன்படுத்திக் கொள்ள அவர்கள் முற்பட்டார்கள்.

## பட்டணத்திற்குப் பயணம்

பந்தயம் கட்டிக்கொண்டு, பார்த்து ரசித்துக் கொண்டு, பிரபுக் குடியினரால், பணக்கார இளைஞர்களால், எத்தனை நாள் வீல்டு கிராமத்திலே இருக்கமுடியும்? அவர்கள் அடிக்கடி இலண்டன் மாநகரம் போய் வந்ததுபோல, இந்த விளையாட்டையும் எடுத்துக்கொண்டு சென்றனர். பட்டிக்காட்டு பொழுது போக்கு ஆட்டம் பட்டணம் சென்று, பணக்காரர்களின் பாசறையிலே படம் காட்டத் தொடங்கியது.

பட்டணம் வந்த விளையாட்டு பணக்காரர்களுடனே தங்கி விட்டது. பரந்து விரிந்த இடம் விளையாடுவதற்கு பட்டிக்காட்டுப் பகுதிகளில் கிடைத்தது இயற்கைதான்.

கிராமத்தில் தான் இந்த விளையாட்டு ஆடப் பெற்றது. அதுபோல, இங்கே இலண்டன் மாநகரத்தில் எப்படி கிடைக்கும்? இங்கே பின்ஸ்பரி என்ற இடம். அதில் ஆர்டிலரி மைதானம் (Artillery Ground). செங்கற்களால் எழுப்பப்பட்ட உயர்ந்த சுவர்களால் சுற்றி வளைக்கப்பட்ட மைதானமாக அந்த இடம் இருந்தது. ஆடுகளத்தின் பெருமையை ஹோவ் (Howe) எப்படி எழுதியிருக்கிறார் பாருங்கள். "இது ஆர்டிலரி கம்பெனியாருக்கு உரிமையான இடமாகும். இந்த மைதானமும் இதனை அடுத்து இருக்கின்ற மைதானமும் பார்ப்பதற்கு அருவெறுப்பு நிறைந்த பகுதிகளாகும். சுற்றிலும் அசிங்கமானவைகள் சூழ்ந்து கிடக்க, எப்பொழுதும் துர்நாற்றம் உடையதாக விளங்கும். இதன் வழியே செல்லும் பயணிகளுக்கும் அதன் அருகாமையில் வாழ்கின்ற மக்களுக்கும் தொற்று நோயைப் பரப்புவதற்குரிய தன்மையில்,

துன்பம் தரும் நிலையில் இருப்பதால், உடனே இந்த மைதானத்துக் கதவுகளை மூடிவைத்துவிடுமாறு ஆணைபிறப்பித்தும் விட்டார்கள்' என்றால் பாருங்களேன்.

அசிங்கமான இடம், நாற்றம் வீசும் இடம், அதற்குள்ளே யாரையும் உள்ளே அனுமதிக்கலாகாது என்று ஆணை பிறப்பித்து விட்டால், அதற்காக கலங்கியா விடுவார்கள்? அதே இடத்தில் ஆட்டம் நடக்கத்தான் நடந்தது. அதிகாரத்தை மீறி, காவல்காரனையும் மீறி ஆட்டம் தொடர்ந்தது.

ஜார்ஜ் ஸ்மித் என்ற மைதான நிர்வாகியை மடக்கிப் பிடித்துத் தங்கள் வசம் வைத்துக் கொண்டார்கள் விவேகமுள்ள ஆட்டக்காரர்கள். எப்படி? அவன் விரும்பிய வண்ணம், இரண்டு பென்ஸ் நாணயம் முதல் 6 பென்ஸ் நாணயம் வரை (லஞ்சமாக) கொடுத்துவிட்டு, அந்த மைதானத்திற்குள் அவர்கள் ஆட்டத்தைத்தொடங்கினர். தொடர்ந்தனர்.

இந்த ஆடுகள மைதானமே பெரிய பெரிய போட்டிகளின் நிலைக்களமாக, விளைநிலமாக விளங்கியது. அங்கே ஆயிரக்கணக்கான ரூபாய்களை பார்வையாளர்கள், பணக்காரர்கள் பந்தயம் கட்டிக்கொள்ள, அதற்கான போட்டிகள் நடைபெற்றன. பணம் கட்டி சூதாட்டம் போல ஆடும் பொழுது, பிரச்சினைகள் எழாமலா இருக்கும்?

## பிரச்சனைகளில் பிறந்த விதிகள்

அவ்வாறு பூதாகரமாக பிரச்சினைகள் தோன்றும் பொழுது அவற்றிற்கு எப்படி பொருத்தமாக முடிவுகள் எடுப்பது என்பதென்று பல சமயங்களில் அவர்களுக்கிடையே தீராத சிக்கல்களாக முளைத்தன. அதனைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு, விளையாடுகின்ற இருகுழுவினரும் தங்களுக்குள்ளே இணங்கிப் போகும் அளவுக்கு இணக்கமான விதிமுறைகளை முதலில் வகுத்துக்கொண்டனர். அதாவது ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

அந்த ஒப்பந்த விதிகள் தாம் (Articles of Agreement) இந்த ஆட்டத்தை குழப்பம் நேராமல் ஆட்கொண்டு காத்தருளின.

பக்லி (Buckley) என்பவர் இதுபோன்று பல்வேறு இடங்களில் போட்டியிட்ட குழுக்கள் ஏற்றுக்கொண்ட இணக்கமான ஒப்பந்த விதிமுறைகளையெல்லாம் தேடி ஆராய்ந்து தொகுத்து, ஒரு முடிவினைக் கூறியிருக்கிறார். அதாவது, 'அவ்வாறு தோன்றிய ஒப்பந்த விதி முறைக்ள எல்லாம் பந்தயத்திற்காகக் கட்டியிருந்த பணத்தையே அடிப்படையாகக்கொண்டு அமைந்திருந்தனவே தவிர, ஆட்டம் சீராக அமையவேண்டும், சிறப்பாக மெருகேற வேண்டும் என்ற எண்ணத்தில் இல்லாமல், எப்பொழுதாவது அபூர்வமாகவே (விதி முறைகளில்) குறிப்பிட்டிருந்தன.'

அதிலும், எந்த இடத்தில் ஆட்டம் நடைபெறுகின்றதோ, அந்த இடத்தில் ஏற்கனவே நடைமுறையில் இருந்த ஒப்பந்த விதிமுறைகளையும் ஏற்று, ஒரு மாதிரியாக சமாதானப்படுத்துவது போன்றே மாற்றங்களை உண்டுபண்ணி, பழமை விதியினையும் புதிய முறையையும் ஒருமைப்படுத்தும் தன்மையிலேயே விதிகளை அமைத்துக்கொண்டிருந்தனர்.

அவ்வாறு விதிகள் தோன்றியதன் காரணமாகவே, பிற்காலத்தில் ஆட்டத்திற்குரிய செம்மையான விதிகளை உண்டுபண்ணக்கூடிய வழியினை உருவாக்கிடும் தன்மையையும் எளிதாக ஏற்படுத்தின என்றே ஆராய்ச்சி அறிஞர்கள் கருதுகின்றார்கள்.

கிரிக்கெட் ஆட்டம் பற்றி பின்னர் பல நூல்கள் வெளிவந்தன. அவற்றில் எட்டுக்கும் மேற்பட்ட கிரிக்கெட் நூல்களையும் அந்த ஆசிரியர்களின் கருத்துக் குழப்பங்களையும் தடுமாற்றங்களையும் உணர்ந்து ஆராய்ந்த

R.S. ரெய்ட்கொ என்பவர். தன்னால் முடிந்த அளவுக்கு ஒப்பந்த விதிமுறைகளைப் பற்றி ஓர் உண்மை முடிவினை மேற்கொண்டு ஒரு நூலையும் எழுதினார். அதில் கூறியிருப்பதாவது.

1. பந்தயம் கட்டிக்கொண்டு ஆடுகின்ற ஆட்டங்களில் அச்சான விதிமுறைகள் ஏதும் இல்லாமல் இருந்தாலும், பொதுவாக பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த விதிமுறைகள் எல்லாம், பலரால் சில சமயங்களில் பின்பற்றப்படாமல் போனாலும், அவையும் சில மாற்றங்களுடன் இடங்களுக்கு ஏற்ப மாற்றப்பட்டன. அவர்கள் விருப்பம் போல் விதிகளை ஏற்று மாற்றி ஆடினர்.

2. இந்த ஆர்டிலரி மைதானத்தில் ஆட்டம் நடைபெற்றபொழுது, கையால் எழுதித் தயாரிக்கப்பட்ட விதிமுறைகள் தாம் பெரிய பெரிய போட்டி ஆட்டங்கள் நடைபெற்ற போது பின்பற்றப்பட்டன. அதுவும் இலண்டன் மாநகருக்கு ஆட்டம் வந்தபோது, முக்கியமான விதிமுறைகள் எல்லாம், ஆர்டிலரி மைதான ஆட்டத்தில் பின்பற்றப்பட்டு வந்தவையே பெரும்பாலானவையாக அமைந்திருந்தன.

3. கிரிக்கெட் ஆட்டத்தின் மறுமலர்ச்சிக்குக் காரணமாக 1744ம் ஆண்டு ஏற்பட்ட விதிமுறைகளையே குறிப்பிடுவார்கள். அவ்வாறு ஏற்பட்ட விதிகள், 1700க்கும் 1755க்கும் இடையே பின்பற்றப்பட்ட பழைய விதிகளின் பிரதியே தவிர வேறல்ல.

ஆனால், ஹம்ப்ரோ பயன்படும் கைக்குட்டைகளில் எழுதப்பட்ட விதிகளே, முதன்முறையாக கிரிக்கெட் விதிகள் அச்சில் ஏறியவை என்றும், அதன்படியே 1752ல் வந்தது என்றும் கூறுகின்றார்கள். எனவே, ஒப்பந்த விதிமுறைகளே உண்மையான விதிமுறைகளுக்கு முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் அமைந்துவிட்டன.

## ஆடினால் தண்டனை

பந்தயம் கட்டிக்கொண்டு சூதாட்டம் போல கிரிக்கெட் மைதானத்தில் ஆடப்பட்டு வந்த ஆட்டம், ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு மேலேயும் தொடர்ந்திருக்கிறது என்பார்கள்.

பதினாறாம் நூற்றாண்டின், காலகட்டத்தில் கிரிக்கெட் வெகுவேகமாக வளர்ச்சி பெறவில்லை. மாறாக பலத்த எதிர்ப்புகளுக்கு இடையிலே முன்னேற்ற நடைபோட்டது. கடுமையான தண்டனைகளையும் ஆட்டக்காரர்கள் ஏற்கக்கூடிய சூழ்நிலைகளில் வளர்ந்தன. 1620ம் ஆண்டு அயர்லாந்தில் ஆலிவர் கிராம்வெல் என்னும் வீரர், பழி சுமத்தப்பட்டு கிரிக்கெட் ஆட்டத்தை ஆடினார். ஆட்டத்தில் பங்கு பெற்றார் என்பதற்காக, பலரறிய பழித்துக் கூறப்படும் அவல நிலைக்கும் ஆளானார். அயர்லாந்து முழுவதும் கிரிக்கெட் பந்துகளையும், விக்கெட் குறிக்கம்புகளையும் எரித்துவிட வேண்டும் என்று சட்டம் போடப்பட்டது.

1623ம் ஆண்டு சாக்ஸ் மாகாண கோயிலின் திடலில் கிரிக்கெட் ஆடிய 6 பேர்கள் கடுமையாக தண்டிக்கப்பட்டார்கள்.

மெய்ட்ஸ்டோன் என்ற நகரத்தில், பல இளைஞர்கள் கிரிக்கெட் ஆட்டத்தை ஞாயிற்றுக்கிழமைகளில் விளையாடினார்கள் என்பதால், அந்த நகரத்தை தூய்மையற்ற நகரம் என்றும் இழித்துரைத்தார்கள். இது 1030ம் ஆண்டின் நிலை.

இப்படியாக எதிர்ப்பு நிலை, அடக்கு முறை எழுந்து வந்தபோதிலும் கிரிக்கெட் ஆட்டம் வளர்ந்து கொண்டே தான் வந்தது.

## மகிமை பெற்ற ஆட்டம்

மக்கள் மனதிலே கிரிக்கெட் பற்றிய பெருமையான எண்ணமே நின்று நிலைத்தோங்கியது, இங்கிலாந்து நாட்டின்

விதிகளுக்கு மேலாக கிரிக்கெட் ஆட்டத்தை விளையாடியவர்கள், வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டவர்கள் எண்ணினார்கள், மதித்தார்கள். ஆகவே சூதாடுவதுபோல பணம் பந்தயங்கட்டுவதையம், இந்த சட்டத்திற்கு மாறானதுதான் என்பதையும் தவிர்த்துவிட்டு, கிரிக்கெட் ஆட்டத்தின் லயிப்பிலும் ரசிப்பிலும் முன்னோக்கிச் சென்றனர்.

ஆட்டத்திற்கிடையே பந்தயத்தில் தோற்றவர்கள், பணத்தை இழந்தவர்கள் பலர் சேர்ந்து கலவரம் செய்கின்ற கூட்டத்தைப்பற்றி முடிவெடுக்க முனைந்த நீதிபதிகள்கூட அவர்களிடையே அலசி ஆராய்ந்து, பெருந்தன்மையின் பெயரில் விட்டுவிடுவதாகவே முடிவு செய்தனர் என்றால், ஆட்டத்தின் மேன்மையான வளர்ச்சிக்கு வேறு ஆதாரம் என்னதான் வேண்டும்.?

அரச குடும்பத்தினரும் கிரிக்கெட் ஆட்டத்தில் மனம் ஈடுபட்டு இலயித்து ஆடியதுடன், அரிய பொழுதுபோக்கு ஆட்டமாகவும் இதனை ஏற்றுக்கொண்டிருந்தனர்.

செயிண்ட் அல்பன்ஸ் என்னும் இடத்தில் 1666ம் ஆண்டு நடந்த நிகழ்ச்சியானது, அரசவையினரும் அரசரும் கிரிக்கெட் ஆட்டத்தில் மெய்மறந்து ஈடுபட்டிருந்ததற்கு மெய்யான சான்றாக விளங்குகிறது. இலண்டனிலே பெருத்த தீவிபத்தொன்று நேர்ந்தபொழுது, இரண்டாம் சார்லஸ் மன்னரும், அவரது குடும்பமும் மற்றும் அரசவையாளரும் தப்புவதற்காக இலண்டனைவிட்டுக் கட்டாயமாக வெளியேறும் நிலைக்கு ஆளானார்கள். அப்பொழுது அவர்கள் செயிண்ட் அல்பன்ஸ் (St. ALBANS) என்ற இடத்தில் வந்து தங்க நேர்ந்தது. அங்கு வாழ்ந்த மக்கள் அவர்களுக்கு கிரிக்கெட் ஆட்டத்தை ஆடிக்காட்ட, அவர்கள் தங்கள் துயர நிலையையும் மறந்து சந்தோஷம், அடைந்த தாகவும் வரலாற்றுக் குறிப்பொன்று கூறுகிறது.

அதையும்விட, இன்னொரு நிகழ்ச்சியையும் அறிந்து கொண்டோமானால், அரசர்கள் எந்த அளவுக்குக் கிரிக்கெட் ஆட்டத்தில் ஈடுபாடு காட்டினார்கள் என்பதும் நமக்கு நன்கு புரியும். வேல்ஸ் இளவரசன் என்று அழைக்கப்பட்ட பிரடரிக் என்பவர், கிரிக்கெட் ஆட்டத்தில் மிகவும் ஈடுபாடு உள்ளவர். எந்த கிரிக்கெட் போட்டி நடந்தாலும், அதில் போய் பங்கு பெறும் ஆர்வம் நிறைந்தவர். 1750ம் ஆண்டு ஒரு முறை அவர் பந்தாடிக்கொண்டிருந்தபோது, காலில் கிரிக்கெட் பந்து தாக்கவே, அதுவே பின்னாட்களில் அவரது மரணத்திற்கு மூல காரணமாக அமைந்தது என்றும் கூறுவார்கள்.

அரசனின் மரணத்திற்கு கிரிக்கெட் பந்தடிதான் காரணம் என்று பலர் பலவாறு கூறினாலும், அவரது அரசு வாரிசுகள் அதனைப் பொருட்படுத்தவே இல்லையாம்.

அவரது மகன்கள் மூன்றாம் ஜார்ஜ், நான்காம் ஜார்ஜ், ஆகியவர்கள், தந்தையின் கிரிக்கெட் ஆர்வத்திற்கும் கொஞ்சமும் குறையாதவர்களாயும், சிறந்த ஆட்டக்காரர்களாகவும் விளங்கி இருக்கிறார்கள்.

மன்னர் எவ்வழியோ மக்கள் அவ்வழி என்பார்களே! அதுபோல, அரச பரம்பரையும், பிரபுக்கள் குடும்பமும், பணக்கார வம்சத்தினரும் கிரிக்கெட்டைப் போற்றும் பொழுது, கிரிக்கெட் எப்படி வளராமல் இருக்கும்.!

## பரபரப்பான பந்தயங்கள்

பந்தயம் கட்டியல்லவா ஆட்டத்தைத் தொடங்கினார்கள்! அப்படி என்றால் ஆட்டம் எப்படி நடைபெறாமல் போகும்? பந்தயப் பணம் குறைந்தது ஒரு ஆட்டத்திற்கு10,000 ரூபாயிலிருந்து 20,000 ரூபாய் வரை வைத்து ஆடியிருக்கிறார்கள். 1750ம் ஆண்டிலிருந்து 1790ம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில், பந்தயத்தின் தொகை

40,000, ரூபாயிலிருந்து ரூபாய்80,000 வரை ஏறியிருந்தது என்றால் பணக்காரர்களின் பேய் தனமான சூதாட்ட வெறிதான் காரணமாக அமைந்திருந்தது!.

இவ்வாறு பணம் கட்டி ஆட, சோம்பேறிகளான சூதாடிகள் பலர் ஒரு கூட்டமாகவே இருப்பார்களாம். அந்த பயங்கர சூதாடிகள், தாங்கள் நேரில்போய் ஆடுவதற்குக் கூட இயலாமல் சோம்பல்பட்டு, கூலிக்கு ஆட்களை அமர்த்தி, போய் பந்தயம் கட்டி ஆடச் செய்வார்களாம். பெருந்தன்மைமிக்க பிரபுக்கள் பலர் இப்படி ஆட்களை அமர்த்தி ஆடும் பழக்கம் கொண்டவர்களாகவும் விளங்கியிருக்கின்றார்கள்.

பந்தயம் கட்டிக் கொண்டவர்கள், தங்கள் ஆட்டத்தின் முடிவுக்காகக் காத்திருக்காமல், தங்கள் பக்கம் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக வேண்டாத வழிகளையும், குறுக்கு முறைகளையும், தந்திர யுக்திகளையும் கையாண்டதாக பல குறிப்புக்கள் வரலாற்றில் சுவையாகக் கூறிச்செல்கின்றன.

ஒரு சமயம், ஒரு குழுவின் சிறந்த ஆட்டக்காரரை, அன்று அந்தக் குழுவில் ஆட விட்டுவைத்தால், அவர் குழு வென்று, தன் குழு தோற்றுவிடும் என்பதை உணர்ந்த ஒரு பந்தயம் கட்டிய சூதாடி, அந்த ஆட்டக்காரரின் மனைவி இறந்து விட்டாள் என்ற பொய் சேதியை அவருக்குத் தெரிவிக்கச் செய்து ஆடவிடாமல் செய்ததாகவும் ஒரு குறிப்பு உரைக்கின்றது!

இவ்வாறு, குதிரைப் பந்தயத்திலும், குத்துச்சண்டைப் பந்தயத்திலும் பணங்கட்டி ஆடுவதைப் போல, பணம் சம்பாதிப்பதையே குறிக்கோளாகக் கொண்டவர்கள் இடையே கிரிக்கெட் ஆட்டம் சிக்கிச் சீரழிந்தது. பல இடங்களில், ஒரே சமயத்தில் போட்டி ஆட்டங்கள் நடைபெற்றுக் கொண்டேயிருந்தன. தெரிந்தோ தெரியாமலோ, போட்டிகள் பல இடங்களில் ஒரே சமயத்தில் நடைபெற்றதால், எந்த இடத்திற்கு போவது என்பதிலும் குழப்பம் கொள்ளத் தொடங்கினர் சூதாடிகள்.

இதற்கிடையிலே 1790ம் ஆண்டு பந்தயப்பணம் கட்டும் நிலையில் சற்று இறக்கம் காணத் தலைப்பட்டது. பெருந்தன்மையுள்ளவர்கள் என்று தங்களை அழைத்துக்கொண்டவர்கள், அப்படியே நடந்து கொள்ள வேண்டும் என்று தங்களுக்குள்ளே முடிவு கட்டிக்கொண்டது போல, ஒரு ஒப்பந்த நிலைக்கும் வந்தனர்.

பந்தயத்தில் தோற்றாலும் ஜெயித்தாலும் அதற்காக முணுமுணுக்கவோ, மூர்க்கத்தனமாக நடந்து கொள்ளவோ கூடாது என்பது தான். ஏற்கனவே பந்தயம் கட்டுபவர்கள் எண்ணிக்கை குறைந்ததும், பந்தயம் கட்டி ஆடுபவர்கள் கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டும் என்ற கட்டுப்பாடும் வந்ததும், பேராசைக்காரர்களிடம் பேயாட்டம் ஆடிக்கொண்டிருந்த கிரிக்கெட் ஆட்டம், பெரிய மோசடித்தனத்திலிருந்து தப்பி வெளியேறி வரமுடிந்தது.

## வளர்ந்த விதம்

இவ்வாறு பந்தயம் கட்டி ஆடப்பெற்ற காலத்தில் கிரிக்கெட் ஆட்டம், கீழ்நிலைக்குப் போகாமல் என்னென்ன முறையில் வளர்ச்சி பெற்று வந்தது என்கின்ற குறிப்புகளையும் இனி காண்போம்.

1706ம் ஆண்டு, ஒரு கிரிக்கெட் ஆட்டப் போட்டியினைப் பற்றி வில்லியம் கோல்டுவின் என்பவர், இலத்தீன் மொழியிலே கவிதை ஒன்றை எழுதினார். அதுவே பல குறிப்புக்களைத் தருகின்ற குறிப்புப் பெட்டகமாக அமைந்துவிட்டது.

இதைத் தொடர்ந்து பல மாகாணங்களில் மக்கள் பெருமையாக விளையாடத் தொடங்கிவிட்ட காரணத்தால், இரண்டு மாகாணங்களுக்கிடையே போட்டிகள் அதாவது கவுண்டி மேட்ச் (County Match) என்ற பெயரில்

நடைபெறலாயின. முதன் முதல் மாகாணத்திற்கிடையிலான போட்டிகள் 1709ம் ஆண்டு இலண்டன் நகரத்திற்கும் கெண்ட் மாகாணத்திற்கும் இடையே சிறப்பாக நடைபெற்று, சரித்திரத்தில் சிறப்பான இடத்தை வகித்துக் கொண்டது.

இதன் பலனாக, மாணவர்களிடையிலும் கிரிக்கெட் ஆட்டம் பிடிப்புற்று, பேரளவில் பரவிக்கொண்டது. அதன் பயனாக, பல்கலைக்கழகங்களில் கிரிக்கெட் பிரதான இடத்தையும் பிடித்துக்கொண்டது. அவ்வாறு வளர்ந்த சூழ்நிலையில் தான் 1729ம் ஆண்டு, கேம்பிரிட்ஜ் பல்கலை கழகத்திற்கும், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்திற்கும் முதல் போட்டி ஒன்று நடைபெற்றது.

இதைவிட பெரும் போட்டி ஒன்று 1744ம் ஆண்டு நடைபெற்றது. அந்த ஆண்டுதான் கிரிக்கெட் ஆட்ட மறுமலர்ச்சிக்கு வித்திட்ட பொன்னாளாகும். கென்ட் மாகாணத்திற்கும் இங்கிலாந்திலுள்ள ஆட்டக்காரர்களுக்கும் இடையே நடைபெற்ற போட்டி என்பதனால் மட்டுமல்ல, கிரிக்கெட் ஆட்டத்திற்கான புதிய விதிகளை உருவாக்கிய ஆண்டும் 1744ம் ஆண்டு தான்.

இவ்வாறு முதன் முதலாக அமைக்கப்பட்ட விதிமுறைகளை இலண்டன் சங்கம் ஏற்றுக்கொண்டு திறம்பட செயல்பட்டது. அந்த சங்கத்தின் தலைவராக இருந்து நடத்தியவர், அப்பொழுது வேல்ஸ் இளவரசராக இருந்த பிரடெரிக் லூயிஸ் என்பவர். இந்த விதிமுறைகள், மற்ற புதிய விதிமுறைகள் தோன்றிட மூல காரணமாகவும், கிரிக்கெட்டுக்கு என்று தெள்ளத் தெளிவான விதிமுறைகள் இருக்கின்றன என்று சொல்லிக் கொள்ளத் தக்க வகையிலும் தோன்றிய சில முறைகள் என்பதாகவும் விளங்கின.

## ஹேம்பிள்டன் கிளப்

1760ம் ஆண்டு, ஒரு சங்கம் ஏற்படுத்தப்பட்டது. அதுவே, இங்கிலாந்து நாட்டின் சிறந்த சங்கமாகவும் செயல்பட்டது. 'கிரிக்கெட் ஆட்டத்தை வளர்த்தத் தொட்டில்' என்பதாகவும் அழைக்கப்பட்டது. கிரிக்கெட் ஆட்டக்காரர்களின் மெக்கா என்றும் புகழப்பட்டது. அதுவே ஹேம்பிள்டன் கிளப் (Hambledon Club) என்பதாகும்.

ஹேம்பிள்டனைச் சேர்ந்த சிறு ஹேம்ப்ளியர் கிராமப்புற பண்பாளர்கள் ஒன்று கூடியே இந்த ஹேம்பிள்டன் சங்கத்தை நிறுவினார்கள். அதற்குப் பெரிதும் உதவியாளராக இருந்து உதவியவர் நிலக்கிழாராகத் திகழ்ந்த ரிச்சர்டு நைரன் (Richard Nyren) என்பவராவார். அவர் தந்த அளவிலா உற்சாகமும், அன்புசால் ஆதரவுமே இந்த ஹேம்பிள்டன் சங்கம் தோன்றிட உறுதுணையாக விளங்கின, நைரனும் அவரது குமாரர் ஜான் நைரன் என்பவரும், இதில் இன்னும் உற்சாகத்துடன் ஈடுபட்டதால்தான், கிரிக்கெட் ஆட்டம் மேலும் செழிப்புறும் வழிகண்டது. ஆரம்ப நாட்களில் விக்கெட் என்றால், இரு சிறு குழிகள் தான் புல் தரையில் தோண்டப்பட்டு இருந்தன. பந்தடித்தாடும் ஆட்டக்காரர் ஓடி வந்து கோட்டைத் தொடுவதற்கு முன், குழியில் பந்தை உருட்டிவிட்டால், அவர் ஆட்டமிழந்து போவார். குழிகளுக்கும் கோட்டிற்கும் இடையிலுள்ள தூரம் 46 அங்குலமாகும்.

விக்கெட்டுகளாக குறிக்கம்புகள் 1700ம் ஆண்டு முதல் தான் உருவெடுத்தன. அதன் பின் இரண்டு கம்புகள் நடப்பட்டு, அதன் மேல் குறுக்குக் கம்பம் ஒன்றை வைத்திட, அது சிறுகதவு போலத் தோற்றமளித்தால்தான், விக்கெட்டு என்ற பெயரையும் பெற்றது. ஆனால், பந்தானது விக்கெட்டிற்கு இடையிலேயே சென்று, விக்கெட்டை வீழ்த்தாது போன ஒரு நிகழ்ச்சிக்குப் பிறகு, மூன்றாவது குறிக்கம்பு (stump) ஒன்று

வேண்டும், அதுவும் நடுவிலே வைக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்தார்கள். அந்த முடிவினை எடுத்து நிறைவேற்ற மூல காரணமாக அமைந்தது ஹேம்பில்டன் சங்கமே ஆகும். அந்த ஆண்டு 1775 ஆகும்.

1774ம் ஆண்டு தான் கிரிக்கெட் ஆட்டத்திற்கான புதிய விதிமுறைகளை அமைக்க, பழைய விதிமுறைகளை ஏற்றும் மாற்றியும், திருத்தியும் உருவாக்கினார்கள். அந்த விதிகளே இன்னும் நடைமுறையில் பின்பற்றப்பட்டு வருகின்றன. ஒரு சிலவே மாற்றம் பெற்றிருக்கின்றன.

புதிய விதிகள் உருவாக்கப்பட்டாலும், முக்கியமான ஒன்றை, விதியமைத்த விற்பன்னர்கள் கவனியாது விட்டு விட்டனர். அதாவது ஒரு குழுவிற்கு எத்தனை ஆட்டக்காரர்கள் இருந்து ஆடவேண்டும் என்பதைத்தான். 1884ம் ஆண்டு வரை இந்நிலை நீடித்து வந்தது. 1884ல் மீண்டும் ஒருமுறை எல்லா விதிகளையும் கவனத்துடன் பரிசீலித்துப் பார்க்கையில், விடுபட்டுப்போன இந்த நிலையை உணர்ந்தனர். 11 அல்லது 12 ஆட்டக்காரர்கள் ஒரு குழுவில் இருக்கலாம் என்று ஆடியதையும், அடித்தாடுபவர்கள் (Batsmen)11 பேர் இருந்தால், தடுத்தாடுபவர்கள் 22 பேர் இருந்து ஆடலாம் என்கின்ற நடைமுறை விதிமுறையையும் மாற்றித் தெளிவாக அமைத்தார்கள்.

இது போன்ற செயல்முறைகளினால் ஹேம்பிள்டன் சங்கம் மக்கள் மத்தியிலே பெருமைமிகு சங்கமாக மதிக்கப்பட்டது. அவர்களால் அங்கீகரிக்கப்பட்டது. அதனால், கிரிக்கெட் வளர்ச்சிக்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுத்திடும் உரிமையுடன் சங்கம் முன்னேற்ற நடைபோட்டது. ஏறத்தாழ முப்பதாண்டுகள் ஹேம்பிள்டன் சங்கம், இங்கிலாந்து கிரிக்கெட் ஆட்டத்தைக் கட்டிக் காத்தது. கவனித்துக் கொண்டு பீடு நடைபோடச் செய்தது.

## மெர்லிபோன் கிரிக்கெட் சங்கம் (MCC)

இப்பொழுது இஸ்லிங்டன் என்று அழைக்கப்படுகின்ற இடத்தில் ஒயிட் கன்டியூட் கிளப் (White Conduit Club) என்ற சங்கம் ஒன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்டது. அது ஆரம்பிக்கப்பட்டு, ஆர்வத்துடன் செயல்பட்டு, பல போட்டிகளை நடத்திக் கொண்டிருக்கின்ற வேளையில், அதிலிருந்து மேலும் ஒரு சங்கம் 1787ம் ஆண்டு புதிதாகத் தொடங்கப்பெற்றது.

கிளைத்தெழுந்த புதிய சங்கத்திற்கு மெரிலிபோன் கிரிக்கெட் சங்கம் (Marrlybone Cricket Club) என்னும் பெயர் வைக்கப்பட்டது. இந்தச் சங்கத்தை தோற்றுவிக்க பெருமுயற்சி எடுத்துக் கொண்டவர்களில் எட்டாம் வின்செல்சியும், சார்லஸ் லினாக் என்பவரும் மிகவும் முக்கியமானவர்கள் ஆவார்கள். அவர்களுக்கு ஆக்கபூர்வமான ஒத்துழைப்பையும் ஆடும் மைதான இடத்தையும் அளித்து உதவியவர் தாமஸ் லார்டு (Thomas Lord) என்பவராவார். இன்று இங்கிலாந்தில் உள்ள லார்டு மைதானம் இவரது பெயரால்தான் விளங்குகிறது.

மெரிலிபோன் கிரிக்கெட் சங்கம் ஆரம்பித்தவுடன் அதற்கு என்று ஒரு மைதானம் தேவைப்படவே, டார்செட்ஸ்கொயர் என்னும் இடத்தில் உள்ள தனது மைதானத்தை தாமஸ் லார்டு வழங்கினார். அந்த மைதானத்தை அவர்களும் பயன்படுத்தி ஆடி வந்தார்கள். அதன் பயனாக விளைந்த போட்டியானது, இந்த எம்.சி.சி. (M.C.C.) ஆட்டக்காரர்களுக்கும் ஒயிட் கன்டியூட் கிளப் ஆட்டக்காரர்களுக்கும் நடைபெற்றது. இதில் எம்.சி.சி.அணியினரே 83 ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றுவிட்டனர்

இந்த லார்டு மைதானம் உருவாவதற்குள், அதன் அங்கத்தினர்கள் பலமுறை அச்சுறுத்தல்களுக்கும் அவதிகளுக்கும் ஆளாயினர். ஒவ்வொரு முறையும் அவர்கள் தப்பித்திணறி வெளிவந்து வெற்றிகொள்ளும் வாய்ப்பினையும் பெற்றிருக்கின்றனர் என்பது ஒரு சுவையான கதையாகும். இந்த மைதானத்தை 18,000 ஷில்லிங் கொடுத்து மெரிலிபோன் கிரிக்கெட் சங்கம் வாங்கிக்கொண்டது, வெற்றிக்கண்டது என்பதும் அவர்கள் கிரிக்கெட் ஆட்டத்தின் மேல் கொண்டிருந்த பேரன்பையும் பிடிப்பையுமே காட்டுகிறது.

இவ்வாறு வாய்ப்பிலும் வசதியிலும் எம்.சி.சி. பெருகிக் கொண்டே வந்தது. ஏற்கனவே சிறந்த பரந்த இடத்தைப் பெற்று வந்த ஹேம்பிள்டன் கிரிக்கெட் சங்கத்தை விட புகழிலும் பெருமையிலும் அதிகமாகி, இங்கிலாந்திலேயே வலிமையும் திறமையும் நிறைந்த சங்கம் எம்.சி.சி. தான் என்ற மகோன்னத நிலையை அடைந்து நின்றது. அதனால் ஹேம்பிள்டன் சங்கத்திற்கு முன்போல மக்களிடையே விளங்கிய மதிப்பு, கொஞ்சங் கொஞ்சமாக குறையலாயிற்று, கிரிக்கெட் ரசிகர்களும் ஆதரவாளர்களும் எம்.சி.சி யையே தங்களது கிரிக்கெட் ஆட்டத்தின் வழிகாட்டியாக ஏற்றுக்கொள்ளலாயினர். எந்தத் தகராறு ஏற்பட்டாலும், அதனைத் தீர்த்து வைக்கின்ற தகுதியும் திறமையும் உடையவர்களாக எம்.சி.சி. நிர்வாகிகள் உயர்ந்தனர். அதற்கும் உதவுவது போல் ஒரு சூழ்நிலை அந்த நேரத்தில் உருவாகியது.

## பந்தை எந்த முறையில் எறிவது?

ஆரம்ப நாட்களில் பந்தைக் கீழாகக் கையை வீசி உபயோகப்படுத்தியே (Under Arm Bowling) எறிந்து வந்தார்கள். இவ்வாறு எறிவதிலும், மிகவும் வேகமாகவும் விக்கெட்டை நோக்கிக் குறிபார்த்து எறிவதிலும்

வல்லவர்களாகவும் பலர் விளங்கினார்கள். அதில் ஜான் நைரன், வில்லியம் கிளார்க், டேவிட் ஹேரிஜ் என்பவர்கள் முக்கியமானவர்கள்.

ஆனால், ஹேம்பிள்டன் கிரிக்கெட் கிளப்பை சேர்ந்த சில ஆட்டக்காரர்கள் பந்தைக் கீழாகக் கொண்டு வந்து எறியும் முறையை விட்டுவிட்டு, கையை சுழற்றி எறிகின்ற (Round ArmBowling) முறையைப் பயன்படுத்தி எறிந்தார்கள். அதற்கும் பலர் எதிர்ப்பினைத் தெரிவித்தார்கள். இதுவே பெரும் பிரச்சினையாகப் பேசப்பட்டது. குழப்பங்களை உருவாக்கின. ஆட்டத்தின் சூழ்நிலையையே மாற்றுவது போல், ஆட்டக்காரர்கள் இடையே தகராறு மலையாக நிற்கவே, அப்பொழுது அதிகார பீடத்தில் இருந்த மெரிலிபோன் கிரிக்கெட் சங்கம், இதனை தீர்க்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கியது.

அதன் முடிவு, 'பந்தை கை சுழற்றி எறியக்கூடாது, முன்போல கீழாகக்கொண்டு வந்தே எறியவேண்டும்.' என்பதாக அமைந்தது. 1816ம் ஆண்டு எம்.சி.சி. நிர்வாகம் இந்தத் தீர்ப்பினை வழங்கியது என்றாலும், கென்ட் மாகாணத்தைச் சேர்ந்த ஜான் வில்லிஸ் (John Willies) என்னும் ஆட்டக்காரர் தொடர்ந்து கை சுற்றி எறியும் முறையையே மேற்கொண்டு எறிந்தார். அவர் எறிந்த பந்துக்களையெல்லாம் முறையற்ற பந்தெறி (No Ball) என்றே நடுவர்கள் கூறினார்கள்.

இதனால் வெறுப்படைந்த ஜான் வில்லிஸ், ஆட்டத்தின் மீது வெறுப்படைந்தார் என்று வரலாறு கூறுகிறது. இவ்வாறு இவர் கை சுற்றி எறியும் முறையை தனது சகோதரியான கிறிஸ்டினா என்பவரிடமிருந்து கற்றுக் கொண்டாராம். (பந்தெறி முறை என்ற பகுதியில் விரிவாகக் காணலாம்.

அதாவது வீட்டில் கிரிக்கெட் பயிற்சிக்காக ஆடும் பொழுது, அவரது தங்கை இதுபோல்தான் கை சுற்றி எறிவது

பழக்கமாம். ஏனென்றால், கிறிஸ்டினா அணிந்திருந்த கவுன், முழங்கால் பகுதிக்குக் கீழே குடை ராட்டினம்போல விரிந்த அமைப்புள்ள தன்மையில் தைக்கப்பட்டிருந்ததால், கீழாக எறியும்பொழுது கவுன் தடுத்ததால், கையை மேலே தூக்கி எறிந்து ஆடினாராம். அந்தப் பழக்கத்தையே ஜான் வில்லிஸும் பின்பற்றினார்.

ஒரு முறை போட்டி ஆட்டம் நடந்து கொண்டிருக்கும் பொழுது ஜான் வில்லிஸ் எறிந்த பந்தையெல்லாம் முறையிலா பந்தெறி என்று நடுவர் கூறவே, வேகமடைந்த வில்லிஸ் கோபத்துடன் மைதானத்தைவிட்டு வெளியேறி, குதிரை மேலேறி போயேவிட்டார். அவர் ஆட்டத்தை விட்டுமட்டுமல்ல, கிரிக்கெட்டையே விட்டு விலகிக்கொண்டார்.

அதன்பின் அவர் தனது முடிவை மாற்றிக்கொள்ளவே இல்லை. 1822ம் ஆண்டு அவர் அகால மரணமடைந்தார். ஆனாலும், அவர் தான் கொண்ட கொள்கையை, மேற்கொண்ட இலட்சியத்தை விடவில்லை. அதாவது, அவர் தனது கல்லறையில் கீழ்க்காணும் குறிப்புக்களைப் பொறிக்கச் செய்தார்.

'இங்கே துயில் கொள்ளும் ஜான் வில்லிஸ் என்பவர் ஆண்மையுள்ள ஆட்டத்தின் ஆதரவாளராக எப்பொழுதுமே விளங்கியவர். கிரிக்கெட் ஆட்டத்தில் கை சுற்றி எறியும் முறையை முதன்முதலில் கண்டுபிடித்து அறிமுகப் படுத்தியவர்' என்பதாக எழுதச் செய்தாராம்.

இவ்வளவு புரட்சிகரமாக இருந்து, அமரரான ஜான் வில்லிசின் கனவு 1828ம் ஆண்டு நினைவாகியது. ஆமாம். கைசுற்றி எறியும் முறை ஆட்டம் அங்கீகரிக்கப்பட்டு, அமுலாகியது. அதன் பின்னர் 1864ம் ஆண்டு இது பற்றி ஆராய்ந்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும், கை உயர்த்தி எறிந்திட ஆட்டக்காரர்கள் தொடங்கினர். அதுவும் பல பிரச்சினைகளை எழுப்பி எரிமலையாய் புகைந்தது.

இப்படியாக ஆட்டத்தில் ஒவ்வொரு நுணுக்கமும் மலர்ந்து மலர்ந்துவர, ஆட்டம் மெருகேறிக்கொண்டே வந்தது. பந்தின் கனம் இவ்வளவுதான் இருக்க வேண்டும் என்ற நியதியை உண்டாக்கி, பந்தானது 51/2 அவுன்சுக்கும் 53/4 அவுன்சுக்கும் இடைப்பட்டதாக இருக்க வேண்டும் என்றும் தெளிவுபடுத்தினார்கள்.

பந்தாடும் தரையில் (Pitch) ஆடுகள் மேய்ந்து தரையை நாசம் விளைவித்ததும் பல காரணங்களுள் ஒன்றாயின. அதனால் பந்தாடும் தரையை உருட்ட வேண்டும், அதுவும் கனமான இரும்பு உருளையால் (Heavy Roller) உருட்ட வேண்டும் என்று தீர்மானித்து, அதனை முதன்முதலாக லார்டு மைதானத்தில் 1870ம் ஆண்டு செய்தனர். அதுவே முறையான பழக்கமாக பின்பற்றப்பட்டு வருகிறது.

அதன் பின்னர், ஆட்டம் தொடங்குவதற்கு முன்னர் பந்தாடும் தரையை பாதுகாப்பாக மூடிவைக்கவேண்டும் என்பதன் அவசியத்தை உணர்ந்து, 1872ம் ஆண்டு, லார்டு மைதானத்திலேயே சோதனையாகச் செய்து பார்த்தனர். அதுவும் வெற்றிகரமாக செயல்படவே, அதுவும் விதிமுறையாக்கப்பட்டது.

ஒரு பந்தெறித்தவணைக்கு (Over) 4 முறை பந்தெறியலாம் என்ற முறையை மாற்றி, 5 முறை எறிந்து கொள்ளலாம் என்ற புதுவழியைப் புகுத்தினர். 100 ஆண்டுகளுக்கு மேலாகப் பழக்கத்தில் இருந்து வந்த நான்கு முறை பந்தெறிவதை இங்கிலாந்தில் 5 முறை என்று உயர்த்தினாலும், 1900ம் ஆண்டு ஆறு முறை எறியலாம் என்று மீண்டும் மாற்றத்தைக் கொண்டு வந்தனர்.

எனினும், ஆஸ்திரேலிய ஆட்டக்காரர்கள் மேலும் ஒரு படி முன்னேறி, ஒரு பந்தெறித்தவணைக்கு 8 முறை எறியலாம் என்று விதியமைத்துக் கொண்டு ஆடியிருக்கின்றார்கள்.

இப்படியாக ஆட்டம் ஒவ்வொரு ஆட்டத்திறன்களிலும், ஆடும் முறையிலும், அடிப்படைவிதிகளிலும் மாற்றங்களும் நுணுக்கங்களும் பெற்று மறுமலர்ச்சி அடைந்து வரும் வேளையிலே, ஆங்காங்கே ஆயிரக்கணக்கான கிரிக்கெட் குழுக்கள், கழகங்கள் நாடெங்கிலும் தோன்றத் தொடங்கின.

இங்கிலாந்து முழுவதும் இவ்வாறு பெருவளர்ச்சி பெற்றதன் காரணமாக, பூரண மலர்ச்சி பெற்ற கிரிக்கெட் ஆட்டம் பிறநாடுகளுக்கும் பயணம் செய்யத் தொடங்கியது. அதனை அவ்வாறு எடுத்துச்சென்று இங்கிதமாகப் பரப்பிய பெருமையைப் பெற்றவர்கள் இராணுவ வீரர்கள், கடற்படை வீரர்கள் ஆவார்கள்.

இராணுவத்தைச் சேர்ந்தவர்களும் கடற்படை வீரர்களும், எந்த நாட்டிற்கு எந்த இடத்தில் சென்று தங்குகிறார்களோ, அந்த இடங்களில் ஓய்வு கிடைக்கும் பொழுதெல்லாம், கிரிக்கெட் ஆட்டத்தை ஆடத் தொடங்கிவிடுவார்கள். பொழுதினை இன்பமாகப் போக்கி உல்லாசம் பெறுவார்கள். அத்துடன் நில்லாமல், இரு குழுவினராகப் பிரித்துக்கொண்டு போட்டி ஆட்டமும் முனைந்துவிடுவார்கள்.

இவ்வாறு போட்டி ஆட்டத்தைப் பார்க்கும் வாய்ப்பு பெற்ற உள்ளூர்வாசிகளும் (Inhabitants), மற்ற வழிப்போக்கர்களும், இராணுவ வீரர்களுக்கு உதவி செய்கின்ற வேலையாட்களும், உதவியாளர்களும் இந்த ஆட்டத்தின் மேல் ஈடுபாடு கொள்ளத் தொடங்கினார்கள். பிறகு ஆடத் தொடங்கினார்கள். அதன் பின் ஆட்டத்துடன் ஒன்றியும் போய்விட்டார்கள்.

கப்பற்படை வீரர்களும், கலம் ஏறிப் பயணம் சென்ற மாலுமிகளும் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்னாப்பிரிக்கா போன்ற தேசங்களில் கிரிக்கெட் ஆட்டத்தைக் காலூன்றச் செய்த பெருமையைப் பெற்றார்கள். இராணுவ வீரர்கள் இந்தியத் துணைக்கண்டம், மற்றும் தென் அமெரிக்கா முதலிய இடங்களில்

ஆட்டத்தைப் பரப்பிடும் பேற்றினையும் புகழையும் பெற்றுக்கொண்டார்கள்.

அத்துடன் நில்லாமல், கனடாவிலும், வட அமெரிக்கப் பகுதிகளிலும் கிரிக்கெட் ஆட்டம் பரவியது என்றாலும், அவ்வளவாக ஏற்றம் பெறாமலேயே இருந்து போனதுதான் ஆச்சரியமாக இருக்கிறது.

கிரிக்கெட் ஆட்டத்தின் மேன்மைக்கும் வளர்ச்சிக்கும் அஸ்திவாரமாகவும், தளமாகவும் அமைந்த மெரிலிபோன் கிரிக்கெட் சங்கம், ஆட்டம் வெளிநாடுகளுக்குப் பரவிப் போய்விட்டது என்று அறிந்து பெருமையுற்றுப் பேசாமல் இருந்துவிடவில்லை. 1859ம் ஆண்டு, கனடாவுக்கு இங்கிலாந்தில் இருந்து ஒரு குழுவை அனுப்பி ஆடச் செய்து, போட்டி நடத்தி, ஆட்டத்தின் வளர்ச்சிக்கு அடிகோலியது. புகழுக்கும் வழி வகுத்தது.

கனடாவுக்கு இங்கிலாந்துக் குழு பயணம் செய்து ஆட்டங்கள் ஆடியதை கேள்விப்பட்டவுடன், ஆஸ்திரேலியாவும் 'ஆகா' அற்புதம்' என்று பாராட்டிவிட்டு அமைதியாக இருந்துவிடவில்லை. மெல்பர்ன் நகரத்திலுள்ள தொழிலகத்தின் பண உதவி மூலமாக, 1861-62ம் ஆண்டில் ஆஸ்திரேலியா குழுவும் ஒரு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு, வெற்றிகரமாக பவனி வந்தது. அந்த சுற்றுப் பயணம் தென்னாப்பிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், நியூசிலாந்து நாடுகள் வரை சென்றது.

அதன்பின்னர், ஆஸ்திரேலியா, மற்றும், தென்னாப்பிரிக்கா நாடுகள் இங்கிலாந்திற்கு கிரிக்கெட் ஆட சுற்றுப்பயணத்தை மேற்கொண்டன.

சுற்றுப்பயணமாகச் சென்று கிரிக்கெட் ஆட்டம் ஆடிய முதல் முயற்சியின் விளைவாக, வேறுபல மாற்றங்களும் தோன்றத் தொடங்கின. 1876 வரை இப்படியே சென்று

கொண்டிருந்த பயணமும் போட்டியும் என்ற நிலையில் மேலும் ஒரு புதிய எழுச்சி பிறந்தது. ஆமாம். இரண்டு நாடுகளுக்கிடையில் பெரும் போட்டி ஆட்டம் போல் நடத்தப்படவேண்டும் என்பதாக டெஸ்ட் போட்டியை (Test Match) 1877ம் ஆண்டு ஆஸ்திரேலியாவுடன் தொடங்கினர். முதல் டெஸ்டில் ஆஸ்திரேலியாவும், இரண்டாவது டெஸ்டில் இங்கிலாந்தும் வென்று இணையாகத் தங்கள் வலிமையைக் காட்டி மகிழ்ந்தனர்.

இவ்வாறு நாடுகளுக்குள்ளே நடைபெறுகின்ற டெஸ்ட் போட்டிகள் முதன் முதலாக வரலாற்றுக் குறிப்பேட்டில் பொறிக்கப்பட்டன. கிரிக்கெட் ஆட்டத்திற்கு இங்கிலாந்து தான் தாயகம் என்பதால், இங்கிலாந்தில் இருந்துதான் டெஸ்ட் போட்டிக்காகப் புறப்பாடு முதலில் நடந்தது.

மேற்கிந்தியத் தீவினருடன் முதல் டெஸ்ட் போட்டியானது 1928ம் ஆண்டு இங்கிலாந்தில் தொடங்கி, நடைபெற்றது.

நியுசிலாந்துடன் முதல் டெஸ்ட் பந்தயம் 1929ம் ஆண்டும், இந்தியாவுடன் முதல் டெஸ்ட் போட்டி 1932ம் ஆண்டும், பாகிஸ்தானுடன் முதல் டெஸ்ட் போட்டி 1954ம் ஆண்டும் நடைபெற்றது. இவ்வாறாக, உலக நாடுகளுக்கிடையே டெஸ்ட் போட்டிகள் தொடர்ந்து நடைபெற்று வரலாயின. வருகின்றன.

இங்கிலாந்து நாட்டின் ஆளுகைக்கு உட்பட்ட நாடுகளில் தான் கிரிக்கெட் ஆட்டம் முதலில் பரவ ஆரம்பித்தது. காமன்வெல்த் நாடுகள் என்று அவை அழைக்கப்பட்டன. முதலில் இங்கிலாந்து நாட்டின் எம்.சி.சியின் அரவணைப்பில் இருந்த கிரிக்கெட், 1909-ம் ஆண்டிலிருந்து புதிய அமைப்பின் கீழ் வளரத் தொடங்கியது.

அகில உலகக் கிரிக்கெட் சங்கம் என்பதாக இங்கிலாந்தில் 1909ம் ஆண்டு இம்பீரியல் கிரிக்கெட் கான்பரன்ஸ் ஒன்றைத் தொடங்கினர். அதில் முதலில் மூன்று நாடுகள்

அங்கம் வகித்தன. அவை இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, தென் ஆப்ரிக்காவாகும். அதன்பின் 1926ம் ஆண்டு இந்தியா, நியூசிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் அங்கத்தினர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 1952ம் ஆண்டு பாகிஸ்தான் நாடு அங்கத்தினராக இணைக்கப்பட்டது.

இம்பீரியல் கிரிக்கெட் கான்பரன்ஸ் என்ற அமைப்பில் இருந்த நிலையை மாற்றிக்கொள்ள அங்கத்தினர்கள் விரும்பினர். முனைந்தனர். அத்துடன், காமன்வெல்த் நாடுகளுக்கு அப்பால் உள்ள நாடுகளையும் இணைத்து ஆடவேண்டும் என்ற எண்ணத்தின் காரணமாக, அந்த அமைப்புக்கு 1965ம் ஆண்டு இண்டர் நேஷனல் கிரிக்கெட் கான்பரன்ஸ் என்று பெயர் மாற்றினர்.

அதன் விளைவாக காமன்வெல்த்தை சேராத பிறநாடுகளான அமெரிக்கா, ஹாலந்து, டென்மார்க்கு, தென் ஆப்பிரிக்கா, ஹாங்காங், ஜிப்ரால்டர், நியூஜினியா, ஸ்ரீலங்கா போன்ற நாடுகளும் அங்கத்தினர்களாகும் வாய்ப்புக்களைப் பெற்றன.

1930ம் ஆண்டு, இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் நடைபெற்ற போட்டியானது, நான்கு நாட்களாக இருந்தன. 1963ம் ஆண்டு குறிப்பிட்ட பந்தெறித்தவணை (Limited Overbasis) ஆட்டம் வேண்டும் என்று ஆரம்பித்து அதற்கான கில்லர் கிரிக்கெட் கோப்பை ஒன்றையும் ஏற்படுத்தினர். அதுபோலவே 1975ம் ஆண்டு உலகக் கோப்பைக்கான (World Cup) குறிப்பிட்ட பந்தெறித்தவணைப் போட்டியும் தொடங்கி நடத்தப் பெற்றது.

இந்தியாவில்..ரஞ்சிக் கோப்பை (Ranji Trophy)

நியூசிலாந்தில்..பிளங்கட் கேடயம் (Plunket Shield)

ஆஸ்திரேலியாவில்..ஷெபீல்டு கேடயம் (Shefield Shield)

தென் ஆப்ரிக்காவில்..கூரிகோப்பை (Currie Cup)

மேற்கிந்தியத்தீவில்..செல்கேடயம் (Shell Shield)

பாகிஸ்தானில்..கோயாடி ஆசாம் (Quad-E-Azam)

பிரபல ஆட்டக்காரர்கள் ஆண்டுதோறும் மிகவும் ஆர்வத்துடன் தங்கள் தங்கள் நாடுகளில் போட்டியிடுகின்ற மிகவும் புகழ்பெற்ற வெற்றிக் கேடயங்களாகும்.

## இந்தியாவில் கிரிக்கெட்:

இந்தியாவில் கிரிக்கெட் ஆரம்பம் ஆன ஆண்டு என்று 1721ம் ஆண்டினைக் குறிப்பிடுவார்கள். இந்திய வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஆண்டு இது என்ற குறிப்பினை விஸ்டன் (Wisden) என்பவர் குறித்து வைத்திருக்கிறார்.

.இந்தியத் துணைக் கண்டத்திற்கு வந்து குடியேறிய பெருந்தனக்காரர்களாலும், இராணுவ வீரர்களாலும் தான் கிரிக்கெட் இங்கே காலூன்றியது. கிழக்கிந்தியக் கம்பெனியாரின் கப்பலில் பயணம் செய்து வந்து இறங்கிய மாலுமிகளும், கப்பற்படையில் பணியாற்றிய வீரர்களும் முதன் முதலில் இந்த ஆண்டில் தான் பம்பாய் (Bombay) நகரில் விளையாடினார்கள்.

அவர்கள் ஓடிய விதமும், ஆனந்தமாகக் கூடி ஆடிப் பொழுதை கழித்த சுகமும், பார்வையாளர்களாகிய இந்தியர்களை மிகவும் பரவசத்தில் ஆழ்த்தியது. இந்தியர்கள் ஆட்டத்தின் தன்மைகளை அறிந்து கொண்டதுடன், அந்த ஆட்டத்தின் நுணுக்கங்களைக் கிரகித்துக் கொண்டதுமல்லாமல், ஜீரணித்தும் கொண்டார்கள். அதன் விளைவாக, கிரிக்கெட் ஆட்டம் அவர்களிடையில் விமரிசையாக, சொல்லிலும் செயலிலும் வளர்ச்சி அடையத் தொடங்கியது.

முதலில் ஒரு போட்டி, அதுவும் வரலாற்றில் குறிப்பிடும்படியான ஒரு போட்டி, ஓல்டு எடோமன்ஸ் (Old Etomans) குழுவிற்கும் இந்திய நாட்டு பார்சியர்களுக்கும் (Parsees) 1784ம் ஆண்டு நடைபெற்றது. அதுவே, இந்தியர்களின் விழிப்புணர்ச்சியை இந்த ஆட்டத்தில் விரைவு படுத்தும் தூண்டுகோலாக அமைந்தது.

1712ம் ஆண்டு கல்கத்தா நகரில். கல்கத்தா, கிரிக்கெட் கிளப் என்றொரு சங்கத்தை உருவாக்கினார்கள். சங்கம் தோன்றியதற்குப் பிறகு கல்கத்தா நகரில் மட்டுமல்ல, பம்பாய், சென்னை முதலிய நகரங்களில் கூட இந்திய மக்கள் கிரிக்கெட் ஆட்டத்தைப் பெருவாரியான அளவில் விளையாடத் தலைப்பட்டார்கள். அதற்கும் ஒரு முக்கிய காரணம் இருக்கத்தான் இருந்தது.

ஆங்கிலேயர்களுடன் அதிக நெருக்கமும் இணைப்பும் கொண்டிருந்த பணக்கார இந்தியர்களும், சமஸ்தான இளவரசர்களும், இளைஞர்களும் இந்த ஆட்டத்தை அதிகமாக விரும்பி ஆடியதால், அவர்களைச் சார்ந்தவர்களும் தொடர்ந்து துணையிருந்து உதவியதால், இந்திய துணை கண்டமெங்கும் இந்த ஆட்டம் வளர்பிறையென்று வளர்ந்து கொண்டது. வளர்ச்சி கண்டது.

அத்துடன், 1804ம் ஆண்டு அதே ஓல்டு எடோமன்ஸ் குழுவினர், அரசு நிறுவனத்தில் வேலைபார்க்கும் அலுவலர்களுடன் ஒரு கிரிக்கெட் போட்டி ஆட்டத்தை ஆடினார்கள். அது கல்கத்தா நகரில் உள்ள ஏடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்றது. அதன்பின் பல சங்கங்கள் ஆங்காங்கே தோன்றத் தொடங்கின.

பம்பாயில் 1841ம் ஆண்டு பார்சியர்களால் கிரிக்கெட் சங்கம் ஒன்று தோற்றுவிக்கப் பெற்றது. இது மத சம்பந்தமான அபிமானிகளால் உருவான ஒன்று என்றாலும், கிரிக்கெட்

ஆட்டம் இந்தியாவில் வளர்ந்திட, பேருதவி புரிந்திருக்கும் அமைப்பு என்றும் புகழப்பட்டிருக்கிறது.

இந்த மத அபிமானத்தைத் தழுவி, இந்துக்களும் ஒரு கிரிக்கெட் கிளப்பைத் தொடங்கினர். அது 1886ம் ஆண்டு நடைபெற்றதாகும். அதற்கு முன்னதாக 1883ம் ஆண்டு முகமதியர்கள் ஒரு கிரிக்கெட் கிளப்பை ஆரம்பித்தார்கள் என்று வரலாறு கூறுகிறது.

மனத்தாலும் மதத்தாலும் ஆட்டத்திற்கு மாபெரும் வரவேற்பு தொடர்ந்து மக்களிடையே இருந்ததால், ஆட்டம் இந்தியாவில் மகோன்னத நிலையை எய்தியது. ஏற்கனவே, பார்சியர்களால் ஆட்டம் சிறப்புற வளர்ச்சி பெற்றிருந்தது என்று குறித்திருந்தோம். அதையும் இங்கே காண்போம்.

பார்சியர் குழுவானது 1886ம் ஆண்டு இங்கிலாந்துக்கு விஜயம் செய்து விளையாட்டில் பங்குகொண்டது. அவர்கள் மொத்தம் 28 முறை போட்டிகளில் பங்கு பெற்றார்கள். அதில் 19 போட்டிகளில் தோற்றாலும், பயணம் பயனுள்ளதாகவும், அனுபவம் நிறைந்ததாகவும், ஆட்டக்காரர்களுக்கு உற்சாகம் ஊட்டுவதாகவும் அமைந்திருக்கிறது.

அதுபோலவே இங்கிலாந்தில் இருந்து ஒரு குழுவும் 1889-90 ம் ஆண்டுகளில் இந்தியாவுக்கு விஜயம் செய்து, ஆடிய 13 போட்டிகளில் பார்சியர் குழுவிடம், ஒரு முறை தோற்றது என்றால், இந்திய ஆட்டக்காரர்களின் ஆட்டவளர்ச்சியின் வேகத்தை நம்மால் காண முடிகிறதல்லவா!

ஆனால், இந்தியாவின் சார்பாக முதன்முதலாக ஒரு குழு இங்கிலாந்துக்கு 1911ம் ஆண்டுதான் அனுப்பப்பட்டது. இவ்வாறு நாடுகளுக்கிடையே கலாச்சார குழுவினர் சென்று பரிவர்த்தனை செய்து கொள்வது போல, கிரிக்கெட் குழுக்களை அனுப்பி, பல நாடுகள் தங்களது நேச உறவையும், ஆண்மைப் பெருக்கையும் வெளிப்படுத்தி அன்பு பாராட்டிக் கொண்டன.

இவ்வாறு நாட்டு மக்களிடையே கிரிக்கெட் ஆட்டம் நனிசிறந்த முறையில் வளர்ச்சி பெற்றது. கிரிக்கெட் ஆட்டத்தைப் பற்றிப் பேசுவதும், அதைப் பார்ப்பதும், காதோரத்தில் ரேடியோ வைத்து ஆட்ட வருணணையைக் கேட்பதும், படித்தவர்களாகத் தங்களைக் காட்டிக் கொள்ளும் சூழ்நிலையை மக்கள் மனதிலே உருவாக்கும் அளவுக்கு மக்கள் மன்றத்திலே செல்வாக்கு நிறைந்தாக செழிப்புடன் விளங்கியது.

1892-93ம் ஆண்டுகளில் ஒரு மாகாணத்திற்குள்ளே என்று பல போட்டிகள் நடைபெற்று வந்த நிலைமாறி, மூன்று மாகாணங்கள் சேர்ந்து, தங்களுக்குள் விளையாடும் மும்முனைப்போட்டி ஆட்டங்களை நடத்தி மகிழும் அளவுக்கு 1907-1908ம் ஆண்டுகளில் நிலைமை தெளிவும் பொலிவும் பெற்றோங்கியது. அதன்பின், நான்கு மாகாணங்களுக்குள் நடைபெறும் போட்டி என்று 1912-1913ம் ஆண்டிலும் ஐந்து மாகாணங்களுக்கிடையே போட்டிகள் 1937-38ம் ஆண்டிலும் நடைபெற்றன. மாகாணங்களுக்கிடையே கிரிக்கெட் வளர்ச்சியுறுவதைக் கண்டு, தேசிய அளவுப் போட்டி ஒன்றை நடத்திவிட வேண்டும் என்று தெளிந்தனர் ஆட்ட வளர்ச்சியில் அக்கறை கொண்ட பெரியவர்கள்.

எல்லா இளவரசர்களிடத்திலும் நன்மதிப்பும் கௌரவமும் பெற்றிருந்த A.S. டிமில்லோ (A.S. Demello) என்பவர் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியால், 1934-35ம் ஆண்டு தேசிய கிரிக்கெட் பெரும்போட்டி ஒன்று தொடங்கப்பெற்றது. அதற்குரிய வெற்றிக்கோப்பையாக பாட்டியாலா மகாராஜா ஒரு கேடயத்தை வழங்கினார். அது ரஞ்சித்சிங்ஜி என்பவரைப் பெருமைப் படுத்துவதற்காக, ரஞ்சிக்கோப்பை (Ranji Trophy) என்று பெயர் சூட்டினார்கள். இப்பொழுது மாகாணங்களுக்கிடையே நடக்கும் போட்டிகளுக்கு ரஞ்சிக்

கோப்பைதான் பரிசாகத் தரப்படுகிறது. மிகவும் கௌரவம் வாய்ந்த இப்பரிசினைப் பெற, ஒவ்வொரு மாநிலமும் ஒவ்வொரு ஆண்டும் முயல்கிறது. அதனால் கிரிக்கெட் ஆட்டம் பேரளவில் வளர்ச்சியடைகிறது. மக்களிடையே உன்னத நிலையை எய்திடும் வண்ணம் உயர்நிலையையும் ஆட்டக்காரர்களுக்கு அளிக்கிறது.

இந்தியாவிலே கிரிக்கெட் வளர்ந்திருக்கும் நிலையினைப் பார்த்தால், நமது தேசிய ஆட்டமாக விளங்குகிற வளைகோல் பந்தாட்டத்தைவிட, ஒருபடி மேலே சென்று, உலக அரங்கிலே உன்னத இடத்தை வகிக்கும் பெருமையுடன் விளங்குகின்றது. உண்மையிலேயே மிகவும் பிரசித்திப் பெற்ற ஆட்டமாகத்தான் கிரிக்கெட் இன்று விளங்குகிறது.

ரஞ்சிக்கோப்பைக்கான போட்டியைப் போலவே, வேறு பல முதல்தரமான போட்டிகளும் ஒவ்வொரு புகழ் பெற்ற கோப்பைக்காகப் போட்டியிடும் வகையிலே சிறப்புப் பெற்றுத் திகழ்கின்றது.

துலிப்கேடயம் (Duleep Trophy); இரானி கேடயம் (Irani Trophy); டியோதர் கேடயம் (Deodhar Trophy), போன்றவை முக்கிய போட்டிகளுக்கான கேடயங்களாகும்.

அதுபோலவே கூர்பிகார் கேடயம்; (Cooch-behar Trophy), சி.கே. நாயுடு கேடயம் (C.K. Nayudu Trophy) ரோகிண்டன் பாரியர் கேடயம் (Rohinton Baria Trophy) விஸ்ஸி கேடயம்; (Vizzy Trophy) போன்ற கேடயங்கள் பள்ளிகளுக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் இடையே நடைபெறும் போட்டி ஆட்டங்களுக்குரிய கேடயங்களாகப் பரிசளிக்கப்படுகின்றன.

கிரிக்கெட் ஆட்டம் ஒரு தனித்தன்மை வாய்ந்த ஆட்டமாகும். மிகவும் அமைதிவாய்ந்த, கொந்தளிப்பற்ற, கோலாகலமாக நடைபெறுகின்ற, பண்பாட்டை வளர்க்கின்ற

ஆட்டமாகவும் திகழ்கின்றது. ஆழ்ந்த பொறுமையையும் அதிகத் திறமையையும், சிறந்த திறன் நுணுக்கங்களையும் சீரிய கலை நுணுக்கமான ஆட்டமுறைகளையும் தன்னகத்தே அடக்கி வைத்திருக்கின்ற கிரிக்கெட் ஆட்டம், உலகிலேயே ஓர் உன்னத இடத்தையும், உயர்ந்த கெளரவத்தையும் பெற்று விளங்குகிறது என்றால், அது பெருமை மட்டுமன்று. அதுவே உண்மை என்றும் கூறலாம்; மகிழலாம்.



# 2. வளர்ச்சி வரலாறாகிறது!

கிரிக்கெட் ஆட்டத்தின் பொதுவான வளர்ச்சி பற்றியும், அவற்றிற்கான வாய்ப்புகளையும் வசதிகளையும் பற்றியும் முதற்பாகத்தில் விரிவாக அறிந்து கொண்டோம்.

கிரிக்கெட் ஆட்டத்தின் ஒவ்வொரு அமைப்பும், ஒவ்வொரு திறன் நுணுக்கமும் எவ்வெவ்வாறு, எந்தெந்த சூழ்நிலைகளில், எப்படி எப்படி எல்லாம் உருவாயின, வளாச்சி பெற்றன, விரிவடைந்தன, மேன்மை பெற்றன, மெருகேறின என்கின்ற குறிப்புகளையெல்லாம் இனிவரும் இரண்டாவது பகுதியில் உள்ள ஒவ்வொரு தலைப்பின் கீழும் நாம் காணலாம்.

1. கிரிக்கெட் வந்த வரலாறு
2. பந்தாடும் மட்டையின் பரிணாமம்.
3. பந்தும் பந்தெறி தவணையும்
4. காலுறையும் கையுறையும்
5. பந்தும் பந்தெறி முறையும்
6. எட்டாத பந்தெறி எப்படி வந்தது?
7. விக்கெட்டின் முன்னே கால்
8. பந்தாடும் தரையும் நிலையும்
9. ஆட்டமும் தொடக்கமும்
10. அடித்தாடும் எல்லைக்கோடு
11. ஓட்டத்தைக் குறித்த முறைகள்

## 1. விக்கெட் வந்த வரலாறு (WICKET)

நான்கைந்து நாட்களாக இருந்தாலும், வெயில், மழை பனி, குளிர் என்று இயற்கை சூழ்நிலை எவ்வாறு திரிந்தாலும், எல்லாவற்றையும் பொருட்படுத்தாது, எந்த நிலையிலும் உற்சாகம் குறையாது, பார்த்து ரசித்து மகிழும் லட்சோபலட்சம் பார்வையாளர்களைத் தன்னகத்தே கொண்டு புகழ்பெற்று விளங்குவது கிரிக்கெட் ஆட்டமாகும்.




குறிக்கம்பமாகத் தோன்றிய கிரிக்கெட் எவ்வாறு பரிணாம வளர்ச்சி பெற்றது என்பதைத்தான் முதல் பக்கத்தில் உள்ள படம் விளக்குகிறது.

கிரிக்கெட் ஆட்டத்தில் கீர்த்தி மிக்கப் பொருளாக விளங்குவது விக்கெட் ஆகும். கிரிக்கெட் ஆட்டத்தின் நோக்கமே, எதிராட்டக்காரர் காத்து நின்று விளையாடுகின்ற விக்கெட்டை, எப்படியும் வீழ்த்தி, ஆட்டக்காரரை ஆட்டமிழக்கச் (Out) செய்துவிட வேண்டும் என்பது தான்.

இத்தகைய குறிக்கோளுக்கு இலக்காக நிற்கும் விக்கெட் வளர்ந்த விதமே, வேடிக்கையாகத்தான்

அமைந்திருக்கிறது. ஆரம்பக்காலத்தில், விக்கெட் என்பதே கிடையாது. ஆட்டக்காரர்கள், இரண்டு வட்டமான குழிகளைத் தோண்டிக் கொண்டு ஆடினார்கள். குழிக்கு முன்னால் 46 அங்குலத்தில் ஒரு எல்லைக்கோடு **(Crease)** இருக்கும். அடித்தாடுபவர் **(Batter)** அந்த எல்லைக்கோட்டுக்கு அப்பால் நிற்கும் போது பந்தை உருட்டிக் குழியில் விட்டுவிட்டால், ஆட்டக்காரர் ஆட்டமிழப்பார். அந்தக் குழிகள்தான் ஆரம்ப விக்கெட்டாகும்.

பந்தை அடிப்பதில், அதிக லாவகமும் குறியும் வந்து விட்டதாலே, பந்தும் அடிபட்டு அதிக தூரம் சென்றது. பந்தெடுக்க ஓடும் ஆட்டக்காரர்களுக்கு, தூரத்தில் இருந்து பார்த்த போது, குழிகள் கண்ணுக்கு தெரியாது போனதால் பந்தைக் குறிபார்த்து எறியமுடியவில்லை என்றதோர் குறை இருந்ததால், குழி தெரிவதற்காக அதிலே ஒரு குச்சியை ஊன்ற முதலில் முடிவு செய்தனர்.

இப்போது, அந்தக் கம்பினைக் குறிபார்த்து அடித்துவிட்டால், (அவர் எல்லைக்கு வெளியே இருந்தாலும்) அடித்தாடும் ஆட்டக்காரர் ஆட்டமிழந்து போய்விடுவார். காலம் இப்படியே இருக்கவில்லை. ஆட்டக்காரர்கள் மனமும் அமைதியடைந்து விடவில்லை. பந்தும் அடித்தாடுபவர்களால் அதிக தூரத்திற்குச் செலுத்தப்பட்டபோது, ஒருகம்பு இருப்பது அவர்களுக்கு தெரியவில்லை. குறிபார்த்து அடிக்க ஒற்றைக் கம்பு உதவவும் இல்லை. எனவே, இன்னொரு கம்பு அதனுடைய துணையாகத் தேவைப்பட்டது.

1700 ஆம் ஆண்டு, இரண்டாவது குறிக்கம்பு **(Stump)** ஊன்றப்பட்டது. அந்த இரண்டு கம்புகளுக்கும் இடைவெளி 2 அடியாக வைக்கப்பட்டது. கம்புகளின் உயரம் 1 அடி இருந்தது. அதன் தலைப்பாகத்தில் ஒரு குறுக்குக் குச்சியை வைத்து விட்டனர். அப்பொழுது அதன் அமைப்பு இப்படி 'n' இருந்தது.

ஏறத்தாழ 75 ஆண்டுகள் இரண்டு கம்புகள் இருக்கும் விக்கெட்டே தொடர்ந்து இருந்து வந்தது. அந்நாட்களில் எந்தவிதமானப் பிரச்சினையும் எழவில்லை. 1775ம் ஆண்டு ஆர்ட்டிலரி மைதானத்தில் நடந்த ஒரு கிரிக்கெட் போட்டி ஆட்டத்தில்தான் புதிய பிரச்சினை ஒன்று தோன்றியது. அதுவும் இங்கிலாந்தில்தான்.

ஸ்மால் (Small) என்பவர் பந்தடித்தாடும் ஆட்டக்காரர் (Batsman). லம்பி (Lumpy) என்பவர் அப்பொழுது பந்தெறியாளர் (Bowler). லம்பி எறிந்த பந்தானது ஸ்மால் தடுத்தாடும் மட்டையில் படாமல், ஊன்றியுள்ள விக்கெட் கம்புகளையும் தொடாமல், இடையேயிருந்து இடைவெளிக்குள்ளே போய்க்கொண்டிருந்தது. போனது ஒரு முறையல்ல. பல முறை பந்தானது படாமல் போனதால் பிரச்சினை மிகுந்தது.

இவ்வளவு தூரம் இடைவெளி இருப்பதால்தானே, பந்தால் கம்புகளைத் தொட்டு வீழ்த்த முடியவில்லை என்பதால், இரண்டுக்கும் இடையில் மூன்றாவது ஒரு கம்பை ஊன்றி விட்டால், இடைவெளியையும் மூடலாம். விக்கெட்டும் முழுமை பெறும் என்று முடிவு கட்டிவிட்டனர்.

மூன்றாவது கம்பு வருவதற்கு முன்னே, இந்த இலக்குக்கு விக்கெட் என்ற பெயர் எவ்வாறு வந்தது என்பதையும் சற்று காண்போம். 'விக்கெட்' (Wicket) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு, 'கதவினுள் கதவு' அதாவது சிறு கதவு என்பதாகும். அதாவது பெரிய கதவு இருக்கும்போது, அதை அடிக்கடி திறக்கக்கூடாது என்பதற்காக, கதவில் ஒரு சிறிய நுழைவாயில் ஒன்றை அமைத்து அதனை பயன்படுத்துவார்கள். அந்த சிறு கதவுக்கே 'விக்கெட்' என்பது பெயராகும்.

இந்த இரண்டு குறிக்கம்பு அமைப்பும் சிறு கதவு போலவே அமைத்து விட்டிருந்தால், விக்கெட் என்றே அக்கால ஆட்டக்காரர்களால் அழைக்கப்பட்டது.

ஆர்வமுள்ளவர்கள் இங்கிலாந்து முழுமையும் இருந்தார்கள். அவர்கள் எல்லோரும் ஓரே மாதிரியாக விக்கெட்டை வைத்துக்கொண்டு ஆடவில்லை. வசதியுள்ளவர்கள், வசதி இல்லாதவர்கள் எல்லோரும், தங்களால் எந்த எந்தப் பொருட்களைக் கொண்டு உருவாக்க முடியுமோ அவற்றையே விக்கெட்டாக அமைத்துக்கொண்டு ஆடினார்கள்.

மூங்கில் குச்சிகளால் ஆன தட்டிகள் (Hurdle): கதவு (Gate); பின்புறம் சாய்ந்திட வசதியில்லாத ஆசன இருக்கை அதாவது முக்காலி (Stool); மரம் மற்றும் உயரமான கல் இவைகளே விக்கெட்டுகளாக அந்நாட்களில் ஆடுவோருக்குப் பயன்பட்டன.

1775ம் ஆண்டின் நிகழ்ச்சிக்குப் பிறகு, 3 குறிக் கம்புகள் ஊன்றப்பட்டு விக்கெட்டாக வடிவம் பெற்றது. மூன்று விக்கெட் கம்புகளையும் இணைக்க ஓரே ஒரு 'இணைப்பான்' Bail மட்டுமே பயன்படுத்தப்பட்டது. மூன்று கம்புகளை இணைக்கும் மேல் உள்ள குச்சிக்கு Bail என்று பெயர் வந்ததும் ஒரு காரணத்தோடுதான்.

சரிமட்டமாக உள்ள பலகைச் சட்டமானத்தை (Horizontal Rail) ஆங்கிலத்தில் Bail என்று கூறுவார்கள். இந்த நீண்ட மரச்சட்டமானது, ஆட்டு மந்தைகளை உள்ளே அடைத்து வைத்திருக்கின்ற தொழுவத்தின் (Sheep Pens) சிறிய கதவுகளை, மேற்புறத்தில் இணைத்து வைத்து உதவுகின்ற தன்மையில் அமைந்தவையாகும். அதாவது, சிறிய கதவு அடிக்கடி திறந்து கொள்ளாமல், இறுக்கமாக மேற்புறத்தில் அடித்தாற்போல் சேர்த்து வைக்க உதவுகின்ற வகையில் அமைந்ததாகும்.

அதுபோலவே, தரையில் ஊன்றி வைக்கப்படும் இரண்டு அல்லது மூன்று குறிக்கம்புகள் ஒன்றாக விழாமல் இணைந்து நிற்கவும், சேர்ந்தாற்போல் ஒரு தோற்றத்தை அளிக்கவும் உதவிய அமைப்பினாலே, இது Bail என்ற பெயரையே பெற்றுவிட்டது.

நாம் தமிழில் இதனை 'இணைப்பான்' என்று கூறுகிறோம். விக்கெட்டுக்குரிய மூன்று கம்புகளையும் இது இணைத்திருக்கும் தன்மையாலேயே இணைப்பான் என்ற பெயரைப் பெற்றிருக்கிறது. ஆரம்ப நாட்களில் தரையில் ஊன்றிய இரு கம்புகளுக்கு மேலே ஒரு கம்பாக (Stick) வைக்கப்பட்டது. அதற்குப் பிறகே, அது குச்சியின் நீண்ட வடிவத்திலிருந்து குறுகிய வடிவம் பெற்றது.

1785ம் ஆண்டுக்கு முன்னர் மூன்றாம் குச்சியாக இணைக்கும் தன்மை பெற்றிருந்த இணைப்பான் (Bail) விக்கெட்டின் அமைப்பும் வடிவும் மாற, தானும் குறுகிய அளவில் மாறத் தொடங்கியது. விக்கெட் எவ்வாறு மாற்றமடைந்தது என்பதை முதலில் தெரிந்து கொள்ளும்போது, இணைப்பானும் எவ்வாறு தோற்றம் பெற்றது என்பதும் நமக்குத் தானாகவே தெரிந்து விடுகிறது.

1700ம் ஆண்டுவரை 2 கம்புகளே விக்கெட்டாக இருந்தன. 1776ம் ஆண்டு, மூன்று கம்புகளாக மாறின. அப்பொழுது ஒவ்வொரு குறிக்கம்பின் (Stump) உயரமும் 22 அங்குலமாக இருந்தது. மூன்று குறிக்கம்புகளும் 16 அங்குலத்திற்குள்ளே ஊன்றப்பட, அவற்றின் மேலே ஒரே ஒரு இணைப்பான் மட்டுமே பொருத்தப்பட்டிருந்தது.

1798ம் ஆண்டு 3 கம்புகள் ஊன்றப்பட்டிருந்தன. அதன் உயரம் 22 அங்குலத்திலிருந்து 24 அங்குலமாக உயர்ந்தது. விக்கெட்டின் அகலம் 6 அங்குலத்திலிருந்து 7

அங்குலமாக விரிந்தது. கம்புகளின் மேற்புறத்தில் 2 இணைப்பான்கள் இடம் பெற்றன.

1819ம் ஆண்டு, விக்கெட் மீண்டும் ஒரு மாற்றத்தைப் பெற்றது. விக்கெட்டின் உயரம் 126 அங்குலமாகியது. ஆனால், அகலப்பகுதியில் எதுவும் மாற்றம் இல்லை.

1823ம் ஆண்டும், ஒரே ஒரு அங்குலம் விக்கெட் உயர்ந்தது. அதாவது 27 அங்குலம் உயரமாகியது. அத்துடன் விக்கெட்டின் அகலம் 7 அங்குலத்திலிருந்து 8 அங்குலமாக விரிவு அடைந்தது.

1931ம் ஆண்டு, விக்கெட்டின் உயரம் 28 அங்குலமாகவும், அகலம் 9 அங்குலமாகவும் வளர்ச்சியடைந்தது. இரண்டாக வந்த இணைப்பான்கள், இரண்டாகவே இருந்து விட்டன.

அதற்குப் பிறகு, விக்கெட்டின் உயரமும் அகலமும் மாறாமலே இருந்ததோடு, ஒவ்வொரு கம்பின் சுற்றளவும் 11/8 அங்குலம் இருக்க வேண்டும் என்ற சூழ்நிலை உருவாயிற்று.

விக்கெட்டின் தலைப்புறம் அமர்ந்திருக்கும் இணைப்பானும் 1786க்குப் பிறகு இரண்டு எண்ணிக்கையாக மாறிற்று. அதன் நீளம் 4 அங்குலம் என்றும், அவை கம்பின் மேலே 11/2 அங்குலத்திற்குமேல் உயர்ந்திருக்காமல் இருக்கவேண்டும் என்ற நியதியுடன் உருவம் பெற்றுத் திகழ்ந்தன.

விக்கெட்டின் அகலம் 9 அங்குலம் இருக்க வேண்டும் என்பது 1947ம் ஆண்டுவரை அவரவர் விருப்பமாக இருந்தது. பிறகு, அப்படித்தான் இருக்க வேண்டும் என்று முடிவாயிற்று.

இவ்வாறாக, விக்கெட்டானது மூன்று கம்புகளால் 9 அங்குல அகலமும், 28 அங்குல உயரமும் என்ற வடிவம் பெற்றிருக்கிறது.

## 2. பந்தாடும் மட்டையின் பரிணாமம் (BAT)

கிரிக்கெட் ஆட்டம் திடீரென்று தோன்றிவிட்டதோர் ஆட்டமல்ல. கொஞ்சங் கொஞ்சமாக மலர்ந்து மக்களிடையே வளர்ந்து, மாறியே இந்த நிலையை அடைந்திருக்கிறது.

பந்தெறியாளரின் (Bowler) நோக்கமெல்லாம் பந்தெறிந்து விக்கெட்டினை வீழ்த்திடவேண்டும் என்பதுதான். பந்தடித்தாடுபவரின் (Batsman) முழுநோக்கமெல்லாம் பந்தெறியாளரின் நோக்கத்தை வீழ்த்தி, பந்தை அடித்து விரட்டி, "ஓட்டங்கள்" (Runs) எவ்வளவு முடியுமோ, அத்தனையையும் எடுத்துவிட வேண்டும் என்பது தான். அவ்வாறு எறிபவரை எதிர்த்து செயல்படும் என்பது தான். அவ்வாறு எறிபவரை எதிர்த்து செயல்படும் பந்தாடுபவர்களுக்கு உதவிடும் உற்ற சாதனமாக விளங்குவதுதான் இந்தப் பந்தாடும் மட்டையாகும்.

கிரிக்கெட் ஆட்டத்தின் ஆரம்ப காலத்தில் பந்தாடும் மட்டைக்கென்று எந்தவித வடிவமும் இல்லை. எந்தவித உருவமும் இல்லை. இப்படி அமைந்திருக்க வேண்டும் என்ற விதிமுறைகளும் உருவாக்கப்படவில்லை. ஆட விரும்பியவர்கள் தாங்கள் விரும்பியதற்கேற்றவாறு உருவாக்கிய மட்டைகளுடன் 'பிரசன்னமாகி' விளையாடிவிட்டுப் போய்விடுவார்கள் அவ்வளவுதான். ஏனென்று கேட்பாரில்லை.

தொடக்க நாட்களில், வளைகோல் பந்தாட்டத்தில் (Hockey) பயன்படுத்தப்படும் ஆடுகோலைப் (Stick) போலவே, கிரிக்கெட் மட்டையும் தலைப்புறத்தில் வளைந்து நீண்ட கைப்பிடி உள்ளதாக அமைந்திருந்தது.

பிறகு, மரத்தாலான கனத்த மட்டைகள் ஆட்டக்காரர்களின் தேவைக்கேற்ப செய்து கொள்ளப்பட்டு பயன்படுத்தப்பட்டன. உயரத்திற்கும் அந்த கதிதான் இருந்தது,

இந்த தான்தோன்றித்தனமான நிலைமையை தூக்கியெறியத்தக்கதான சூழ்நிலை ஒன்று 1771ம் ஆண்டு தோன்றியது.

இங்கிலாந்தில், கிரிக்கெட் ஆட்டத்தின் ஆரம்ப நாட்களில், பந்தயம் கட்டிக்கொண்டு போட்டி நடத்தப்பெறுவது மிகவும் சகஜமான ஒன்றாகும். அதுபோல் 1771ம் ஆண்டு, ஹேம்பிள்டன் என்ற குழுவிற்கும் செர்ட்சி என்ற குழுவிற்கும், ஒரு போட்டிப் பந்தயம் நடைபெற்றது. அதற்காக 1000 ரூபாய்க்கு மேல் பந்தயப் பணம் கட்டப்பட்டிருந்தது.

செர்ட்சி குழுவைச் சேர்ந்தவர்கள் பந்தடித்தாடும் வாய்ப்பினைப் பெற்றிருந்தனர். அக்குழுவில் உள்ள தாமஸ் ஒய்ட் என்பவர் பந்தடித்தாடச் சென்றார். அவர் கொண்டு வந்திருந்த பந்தாடும் மட்டையோ, விக்கெட்டின் அகலம் எவ்வளவோ, அவ்வளவு அகலமானதாக அமைந்திருந்தது. விக்கெட்டின் முன்னால் அவர் பந்தாடும் மட்டையை வைத்துக் கொண்டு நின்று கொண்டாரேயானால், அந்த மட்டையைக் கடந்து, எறிகின்ற பந்து போகவே போகாது. தந்திரசாலியான தாமஸ் ஒய்ட் தயார் செய்து கொண்டு வந்த மட்டையைக் கண்டதும், ஹேம்பிள்டன் குழுவினர் கூச்சல் போடத் தொடங்கிவிட்டனர்.

கூச்சல் குழப்பமாகி, குழுவினரிடையே கொந்தளிப்பை உண்டு பண்ணியே விட்டது.

கூச்சல் குழப்பமாகி, குழுவினரிடையே கொந்தளிப்பும் ஏற்பட்டதால் பல பிரச்சனைகள் எழுந்தன. பிறகு, ஆங்கே சமாதானத்திற்கிடையே ஒரு புதிய விதி பிறந்தது. அதாவது பந்தாடும் மட்டையின் அகலமானது 4 1/4 அங்குலம் இருக்க வேண்டும். அதற்குமேல் இருக்கவே கூடாது. என்பதற்காக புதிய விதி பிறந்து, பந்தாடும் மட்டைக்கு புது வடிவம் கொடுத்தது

இவ்வாறு 1771ம் ஆண்டு 41/4 அங்குலமாக ஆக்கப்பட்ட மட்டையின் அளவே, இன்று வரை நீடித்து நிலவி வருகிறது. ஆனால், பந்தாடும் மட்டையின் உயரம் பற்றி யாருமே கவலைப்படவில்லை.

1835ம் ஆண்டு, ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த வார்விக் ஆர்ம்ஸ்ட்டார்ங் எனும் ஆட்டக்காரர் 38 அங்குல உயரமுள்ள ஒரு மட்டையுடன் விளையாட வந்தார்.அவரது எடை 22 ஸ்டோன் ஆகும். அதாவது 308 பவுண்டாகும். அவர் கையில் உள்ள சிறிய பந்தாடும் மட்டையைப் பார்த்த எட்மண்ட் பிளன்டன் (Edmund Blunden) என்பவர் கேலியாகக் குறிப்பிட்டார்.

'ஆர்ம்ஸ்ட்ராங் கொண்டுவந்த பந்தாடும் மட்டையோ (தேநீர் கலக்கும்) 'டீஸ்பூன்' போல் இருக்கிறது. அவர் பந்தெறியும் விதமோ (டிகாஷன் இல்லாத) சாதா டீ போல இருக்கிறது' என்பது தான். இது நடந்த ஆண்டு 1835 மட்டையின் அளவான 38 அங்குல உயரமே அன்றிலிருந்து இன்றுவரை அப்படியே மாறாமல் அமைந்து விட்டது.

பந்தாடும் மட்டையின் உயரமும் அகலமும் மாறிவிட்டது. அதன் எடை பற்றிய எந்தவித முடிவுக்கும் யாரும் வரவில்லை. ஆட்டம் தொடர்ந்து சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு தான் வந்தது.

19ம் நூற்றாண்டின் சிறந்த கிரிக்கெட் ஆட்டக்காரராக விளங்கிய 'வில்லியம் வார்டு' என்பவர், ஆஸ்திரேலியா சிறந்த ஆட்டக்காரரான டான் பிராட்மென் என்பவரைப் போல வல்லவர். அவர் உபயோகித்த மட்டையின் எடை 4 பவுண்டு 2 அவுன்சுகளாகும். அதற்குப் பிறகு, மட்டை செய்யப் பயன்படுகின்ற மரமாக வில்லோ (Willow) என்பது தான் பலவிதப் பரிசோதனைகளுக்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்டது.

மட்டையின் அகலப்பகுதி வில்லோ மரத்தால் ஆனாலும், அதன் கைப்பிடி வேறு ஒரு பொருளால்தான் செய்யப்பட்டு வந்தது. 1853-ஆம் ஆண்டு நிக்சன் என்பவர் முதன் முதலாக பிரம்பினால் **(Cane)** முதல் முறையாக கைப்பிடியைத் தயார் செய்து தந்தார். அதுவே முதன் முதலாகவும் ஆடப்பட்டது. 1880-ம் ஆண்டு, அந்தக் கைப்பிடிக்கு ரப்பர் கவசம் **(Rubber Handle)** போடப்பட்டும் தயாரிக்கப்பட்டது.

இருநூறு ஆண்டுகளுக்குமேல் தொடர்ந்து பல மாற்றங்களைப் பெற்று இன்று விளங்கும் பந்தாடும் மட்டையின் வளர்ச்சியை, கீழே காணும் படத்தில் நீங்கள் காணலாம்.



1. ஆரம்பகாலத்தில் பயன்பட்டது. (1750).
2. 18-ம் நூற்றாண்டில் பயன்பட்ட வளைந்த மட்டை.
3. 1793-ம் ஆண்டில் பயன்பட்டது.
4. E. பேகட் என்பவர் பெயர் பொறிக்கப்பட்டது.
5. ராபர்ட் ராபிசன் என்பவருடையது.
6. W.G. கிரேஸ் என்பவரால் பயன்படுத்தப்பட்டது. (1900)
7. டென்னிஸ் கிராம்ப்டன் உபயோகப்படுத்தியது.(1947)

## 3. பந்தும், பந்தெறி தவணையும் (Ball & Over)

கிரிக்கெட் ஆட்டமானது ஆரம்ப நாட்களில் கிராமப்புற மக்களுக்கு வெறும் பொழுதுபோக்கு ஆட்டமாகத்தான் விளங்கி வந்தது. அப்பொழுது, இந்த ஆட்டத்திற்கென்று பந்து எதுவும் உருவாக்கப்படவில்லை.

உருண்டையான பொருள் அல்லது கோழி முட்டை வடிவமாக இருப்பதுபோல் உள்ள பொருள் எதுவாக இருந்தாலும், அதுவே ஆட்டத்திற்குரிய பந்தாக பயன்பட்டது என்று ஆரம்பகால வரலாறு கூறுகின்றது.

அதற்குப் பிறகு, சணல் அல்லது மயிர் நிறைக்கப் பெற்று தோலினால் தைக்கப்பட்டு செய்யப்பட்ட பந்துகள் தொடர்ந்து அந்நாட்களில் உதவி வந்தன.

கிரிக்கெட் பந்து உருவான நாட்களில், வெள்ளை நிறப் பந்தாகத்தான் அமைந்திருந்தது. அதுவுமின்றி, நீல நிறப் பந்துகளும் ஆட்டத்தில் பயன்பட்டு வந்தன. இங்கிலாந்தில் கென்ட் மாகாணத்தைச் சேர்ந்த பென்ஷர் எனும் பகுதியைச் சேர்ந்த பிரபுக் குடும்பத்தினர், கிரிக்கெட் பந்து செய்தனர். ஏறத்தாழ அது 1561-ம் ஆண்டு என்று வரலாற்றுக் குறிப்பொன்று சுட்டிக் காட்டிச் செல்கின்றது.

நீல வண்ணப் பந்துகள் பெண்கள் ஆடும் கிரிக்கெட் ஆட்டத்திலும், வெள்ளை நிறப் பந்துகள் கிரிக்கெட் சங்கத்தினர் ஆடிய கிரிக்கெட் போட்டிகளிலும் இடம் பெற்று வந்தன. கிரிக்கெட் பந்தினை சிவப்பு வண்ணத்தில் தோய்த்துத் தயாரிக்கும் முறை முதன்முதலாக 1843-ம் ஆண்டுதான் அறிமுகப்படுத்தப்பட்டது.

1744ம் ஆண்டில் அமைந்த கிரிக்கெட் ஆட்ட விதியின்படி, பந்தின் கனமானது 5லிருந்து 6 அவுன்சுக்குள்ளாக அமைக்கப்பட்டிருந்தது. ஆனால் தொடர்ந்து வந்த 1774ம்

ஆண்டின் விதிப்படி, பந்தின் கனம் சற்று எடை குறைக்கப்பட்டதாக மாற்றம் கொண்டது. அதாவது பந்தின் கனம் 5 1/2 லிருந்து 5 3/4 அவுன்சுக்குள்ளானதாகத்தான் அமைக்கப்படவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டது. இந்த எடையே, தற்போதைய கிரிக்கெட் பந்தின் எடையாகவும் அமைந்துவிட்டிருக்கிறது.

1838ம் ஆண்டுக்கு முன்னதாக, அவரவர் விருப்பம்போல பந்தின் சுற்றளவு அமைக்கப்பட்டு வந்தது. அதற்கும் ஒரு அளவினை அமைத்து, பந்தின் சுற்றளவு 9 லிருந்து 9 1/2 அங்குலத்திற்கு உட்பட்டதாகத்தான் இருக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்தனர். அந்த அமைப்பு மாறி, தற்போதுள்ள 8 13/16 லிருந்து 9 அங்குலத்திற்குட்பட்டதாக சுற்றளவு மாற்றப்பட்டு விட்டது.

தற்போதைய பந்தானது கார்க்காலும் முறுக்கு நூலாலும் அழுத்தமுடன் கட்டப்பட்டு, தோலினால் மூடப்பட்டு, இறுக்கமான முறையிலே தைக்கப்பெற்று, மின்னுகின்ற செவ்வண்ணத்தால் உருவாக்கப்படுகிறது.

பந்தின் அமைப்பும் வண்ணமும் வடிவமும் மாறி வந்தது போலவே, பந்தெறி முறையும் தவணையும் (Over) மாறிமாறியே வந்திருக்கிறது. இது, ஆட்டத்தில் ஆட்டக்காரர்கள் கொண்டிருந்த ஆர்வத்தையும், ஆட்டத்தின் வளர்ச்சியையுமே குறிக்கிறது.

ஆங்கிலத்திலே Over எனும் சொல்லுக்கு ஆங்கில அகராதியில், மேலே, மேலும், அதிகமாய், மிஞ்ச, தாண்டி, மீது என்று பல பொருளில் அர்த்தம் குறிக்கப்பட்டுள்ளது. கிரிக்கெட் ஆட்டத்தில் வரும் Over எனும் சொல்லுக்கு இப்பொருள்களில் எதுவும் ஏற்புடைத்தாக இல்லாமல் இருப்பதால், ஆட்ட முறைக்கேற்ப புதிய சொல் ஒன்றை உருவாக்க வேண்டி யிருந்தது. அதனால் இதற்கு 'பந்தெறி தவணை' என்று பெயர் தரப்பட்டிருக்கிறது.

ஆட்டம் முழுவதும் (கொஞ்சங் கொஞ்சமாக) எண்ணிக்கை அளவில், பந்தெறியப்படுவதாலும் தவணை முறை என்பது வாழ்க்கை நடைமுறையில் இருப்பதாலும், 'தவணை என்ற சொல்லையே இங்கு பயன்படுத்தி இருக்கிறேன்.

## பந்தெறி தவணை (Over)

கிரிக்கெட் ஆட்டத்தின் வரலாற்றில் 1744ம் ஆண்டு மிகச்சிறப்பான ஆண்டாக அமைந்திருக்கிறது. கிரிக்கெட் ஆட்டத்திற்கான ஒரு புதிய மறுமலர்ச்சி மிகுந்த வடிவம் கொடுக்கத்தக்க வழிகள் அமைக்கப்பட்ட ஆண்டாக இது இருப்பதே காரணம்.

1744ம் ஆண்டு விதியின்படி ஒரு பந்தெறி தவணைக்கு 4 முறை பந்தெறிவதற்கே அனுமதிக்கப்பட்டிருந்தது. ஆரம்ப காலத்தில் இவ்வாறு தொடங்கிய முறையானது பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில், இங்கிலாந்து நாட்டின் கிராமப்புற கிரிக்கெட் ஆட்டங்களில் ஒரு தவணையில் 6 முறை பந்தெறியும் பழக்கம் இருந்து வந்ததாகவும் அறியப்படுகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்காலப் பகுதியில், ஒரு பந்தெறி தவணைக்கு 5 பந்தெறிகள் அல்லது 6 பந்தெறிகள் அனுமதிக்கப்பட்டிருந்தது. ஆனால், இது அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதல்ல. என்றாலும் எல்லா ஆட்டக்காரர்களும் இதையே ஏற்று ஆடிக்கொண்டிருந்தனர். இந்த 5 அல்லது 6 பந்தெறி வாய்ப்பு முறை 1884-85ம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டது.

ஆஸ்திரேலியாவின் முதல் தர போட்டி ஆட்டங்களின் 6 முறை பந்தெறியும் ஆட்டமுறை இருந்து வந்தது என்றாலும், ஆஸ்திரேலியா 1918ம் ஆண்டு 8 முறை பந்தெறியும் வாய்ப்பினை அறிமுகப்படுத்திவிடத் தொடங்கி விட்டது.

ஆஸ்திரேலியாவைப் பின்பற்றி இங்கிலாந்து ஆட முயற்சி செய்தது. ஆனால், இரண்டாம் உலகப் போர் வந்து அவர்கள் அதனைத் தொடரவிடாமல் செய்து விட்டது. காரணம் இங்கிலாந்து போரில் ஈடுபட்டிருக்கும்போது ஆட்டத்தின் நிலை எப்படி முன்னேறும்?

இதனால், இங்கிலாந்து மீண்டும் 6 முறை பந்தெறி வாய்ப்புமுறைக்கே சென்றுவிட்டது. 1920ம் ஆண்டிலிருந்தே 6 முறை பந்தெறியும் வாய்ப்புள்ள தவணை முறை ஆட்டமும் பின் பற்றப்பட்டு வந்தது என்றும் ஒரு குறிப்பு கூறுகிறது.

இருந்தாலும், ஆஸ்திரேலியாவும், நியுசிலாந்தும் 8 முறை பந்தெறியும் ஆட்டமுறையையே ஏற்றுக்கொண்டு விட்டன. இதை ஒட்டி 1947ம் ஆண்டு ஒரு புதிய விதி தோன்றியது. ஆடுகின்ற இரண்டு குழுக்களின் தலைவர்களும் கூடிப்பேசி, பந்தெறி தவணையில் உள்ள பந்தெறிகளின் எண்ணிக்கையை முடிவு செய்து கொள்ளலாம் என்பது தான் புதிய விதியாகும்.

1744ம் விதியின்படி, ஒரு பந்தெறியாளர் (Bowler) ஒரு முறை ஆட்டத்தில் (Inning) ஒரு முறைக்குமேல் பக்கம் மாற்றிக்கொள்ளக்கூடாது. ஆனால், 1870ம் ஆண்டு, இரண்டு முறை மாற்றிக்கொள்ளலாம் என்று அனுமதிக்கப்பட்டது. பக்கம் மாற்றிக்கொள்ளும் முறையையே 1889-ம் ஆண்டிலிருந்து நீக்கியும் தொடர்ந்தாற்போல் இருபுறமிருந்தும் பந்தெறியும் உரிமையையும் அவ்விதி நீக்கிவிட்டது.

1838-ம் ஆண்டுவரை, ஒரு பந்தெறியாளர் இரண்டு முறை சோதனையாக எறிந்து பார்த்துக்கொள்ளலாம் (Trial or Practice Balls) என்று அமைக்கப்பட்டிருந்தது நீக்கப்பட்டது.

இவ்வாறு, பந்திலும் பந்தெறி தவணையிலும் மாற்றங்கள் ஏற்பட்டு தற்பொழுது ஆட்டம் சிறந்த மறுமலர்ச்சியைப் பெற்றிருக்கிறது.

## 4. காலுறையும் கையுறையும்(Pads & Gloves)

கிரிக்கெட் ஆட்டத்தில் பந்தடி ஆட்டக்காராகப் (Batsman) பந்தாடும் இடம் நோக்கிப் (Pitch) போகின்ற ஒரு ஆட்டக்காரரைப் பார்த்தால், 'அலங்கார புருஷராக' அவர் இருப்பதை நாம் காணலாம்.

தலையிலே தொப்பி, உள்ளே மார்புக் கவசம், இன்னும் சற்றுக் கீழே இறங்கி வந்தால் அடிவயிற்றுக் காப்பான் (Abdominal Guard) கைகளை மூடிய கையுறை, அதற்குள்ளே மெல்லுறை, தொடை காக்கும் மெத்தை, முன்கால் காக்கும் காலுறை, தடித்த காலணிகள் இப்படியாக ஆடச் செல்லும் பாதுகாப்பு முறைகளும் ஒரே நாளில் கிரிக்கெட் ஆட்டத்தில் உருவாகி வந்து விடவில்லை.

சரித்திர ஆசிரியர் விவரிப்பது போல், 'கிரிக்கெட் ஆட்டம் பிறக்கவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக உருவாகி வளர்ந்தது'. என்பதுதான் வரலாறு கூறும் உண்மையாகும். அதே தன்மையில்தான் கையுறைகளும், காலுறைகளும் ஆட்டத்தில் இடம் பெற்று, மெருகேறி இவ்வாறு உருப்பெற்று இருக்கின்றன.

பந்தெறியும் (Bowling) வேகத்தை 1933-ம் ஆண்டில் இங்கிலாந்தில் கணக்கெடுத்தபோது, நாட்டிங்காம்ஷயர் என்னும் பகுதியைச் சேர்ந்த ஹரால்டு லார்வுட் (Harold larwood) என்னும் பந்தெறி வீச்சாளர், மணிக்கு 148.8 கிலோ மீட்டர் வேகத்தில் எறிந்தார் என்ற வரலாற்றுச் சாதனையை ஜே.எம்.ஜோடி (J.M. Jodey) என்பவர் தன் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வளவு கடுமையான வேகவீச்சுப் பந்தை வெறுங்காலால் யாரால் பயமில்லாமல் தடுத்து ஆடுவதற்கு எதிரே நிற்க முடியும்? இம்மாதிரிப் பந்தினை வேகமாக

எறிவார்கள் என்று எதிர்பார்த்துத்தானோ என்னவோ, இதற்கு முன்னேயே இப்படித் தற்காத்துக் கொண்டாடும் உறைகளை கண்டுபிடித்திருப்பார்களோ என்று தான் இன்று எண்ண வேண்டியிருக்கிறது?

ஆரம்ப காலத்தில் பந்தெறியாளர்கள் (Bowler) இப்பொழுது போல் கைசுழற்றி எறியாமல், கீழே உருட்டித்தான் எறிந்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது பந்தை எளிதாகத் தடுத்தாடிக் கொண்டிருந்தார்கள் ஆட்டக்காரர்கள். நாளாக நாளாக பந்தெறியும் வேகத்தில் விரைவு கூடி விடவே, அதனை தடுத்தாட ஒரு வழியைக் கண்டுபிடிக்க ஒரு சிலர் முனைந்தனர்.

1880ம் ஆண்டில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. சர்ரே மாகாணத்தைச் சேர்ந்த ஃபார்ன்காம் எனும் பகுதியில் வாழ்ந்த ராபர்ட் ராபின்சன் என்பவர், தனது ஒரு காலில் மெல்லிய பலகைத் துண்டுகளை வைத்து, தோல்பட்டையால் கட்டிக் கொண்டு விளையாட வந்து சேர்ந்தார். கூடி நின்றவர்கள் கைகொட்டி நகைத்தனர். 'இப்படி ஒரு கண்டுபிடிப்பா' என்று ராபின்சனின் நண்பர்கள் சிரித்தனர்.

கண்டவர்கள் அனைவரும் கேலிசெய்தார்களே தவிர, அவர் காலில் கட்டிக்கொண்டு பாதுகாப்புடன் ஆடிய காட்சியானது அவர்கள் மனதைவிட்டு மாறவோ மறையவோ இல்லை. நீங்காத நினைவாக அந்த நிகழ்ச்சி கிரிக்கெட் ஆட்ட உலகில் கொடிகட்டிப் பறந்ததன் விளைவு, 1841ம் ஆண்டு, ஒரு புதிய அமைப்பில் காலுறையைக் கொண்டு வந்தீது.

நாட்டிங்காம்ஷயரைச் சேர்ந்த தாமஸ் நிக்சன் என்பவர், கார்க்கால் ஆன புதிய காலுறைகளை தயார் செய்து கொண்டு வந்து ஆடினார். இருந்தாலும் முந்தைய உறைகளை விட இது திருந்திய வடிவம் பெற்றிருந்ததே தவிர திருப்திகரமானதாக அமையவில்லை. என்றாலும், ஆட்டத்தில் இம்முறை இதமாக இடம்பெற்றுக்கொண்டது.

ஆக்ஸ்போர்டைச் சேர்ந்த H. டாபினி (H. Daubeny) என்பவர் நல்ல முறையான காலுறைகளைக் கண்டுபிடித்தார் என்ற புகழை சூடிக்கொண்டார், என்று 'விஸ்டன்' என்ற பத்திரிக்கை புகழாரம் சூட்டுகிறது. அதன் பிறகே, நல்ல முறையில் இலேசாக இருப்பது போலவும், மெத்தை நிறைந்ததாகவும், பல அளவுகளில் உள்ளது போலவும் அமைக்கப்பட்டு, இன்றைய ஆட்டத்தில் முக்கியமான ஒன்றாக காலுறைகள் கோலோச்சி வருகின்றன.

**கையுறைகள் :**

காலுறைகள் போலவே, கையுறைகளும் ஆட்டத்தில் இடம்பெறக் காரணமாயிருந்தது, கை சுற்றி வேகமாகப் போடும் பந்து வீச்சுதான். 1835ம் ஆண்டு பெலிக்ஸ் வானோ ஸ்டார்ட் (Felix Wanostrocht) என்பவர்தான் முதன் முதலாக கையுறைகள் (Gloves) தயாரித்துப் பயன்படுத்தினார் என்ற பெருமையைப் பெற்றுக்கொண்டிருக்கிறார். டேனியல் டே (Daniel Day) என்பவர்தான் விரைவுப் பந்து வீச்சின் வேகத்திற்கு ஈடாக, ரப்பர் குழாய்களால் ஆனக் கையுறைகளைத் தயார் செய்தார் என்று பலர் கூறினாலும், ஃபெலிக்ஸ் தான் முதலில் பயன்படுத்தினார் என்றே வரலாறு கூறுகிறது.

ஃபெலிக்ஸ், குழந்தைகள் போட்டுக்கொள்கின்ற கையுறைகளில் சிறுசிறு ரப்பர்த் துண்டுகளை பதித்து 1835ம் ஆண்டு நடந்த கிரிக்கெட் போட்டியில் பயன்படுத்தினார் என்பதே அந்த வரலாற்றுக் குறிப்பு. அதன் பிறகு புதிய கையுறைகள் கனத்த மெத்தை அமைப்புடன், பந்தாட்டக்காரரின் விரல்களுக்குப் பாதுகாப்பாக தடித்த அளவில் செய்யப்பட்ட அமைப்புடன் உருவாக்கப்பட்டன.

அஃதேபோல், விக்கெட் காப்பாளருக்கும், கையுறைகள் தேவை என்பதன் முடிவாக, 1848ம் ஆண்டு, டியூக்ஸ்

கம்பெனியரால் தயாரித்தளிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 1850 ம் ஆண்டு, விக்கெட் காப்பாளருக்கு உட்கவசம் வேறு தயாரித்துத் தரப்பட்டது. அதுவே மெல்லிய பருத்தி நூலாலான உட்கையுறைகளாக (Inner Gloves) மாறியது. ஆட்டத்தின் போது, அடிக்கடி நீரில் நனைக்கப்பட்டு ஈரமாகவே பயன்படுத்தப்படுகிறது.

அதற்குப் பிறகு, அடிவயிற்றுக் காப்பானும் காலப்போக்கில் ஆடுவோருக்கு அபயம் அளிப்பதற்காக பயன் படுத்தப்பட்டது. இவ்வாறாக ஒருபுறம் பந்துவீச்சில் வேகமும் விறுவிறுப்பும் ஏற்பட்டு, எதிராட்டக்காரர் காக்கின்ற விக்கெட்டை வீழ்த்த முயற்சிகள் தொடர்ந்தபோது, மறுபுறம் விக்கெட்டைக் காத்து நிற்கவும், வேகமாக ஓடிவரும் பந்தை அடித்து விரட்டி ஓட்டமெடுக்கவும் மேற்கொண்ட முயற்சியில் தன் தேகத்தின் பாதுகாப்பிற்காகவும், தேவையான இடங்களுக்கெல்லாம் உறைகள் மாட்டி 'காப்பான்களாக' (Guards) மாற்றிக்கொண்டு ஆடினர்.

பார்ப்பதற்கு அழகாகக் காட்சி தருகின்ற காலுறைகள் கையுறைகள் வருவதற்குக் காரணமாயிருந்த பந்து வீச்சின் வளர்ச்சி பற்றி இனி காண்போம்.

## 5. பந்தெறி முறை (BOWLING)

கிரிக்கெட் ஆட்டத்தில் பந்தெறிவதும், எறிந்து வரும் பந்தை மட்டையால் அடித்து அனுப்புவதும் அடித்தாடிய பந்தைத் தடுத்தாடி விக்கெட்டைக் குறிபார்த்து எறிவதும் தான் முக்கியத் திறன் நுணுக்க முறைகள் என்பது எல்லோருக்கும் தெரியும். இந்த பந்தெறி முறை, எத்தனை முறை மாறி மாறி, எவ்வளவு தடவை சிக்கலுக்கும், சச்சரவுக்கும், பிரச்சினைகளுக்கும் ஆளாகி, ஆர்ப்பாட்டம் நிறைந்த விசுவரூபம் எடுத்து, விளையாட்டு

வல்லுநர்களைக் கலக்கித் தெளியவைத்து, நல்லதொரு முடிவினை எடுக்க வைத்தது என்ற வரலாற்றுக் குறிப்புக்களைப் படிக்கும் போது, ஒரு பெரும் திகில் மிக்கக் கதை ஒன்றைப் படிப்பது போன்ற உணர்வினை நாம் பெறுகிறோம்.

கிரிக்கெட் ஆட்டம் மெல்ல மெல்ல வளர்ந்து வரத் தொடங்கிய நாட்களில், பந்தடிக்கும் ஆட்டக்காரருக்கு எதிராகப் பந்தெறியும் ஆட்டக்காரர்கள், கீழாக கையைக் கொண்டு சென்று உருட்டுவது போல பந்தை எறிந்தார்கள். (Under Arm Bowling) விக்கெட்டுகள் புல் தரையில் ஊன்றி வைக்கப்பட்டிருந்தபோது, பந்து புல்லில் பட்டு பலவாறு பல பக்கமாகத் திரும்பி விரைந்து செல்லும் போது, (Turn) வளைந்த தடியை மட்டையாகக் கொண்டு அடித்தாடத் தடுமாறிய காலமாக, ஆரம்ப கால ஆட்ட முறை அமைந்திருந்தது.

விக்கெட்டுகள் திருத்தமுற அமைக்கப் பெற்று, சீராக மாறியபோது, கீழாக எறிந்து ஆடிய எறிமுறை பலனளிக்கவில்லை. மாறாக, அடித்தாடும் ஆட்டக்காரருக்கு விரைந்து அடித்தாடி ஓட்டம் எடுக்க அது லாவகமாக அமைந்து விட்டிருந்தது. அதனால், பந்தெறியும் முறையில் புதுமையாக மாற்றம் இருந்தால் தான், அடித்தாடுவோரை ஆட்டமிழக்கச் செய்யமுடியும் என்ற அவசியமும் கட்டாயமும் அவர்களுக்கு ஏற்பட்டது.

கீழாக எறிவதற்குப் பதிலாக, கையை வளைத்து வட்டமிட்டு எறியும் எறி முறை (Round arm Bowling) 1807ம் ஆண்டு புதிதாக ஒன்று தோன்றியது. அதைத் தொடங்கி வைத்தவர் இங்கிலாந்து நாட்டிலுள்ள கென்ட் மாகாணத்தைச் சேர்ந்த ஜான் வில்லிஸ். (John Willies)

என்பவர், அது போன்ற அரிய யோசனை எப்படித் தோன்றியது என்றால், கேட்க ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

வீட்டிலே கிரிக்கெட் ஆட்டத்தை ஜான்வில்லிஸ் விளையாடிப் பழகிக் கொண்டிருந்தபோது, அவரது தங்கை கிறிஸ்டினா என்பவள், பந்தெறிந்து கொண்டிருந்தாள். கிறிஸ்டினா அணிந்திருந்த கவுன் கம்பி போன்றவற்றால் (Wire) சுற்றிலும் பின்னப்பட்டு, குடை ராட்டினம் போன்ற அமைப்பில் சுற்றளவில் விரிந்து இருநத்தால் (Crinoline). பந்தைக் கீழாகத் தூக்கி எறிய முடியாமல் கவுன் தடுத்தபோது, அவள் கையை வளைத்து பக்கவாட்டிலிருந்து தான் எறிய வேண்டியிருந்தது. அப்படித்தான் எறிய முடிந்தது.

பந்தடித்துக் கொண்டிருந்த ஜான்வில்லிசுக்கு இது ஆச்சரியமாக இல்லாமல், இப்படி எறிந்து ஆடினால் என்ன? என்று எண்ணத் தோன்றியது. அதையே நன்கு பழகிக் கொண்டு, பல ஆண்டுகள் எறிந்தாடிக்கொண்டிருந்தார். ஆனால் 1822ம் ஆண்டில் நடந்த போட்டிகளில், ஜான் வில்லிஸ் புதுமாதிரி யாக பந்து எறிந்தபோது,'முறையிலா பந்தெறி' (No Ball) என்று நடுவர்கள் கூறியதால், கோபமடைந்த ஜான்வில்லிஸ் மைதானத்தை விட்டே வெளியேறிவிட்டார். அவர் சென்ற விதத்தைக் கூற வந்த ஒரு சரித்திர ஆசிரியர், 'கோபமடைந்த ஜான், தன் குதிரைமீது ஏறிக்கொண்டு, வெளியேறினார். மைதானத்தை விட்டா! அல்ல! கிரிக்கெட் சரித்திரத்தை விட்டே' என்கிறார்.

ஜான் வில்லிஸ் இறந்தபோது, அவரது கல்லறையில், 'ஆண்மை நிறைந்த ஆட்டத்தின் தாளாளர்போல் ஆடிய ஜான் வில்லிஸ், கைவளைத்து எறிகின்ற ஆட்டமுறையை முதன் முறையாகக் கண்டு பிடித்து ஆடினார்' என்று எழுதப்பட்டிருந்தது.

ஜான் வில்லிஸ் வெளியேறினாலும், பந்தெறிமுறையை யாரும் தங்கள் நினைவிலிருந்து வெளியேற்றிவிடவில்லை. 1827ம்

ஆண்டு வரை தொடர்ந்து இந்த கைவளைத்து எறியும் ஆட்சிமுறை தொடர்ந்து தான் வந்தது. 1827ம் ஆண்டு, இங்கிலாந்துக்கும் சசக்ஸ் என்ற இரு குழுக்களுக்கும் மூன்று போட்டிகள் சோதனையாக (புது எறிமுறையைப் பற்றி) நடைபெற்றன. சசக்ஸ் பகுதியில் இருந்த வில்லியம் வில்லி ஓய்ட், ஜேம்ஸ் பிராட்ரிட்ஜ் இருவரும் சிறப்பான முறையில் புது எறியை எறிந்து காட்டினார்கள்.

இம்முறை சரிதான் என்று, மெரிலிபோன் கிரிக்கெட் சங்கமும் (M.C.C.) ஏற்றுக்கொண்டு அங்கீகரித்தது. 1928 ம் ஆண்டு இந்த விதிமுறை அமுலுக்கு வந்து, ஆட்டத்தில் பங்கு கொண்டது.

கை வளைத்து எறிகின்ற ஆட்டமுறை வந்தபோது, ஆடுகளங்கள் நன்றாகப் பாதுகாக்கப் பட்டுப் பராமரிக்கப்படாத நிலையினில்தான் இருந்தன. 1850ம் ஆண்டுவரை, கிரிக்கெட் மைதானத்தில் உள்ள புல்லினை ஆட்டு மந்தைகள் வந்து மேய்ந்தது. மேடு பள்ளம் நிறைந்த தரையாக மாற்றி வைத்திருக்கும் அவலநிலையிலே தான் மைதானங்களும் இருந்து வந்தன. என்றாலும், ஆட்டத்தில் மந்த நிலையே வராத, விறுவிறுப்பான வளர்ச்சி நிலைதான் தொடர்ந்து இருந்து வந்தது.

1862ம் ஆண்டு, பந்தெறிமுறையில் மேலும் ஒரு புதிய திருப்பம் உண்டாயிற்று, இங்கிலாந்து, சர்ரே எனும் இரு குழுக்கள் ஆடிய போட்டி ஆட்டம், ஓவல் மைதானத்தில் நடைபெற்றபோது, எட்கர் வில்லிஷர் (Edgar willisher) என்பவர், முழங்கைக்கு மேல் அவர் முன் கை வராமல் பந்தைச் சுழற்றி எறியும் தன்மைக்கு மாறாக, தோளுக்கு மேலே முன்கையை உயர்த்தி (Over hand Bowling) எறியத் தொடங்கினார். நின்றிருந்த நடுவர், அதை முறையிலா பந்தெறி என்று அறிவித்தார். கோபமடைந்த எட்கர்

மைதானத்தைவிட்டு வெளிவர, அவரது குழுவினரும் ஆட்டத்தை ஆடாமல் கூடவே வெளியேறி வந்தனர். அதனால் ஆட்டம் இடையிலே நின்று போனது.

இத்தகைய சூழ்நிலை அமைந்ததும், இதனை ஆராயவேண்டிய அவசியநிலைக்கு எம்.சி.சி.நிர்வாகிகள் ஆளாயினர். பல முறை சிந்தித்து, ஆராய்ந்து, கலந்துரையாடி, 1864ம் ஆண்டு ஜுன் மாதம் 16ந் தேதி, கையுயர்த்தி எறியும் முறை, விதிக்குட்பட்ட சரியான எறி முறைதான் என்று அங்கீகரித்தனர்.

கையுயர்த்தி எறிய எறிய, பந்தின் வேகம் அதிகமானதால், பந்தடித்தாடுவோரும் பாதுகாப்பாக ஆடவேண்டிய நிலைக்கு ஆளாயினர். பந்தாடும் தரையும் (Pitch) பள்ளம் மேடு இல்லாமல் இருக்க வேண்டும் என்ற அத்யாவசியமும் ஏற்பட்டது. அதன் பயனாக, 1870ம் ஆண்டு லார்ட் மைதானத்தில் இரும்புருளை (Roller) வைத்துப் பந்தாடும் தரையை உருட்டிவிடும் முறை முதன் முதலாகப் பயன்படுத்தப்பட்டது. அத்துடன் அல்லாமல் 1872ம் ஆண்டு, தரைப்பகுதியை உருட்டுவதோடு நின்று விடாமல், பத்திரமாக ஆட்டத்திற்கு முன்பு மூடிவைத்துக் காக்க வேண்டும் என்கிற புதிய முறையும் பிறந்தது.

சுழல் பந்தாக எறியும் முறையை (off-spin) இங்கிலாந்தைச் சேர்ந்த லாம்பர்ன் (lamburn) என்பவரும், விரைவாகப் பந்தை சுழலவிடும் எறிமுறையை (Swing Bowling) நோவா மேன் (Noah Mann) என்பார் கீழாகப் பந்தை எறியும் முறையிலும், எட்மண்ட் ஹிங்லி (Edmand Hinkly) என்பார் பந்தைக் கைவளைத்து எறிவதிலும், கிங், கிரிஸ்ட் (King & Hirst) என்பார் கையுயர்த்தி எறியும் முறையைக் கண்டுபிடித்து எறிந்தனர் என்ற பெருமையை அடைந்தனர்.

முறையிலா பந்தெறி என்பது எவ்வாறு தோன்றியது. பிறகு எவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டது. எவ்வாறு பந்தெறியும்

முறையில் புதிய நுணுக்கமும், திறமையும் ஏற்பட்டது என்பதையெல்லாம் மேலே கண்டோம். இனி எட்டாத பந்தெறி (Wide Ball) என்ற விதிமுறை எவ்வாறு ஏற்பட்டது என்பதை தொடர்ந்து காண்போம்.

## 6. எட்டாத பந்தெறி (Wide Ball)

1810 ஆம் ஆண்டில் ஒரு நாள், இங்கிலாந்து நகரில் உள்ள லார்டு எனும் கிரிக்கெட் மைானத்தில், ஒற்றை விக்கெட் போட்டி ஆட்டம் (Single Wicket Tournament) நடக்கவிருந்தது. அந்தப் போட்டியில் ஆடவிருந்த இரு குழுவினர்களும் மைதானத்திற்கு வந்திருந்தனர்.

ஒற்றை விக்கெட் போட்டியில், ஒரு குழுவிற்கு இரண்டு ஆட்டக்காரர்கள் தான் இருப்பார்கள். ஒருவர் பந்தெறிவார் (Bowl). இன்னொருவர் தடுத்தாடுவார் (Field). அடித்தாடும் ஆட்டக்காரர்களில் யாராவது ஒருவர் அவுட்டாகி ஆட்டமிழந்தாலும், அந்தக் குழு ஆடும் வாய்ப்பை இழந்து விடும். இந்த முறையில் அமைந்த போட்டிக்குரிய இரண்டு குழுவினர்தான் அன்று வந்திருந்தனர்.

ஃபிரடெரிக், ஹவார்டு என்பவர்கள் ஒரு குழுவினர், ஸ்கொயர், லாம்பர்ட் என்பவர்கள் மற்றொரு குழுவினர். விளையாட வந்திருந்த ஸ்கொயர் (Squire) எனும் ஆட்டக்காரருக்கு உடல் நலம் இல்லாத காரணத்தால், ஆட இயலாமல் இருந்தார். அதனால் இன்னொரு நாள் ஆடலாம் என்பதற்கு, எதிர்க்குழுவினர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. எதிர் குழுவைச் சேர்ந்த பிரடெரிக் என்பவர் இன்றே ஆடித் தான் ஆகவேண்டும் என்று வற்புறுத்தினார். 'ஆடினால் இன்றே ஆடவேண்டும். இல்லையேல் ஆட்டத்தில் தோற்றதாக ஒத்துக்கொள்ள வேண்டும்.' என்றும் வலியுறுத்தினார்.

'விளையாடிப் பார்த்துவிட வேண்டியதுதான். வேறு வழியில்லை' என்று ஸ்கொயர் லாம்பர்ட் குழு முடிவுசெய்தது. அதன்படி, பிரடெரிக் குழு பந்தாட (Batting) இருந்த பொழுது, லாம்பர்ட்தான் பந்தெறிபவராக இருந்தார்.

'விக்கெட்டுக்கு நேராகப் பந்தையெறிந்தால், எதிராட்டக்காரர் அடித்துவிட்டால், தன் பாங்கர் ஆடமுடியாது என்று எண்ணிய லாம்பர்ட், ஒரு தந்திரம் செய்தார். விக்கெட்டுக்கு நேராகப் பந்தை எறியாமல், அவருக்கு எட்டாமல் அதாவது எட்டி அடிக்க முடியாதவாறு பந்தை எறிந்து கொண்டேயிருந்தார். தொடர்ந்து அதேபோல் எறிந்து கொண்டிருந்ததால், பொறுமை இழந்து போன பந்தடித்தாடும் ஆட்டக்காரர், வேகமாக ஆடி தனது விக்கெட்டை இழந்தார் (Out). அத்துடன், போட்டியிலே தோற்றும் போனார்.

இந்த நிகழ்ச்சியே எட்டாத பந்தெறி என்ற விதிவருவதற்கு வழியமைத்துவிட்டது. கண்காணிக்கின்ற நடுவர்கள் குழம்பிப்போய் நிற்க, பந்தடித்தாடும் ஆட்டக்காரர்கள் என்ன செய்வது என்று திகைத்துபோய் நின்று தடுமாறி ஆடச்செய்த, இந்த எட்டாத பந்தெறிக்கு ஒரு விதியமைத்து, கட்டுக்குள் கொண்டுவந்துவிட வேண்டுமென்று வல்லுநர்கள் தீர்மானித்தனர்.

எட்டாத பந்தெறி என்றால் அதற்குத் தண்டனை தந்து தான் ஆக வேண்டும் என்ற சூழ்நிலையும் உருவாகியது. 1820 ஆம் ஆண்டு, எட்டாத பந்தெறி என்றால், எப்படி இருக்க வேண்டும் என்ற விதிமுறை ஒன்றை அமைத்து வரையறுத்து வைத்தனர். வந்தடையும் எல்லைக் கோட்டுக்கு (Return Crease) அப்பால் எறியப்படும் பந்தானது எட்டாத பந்தெறி என்று விதி அமைத்து வைத்தனர். இதிலே எடுக்கப்படுகின்ற ஓட்டங்கள் எல்லாம் பொய் ஓட்டங்கள் (Byes) என்ற தலைப்புள்ள குறிப்பில் 1828ம் ஆண்டு வரை குறிக்கப்பட்டு வந்தன.

அந்த காலவரையறையில், எட்டாத பந்தெறியை நிலைப்பந்து என்று கூறி, அதற்குத் தண்டனையாக அடித்தாடும் குழுவிற்கு (batting Side) ஒரு ஓட்டம் என்றும் கொடுத்து வந்தனர்.

அதற்கடுத்தபடியாக, எட்டாத பந்தெறிக்குள்ள விதிமுறை சற்று விரிவு பெற்றது. அதாவது, பந்தடித்தாடும் எல்லைக்கோடானது (Popping Crease) எட்டடி நீளமாக ஆக்கப்பட்டு, அந்தக் கோட்டிற்கு அப்பால் போய் பந்தெறியாளரது பந்து போனால், அதுவே எட்டாத பந்தெறி என்றும் முடிவு செய்தனர். அவ்வாறு போனாலே, எட்டாத பந்தெறி என்று சொல்லிவிடலாம் என்று நடுவருக்கும் தைரியமாகப் பணியாற்ற வழிகோலினர். அந்தப் பந்து நிலைப்பந்தல்ல, (Dead Ball) ஆட்டத்தில் ஆடப்படும் பந்தே என்றும் கூறி, ஆட்டத்தில் விறுவிறுப்பான நிலையை ஏற்படுத்தினர். அதற்குத் தண்டனையாக 'ஒரு ஓட்டம்' எதிர்க் குழுவிற்குத் தரப்பட்டது.

அதன்பின்னர், 1844ம் ஆண்டு, புதிய விதிமுறை ஒன்றும் புகுத்தப்பெற்றது. அதாவது, எட்டாத பந்தெறி என்று நடுவர் கூறிவிட்டால், பந்தடி ஆட்டக்காரர் முடிந்தவரை எத்தனை ஓட்டங்கள் வேண்டுமென்றாலும் ஓடி எடுத்துக் கொள்ளலாம் என்று அனுமதித்து விட்டனர். இதனால் அடித்தாடும் குழுவிற்கு அதிகமான பயன்கள் நிகழ்ந்தன.

இவ்வாறு விரிவு பெற்றுவிட்ட விதிமுறையானது, 1947 ஆம் ஆண்டுவரை தொடர்ந்து வந்தது. அவ்வப்போது பல சிக்கலான சூழ்நிலைகள் தோன்றினாலும், உள்ள விதியை வைத்துக்கொண்டே சமாளித்துவந்தனர். 1947ம் ஆண்டு, எட்டாத பந்தெறி என்றால், எப்படி இருக்க வேண்டும் என்று திட்டவட்டமாக விளக்கித் தெளியவைக்க, ஒரு விதிமாற்றத்தைப் புகுத்தினர்.

ஒரு பந்தடி ஆட்டக்காரர், தனது விக்கெட்டைக் காத்து நின்று கொண்டிருக்கும் நிலையில் இருந்து, எவ்வளவு முயற்சித்தாலும் பந்தைத் தனது பந்தாடும் மட்டையில் எட்டி அடிக்க முயற்சித்தும் எட்டாத தூரத்தில் அந்தப் பந்து எறியப்பட்டிருந்தால், அதுவே எட்டாத பந்தெறி என்று முடிவெடுக்குமாறு கூறினர்.

ஆகவே, நடுவர்களுக்கு மிகவும் எளிதாகக் கண்காணிக்கின்ற அளவுக்கு விதி நெகிழ்ந்து தந்தது. இன்னும் ஒரு இனிய குறிப்பினையும் இங்கே காணலாம். பந்தெறியாளரது கையிலிருந்து வருகிற பந்து, வேகமிழந்து, அடித்தாடுபவர் முன்னே வந்து கிடந்தால், அது எட்டாத பந்தெறி என்று சிலர் எண்ணினார்கள். அதை எட்டாத பந்தெறியல்ல, அடித்தாடுவோர் அது முறையான பந்தாகவே கருதி அடித்தாடிவிடலாம் என்ற விதிக்குறிப்பினையும் தந்தனர்.

இவ்வாறு பந்தெறி முறையில் எட்டாத பந்தெறி தோன்றி, புதுக் குழப்பத்தை விளைவித்து, பிறகு தெளியவைத்து, ஒரு முக்கிய விதியாகவே மாறிய வரலாற்றை மேலே கண்டோம். அடுத்த பகுதியில் 'விக்கெட்டின் முன்னே கால்' (LBW) என்ற விதி வளர்ந்த விதத்தைக் காணலாம்.

## 7. விக்கெட்டின் முன்னே கால் (L.B.W.)

விக்கெட்டின் முன்னே கால் இருந்ததா என்று பார்க்கப்பயன்படுகின்ற விதியானது, தோன்றிய நாளிலிருந்தே தொல்லைதரும் விதியாகத்தான் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. விளக்கத்திற்குரிய விதியாக அமையாமல், விவாதத்திற்குரிய விதியாக இருப்பதால், நடுவர்களுக்கு, விடுகின்ற ஒரு சவாலாகவே சதிராட்டம் போட்டுக்கொண்டு விளங்குகிறது.

கிரிக்கெட் குழந்தைப் பருவத்தில் இருந்த காலத்தில், வளைந்த மட்டைகளுடன் (Curved bat) பந்தை அடித்தாடிய போது, விக்கெட் முன்னால் நின்று கொண்டிருந்தபோது இந்தப் பிரச்சினை எழவே இல்லை. பந்தாடும் மட்டைகள் தங்கள் கூன் முதுகை தொலைத்து, நிமிர்ந்தவையாக மாறிய (Straight bat) போது, பிரச்சினைகளும் நிமிர்ந்து சிலிர்த்தெழுந்து கொண்டன.

வளைந்த பந்தாடும் மட்டையுடன் விளையாடியபோது பந்தை அடித்தாடத்தான் முடியுமே தவிர, நன்றாக ஒதுக்கித் தடுத்து நிறுத்திட முடியாது என்பதால், விக்கெட்டைக் காத்துக் கொள்ளும் தந்திரம் அப்பொழுது முளையாகக்கூட முளைக்கவில்லை. நிமிர்ந்த, தட்டையான அடிபாகம் கொண்ட பந்தாடும் மட்டை வந்தவுடன், அடித்தாடாமல் தேக்கியாட ஆரம்பித்து, விக்கெட்டருகில் நின்று நெடுநேரம் ஆடக்கூடிய அளவுக்கு நுணுக்கம் வளர்ந்துவிட்டது.

விக்கெட்டைக் காத்துக் கொள்ள முயன்றது தவறில்லை. பெருந்தன்மையுள்ள பண்பாளர்கள் ஆடுகின்ற ஆட்டம் என்று புகழப்பட்ட கிரிக்கெட் ஆட்டத்தில், வஞ்சகமாக சூழ்ச்சியாக, பந்தைக் காலால் தேக்கியபடி தடுத்தாட ஒரு சிலர் அக்காலத்தில் தலைப்பட்டார்கள். காலுறைகள் (Pads) கண்டுபிடிக்கப்பட்டு, கால்களில் கட்டியிருந்ததும், அவர்கள் கால்களினால் பந்தைத் தேக்கிக்கொள்ளுதல் மிகவும் கஷ்டமில்லாமல் இருந்தது.

நெஞ்சாரத் துணிந்து குறுக்கு வழியில் செல்லும் வஞ்ச மனத்தினராய் ஆடும் முறையினர் ஆட்டத்தைத் தடுக்கவே, 1774ம் ஆண்டு, ஒரு புதிய விதியை ஆட்ட வல்லுநர்கள் புகுத்தினார்கள்.

புதிய விதியானது, ஒரு பொறுமையான தன்மையில் பிறந்தது. ஒரு பந்தடி ஆட்டக்காரர் (Batsman) தனது விக்கெட்டைத் தாக்கப் போகின்ற பந்தைக் கால்களால் வேண்டுமென்றே தடுத்தால், அவர் ஆட்டமிழந்தவராகின்றார் (Out) என்பதுதான் அந்த விதி. நான்காண்டுகள் இந்த விதியே சிறந்த விதியாக விளங்கிக் கட்டுப்படுத்தியது என்றாலும், அதிலே பல சிக்கல்கள் கிளைத்தெழுவது போல் தோன்றியதால், புதிய மாற்றம் ஒன்றைச் செய்ய முனைந்தனர் ஆட்ட வல்லுநர்கள்.

1788-ஆம் ஆண்டு புதிய திருத்தம் ஒன்று விதியில் புகுந்தது. வேண்டுமென்றே தடுத்தால் என்ற வார்த்தையை நீக்கிவிட்டு, 'விக்கெட்டின் முன்னே பந்து விழுந்து, விக்கெட்டை நோக்கி வருகின்ற பந்தைத் 'தடுத்தால்' என்று திருத்திவைத்தனர். திருத்தம் பெற்றுக்கொண்ட விதியானது ஆட்டத்திற்குப் பொருத்தமில்லாதது போல் தோன்றியதனாலோ என்னவோ, வளர்ந்து வரும் தொடர்ந்து வரும் பிரச்சினையை அது தீர்த்து வைக்க இயலாததாக இருந்ததால், 1821-22ம் ஆண்டில் மேலும் ஒரு சிறு திருத்தம் இடையிலே செய்து செருகப்பட்டது.

விக்கெட்டின் முன்னே பந்து நேராக விழுந்து வர வேண்டிய அவசியமில்லை. ஆனால், விக்கெட்டிற்கு நேராகப் பந்தை எறிந்திருந்தால் போதும் (Delivered straight) என்கிற விதிதான் 1821-22ல் வந்தது.

நேராக வரவேண்டியது அவசியமில்லை; நேராகப் பந்தை எறிந்திருந்தால் போதும் என்கிற விதிக்கு உண்மையான அர்த்தத்தை நடுவர்களே புரிந்துகொள்ள முடியாமல் திணறத் தொடங்கி விட்டார்கள். குழப்பத்தைக் குவித்து வைக்கின்ற அளவுக்குக் குறித்துக் காட்டுகின்ற விதியை, எல்லோரும் ஏற்றுக்கொள்ளாமல் மறுப்புவிடுத்ததற்கேற்ப, 1839-ம் ஆண்டு. ஒரு புதிய நிலையை தெளிவு தர மீண்டும் ஏற்படுத்தினார்கள்.

அப்புதிய நிலையானது, 1788-ம் ஆண்டு இருந்த, விக்கெட்டின் முன்னே பந்து விழுந்து, விக்கெட்டை நோக்கி வருகின்ற பந்தைக் காலால் தடுத்தால், தடுத்தவர் ஆட்டமிழக்க வேண்டும், என்ற விதியையே மீண்டும் சரியானதென்று 1839-ல் ஏற்றுக் கொள்ள வைத்தனர்.

இந்த விதியை ஏற்றுக்கொண்டு, ஏறத்தாழ 49 ஆண்டு காலம் விளையாடியபோது, மெரிலிபோன் கிரிக்கெட் சங்கத்தினர் (M.C.C.) மீண்டும் ஒரு முறை, இந்த விதியைப் பற்றி, ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கிவிட்டனர். இந்த சிந்தனையின் பயனாக, விதி மீண்டும் ஒரு திருத்தத்தைப் பெற்றுத் தாங்கிக் கொண்டது.

'பந்தெறியாளரிடமிருந்து எறியப்பட்டுவரும் பந்தை, பந்தடி மட்டையில் தடுக்காமல் வேண்டுமென்றே உடலால், (Person) அல்லது காலால் தடுத்து விக்கெட்டைக் காத்துக் கொண்டு ஆடுதல், ஆட்டத்தின் உண்மையான உணர்வுக்கும், நீதிக்கும் நியாயத்திற்கும் அப்பாற்பட்ட செயலாகும்' என்று 1888ம் ஆண்டு விதிக்குப் புதிய வடிவத்தைத் தந்தனர், உணர்வையும் உண்மையான குறிக்கோளையும் மதித்தவர்கள் பண்புடனே ஆடத்தான் செய்தனர் என்றாலும், மாற்றம் பெற்ற விதி, முழுமையடையாமலே தொடர்ந்து வந்து கொண்டிருந்தது.

1902ம் ஆண்டு, மெரிலிபோன் கிரிக்கெட் சங்கத்தின் பொதுக்குழு கூட்டம், விதியை மாற்றியமைக்க முயன்று தோல்வி அடைந்தது. தோல்வியடைந்த சங்கத்தினரும் தொடர்ந்து பழைய விதியையே பின்பற்றி வந்தனர். அந்த இடைவெளி 35 ஆண்டுகளாகத் தொடர்ந்தது.

இரண்டாண்டுகள் சோதனையாக விதியமைத்துக் கொண்டு வந்த விதியை, 1937ம் ஆண்டு நடைமுறைக்குக் கொண்டுவந்தனர். அதாவது, பந்தெறியாளர் எறிகின்ற

பந்தானது, பந்தடி ஆட்டக்காரருக்கு இடப்புறமாக (offside) விழுந்து, பிறகு விக்கெட்டை நோக்கி வரும்போது, காலால் தடுத்தாடினால், அவர் ஆட்டமிழந்து விடுவார் என்பதுதான் அந்த விதியாகும்.

இந்த விதியே 1970லும் 1972லும் சற்று மாறி இன்றைய விதியாக மாறி, மறுமலர்ச்சி பெற்றிருக்கிறது. அத்தகைய விதியையே, கீழே கொடுத்திருக்கிறோம்.

பந்தெறியும் ஒரு விக்கெட் முனையிலிருந்து, தான் தடுத்தாடுகின்ற விக்கெட்டுக்கு நேராக இருந்து ஆடும்போது, தனது கையிலோ அல்லது பந்தாடும் மட்டையிலோ முதலில் பந்து படாமல்; அந்தப் பந்தானது இணைப்பான்களுக்கு (bails) மேலாக வந்தாலும், அதன் வழியில் குறுக்கிட்டு இடையிலே தடுத்தால், ஒரு விக்கெட்டிலிருந்து இன்னொரு விக்கெட்டுக்கு நேர்க்கோட்டு அமைப்பில் நேராக எறியப்பட்ட அந்தப் பந்து நேராக விக்கெட்டை நோக்கிச் சென்றிருக்கும் அல்லது ஆடுவோரின் வலப்புறத்தில் விழுந்த பந்தானது அவரது விக்கெட்டை நோக்கி வந்திருக்கும், அதனால் விக்கெட் விழுந்திருக்கும் என்று நடுவர் கருதினால், அபிப்ராயப்பட்டால், விக்கெட்டின் முன்னே கால் வைத்திருந்தார் என்ற குற்றத்திற்கு அந்த பந்தடி ஆட்டக்காரர் ஆளாகின்றார்.

'விக்கெட்டின் முன்னே கால்' எனும் விதி பற்றிய விளக்கமும் விவரமும் இப்படியாக மாறி மாறி வந்து வளர்ந்தது.

## 8. பந்தாடும் தரை (Pitch)

பந்தெறியாளர் ஓடிவந்து பந்தெறிய, அதைப் பந்தாடும் மட்டையுடன் நின்று தடுத்தாடும் ஆட்டக்காரர் ஆட முயலும் தரைப் பகுதியையே பந்தாடும் தரை என்கிறோம். தோன்றிய காலம் எது என்றால் வரலாற்றுக் குறிப்புக்கு அகப்படாமல்

கிரிக்கெட் ஆட்டம் வட்டம் போட்டுக் கொண்டிருந்தாலும், ஒரு சில விவரமான குறிப்புக்கள் கிடைத்தவற்றில், ஆச்சரியமான உண்மையை நமக்குத் தெரிவிப்பது இந்தப் பந்தாடும் தரைதான்.

கிரிக்கெட் ஆட்டத்திற்கென்று பல விதிகள் 1744ம் ஆண்டு தான் உருவாக்கப்பட்டன. அந்தத் தருணத்தில் பந்தாடும் தரையானது இரண்டு விக்கெட்டுகளுக்கும் இடைப்பட்ட தூரமாக அமைக்கப்பட்டு, அதன் நீளம் 22 கெஜம் என்று தீர்மானிக்கப்பட்டது. அதுவே இத்தனை ஆண்டுகளும் மாறாமல், ஒரே அளவில் இருந்து வருவதுதான் நமக்கு ஆச்சரியமானதாகும்.

இந்த அளவு முதன் முதலாக எவ்வாறு அமைந்தது என்ற காரணத்தை அறிய விழைபவருக்கு, இங்கிலாந்தில் உள்ள சேக்சன் எனும் பகுதியில் உள்ள நிலப்பகுதியின் துண்டு நிலங்களின் அகல அளவானது, இந்த நீளத்தில் தான் இருந்தன. அந்த அளவே அப்படியே இதற்கும் வந்திருக்கலாம் என்று ஒரு சிலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

அதேபோல, நிலத்தை அளக்கின்ற சங்கிலியின் நீளமும் 22 கெஜமே அமைந்திருப்பது, இரண்டையும் சம்பந்தப்படுத்தி எண்ணவும் தோன்றுகிறதல்லவா! என்றும் சிலர் கூறுகின்றனர். எந்தக் கருத்து எப்படி இருந்தாலும், இந்த 22 கெஜ நீளமான பந்தாடும் தரையின் நீளத்தின் அளவு இதுவரை மாறாமலே இருந்து வருகிறது.

தற்போது, ஆட்டம் தொடங்குவதற்கு முன்னர், இரண்டு குழுத் தலைவர்களும் ஆடுகின்ற மைதானத்திற்குச் சென்று, நாணயத்தைச் சுண்டியெறிய, ஒருவர் பூவா தலையா என்று கேட்க, கேட்பதில் வெற்றி பெற்றவர், பந்தெறிவதா அல்லது பந்தாடுவதா என்று விரும்பியதைக் கேட்கும் உரிமை பெற்றுத்

தேர்ந்தெடுப்பது நடைமுறையில் இருந்து வரும் பழக்கமாகும். ஆனால், 1744ஆம் ஆண்டில் புதுவிதிகள் தோன்றுவதற்கு முன்னதாக, இன்னும் ஒரு புதிய பழக்கமும் நாணயம் சுண்டி எறியும்போது இருந்தது.

நாணயம் சுண்டுவதில் வெற்றி பெறுகின்ற குழுத் தலைவர், முன்னர் கூறிய இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுப்பது மட்டுமல்லாமல், எந்த இடத்தில் விளையாடுவது என்று பந்தாடும் தரையைத் தேர்ந்தெடுக்கும் பழக்கமும் இருந்தது. இரண்டு குழுக்கள் பொதுவான மைதானத்தில் ஆட நேரும் போது, இவ்வாறு உரிமையை அப்படித் தந்திருந்தார்கள்.

ஒரு குழு தனது சொந்த மைதானத்தில் ஆட நேர்ந்தால், விளையாட அங்கே வருகின்ற மற்றொரு குழுவிற்கு இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கக்கூடிய வாய்ப்பினை முதலிலேயே அளித்ததுமல்லாமல், எந்த இடத்தில் ஆடவேண்டும் என்று பந்தாடும் தரையைத் தேர்ந்தெடுக்கும் உரிமையையும் கூட அளித்து வந்தார்கள். இப்படி செய்வதானது, விளையாட வருகின்ற குழுவிற்கு அதிகமான உரிமையைத் தருவதாக அமைந்து, இன்னொரு குழு இருக்கின்ற உரிமையையும் இழக்கும்படி ஆகின்றது என்பதாக அமைந்து, 1811ம் ஆண்டு, அந்த விதியில் ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்தினர்.

இரண்டில் ஒன்றைத் தோந்தெடுக்கும் உரிமையை இரண்டு குழுத் தலைவர்களுக்கும் விட்டுவிட்டுப், பந்தாடும் தரையைத் தேர்ந்தெடுக்கும் உரிமையானது நடுவர்களிடம் விடப்பட்டது. இந்த விதியும், தயாரிக்கப்பட்டு செப்பனிடப்பட்ட பந்தாடும் தரைக்கே பொருத்தமானதாக அமைந்தது.

அடுத்ததாக, பந்தாடும் தரையில் எல்லைக்கோடுகள் **(Crease)** அமைந்த விதம் பற்றித் தெரிந்து கொள்வோம்.

கி.பி. பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும், கிரிக்கெட் ஆட்டம்

ஆடப்பட்டபொழுது, விக்கெட்டுக்கு முன்னால் தற்போது குறித்து வைக்கப்பட்டிருக்கும் கோடுகளுக்குப் பதிலாக, சிறு குழி ஒன்று பறித்து வைக்கப்பட்டிருந்தது. தற்போது, பந்தடித்தாடும் ஆட்டக்காரர் ஒரு ஓட்டம் எடுக்க, ஒரு விக்கெட்டிலிருந்து மற்றொரு விக்கெட்டை நோக்கி ஓடி வந்து விக்கெட்டுக்கு முன்னால் உள்ள கோட்டைத் தொட்டால் போதும். ஆனால் அந்தக் காலத்தில் ஓடி வந்து அந்தக் குழியில் பந்தாடும் மட்டையை வைத்தால்தான் ஓட்டம் குறிக்கப்படும். அதற்குள் பந்தைத் தடுத்தாடுவார் அந்தக் குழியில் பந்தைப் போட்டுவிட்டால், பந்தடி ஆட்டக்காரர் ஆட்டமிழக்க வேண்டும்.

இந்த ஆட்டமுறை அமைப்பானது 1802ம் ஆண்டு தோன்றிய விதி ஒன்றினால் சற்று மாற்றம் பெற்றது. இந்தக் கோடானது, விக்கெட்டுக்கு முன்புறம் 46 அங்குல தூரத்தில் குறிக்கப்பட வகை செய்யப்பட்டது. இந்த 46 அங்குல நீளம் எப்படி வந்தது என்றால், அந்தக் காலத்தில், இங்கிலாந்து நாட்டில் தயாரிக்கப்பட்ட துணிகள் 46 அங்குல அகலத்தில் தான் இருந்து வந்தன. அந்த அகல அளவையே இதற்கும் நீள அளவாக வைத்து விட்டார்கள் என்று கூறப்படுகிறது.

1819ம் ஆண்டு, அந்த நீள அளவு சற்று விரிவு பெற்றது. அதாவது 48 அங்குலமாக நீண்டு கொண்டது. விக்கெட்டிலிருந்து பந்தடித்தாடும் எல்லைக்கோடானது (popping Crease) 4 அடி தூரத்திற்கு வந்து, அந்த அளவிலேயே இன்றும் தொடர்ந்து வருகிறது. அத்துடன் விக்கெட்டின் குறிக்கம்பிலிருந்து (Stump) இருபுறமும் 6 அடி தூரம் (1.83மீ) விரிவுபடுத்திவிடவும் ஏற்பாடு செய்யப்பட்டு அமைக்கப்பட்டிருக்கிறது.

அதுபோல, பந்தெறி எல்லைக்கோடும் (Bowling crease) கொஞ்சங் கொஞ்சமாக வளர்ச்சி பெற்றிருக்கிறது.

1744ம் ஆண்டுதான், பந்தெறி எல்லைக்கோடும் புதிதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைக்கு வந்தது. விக்கெட்டுக்கு இருபுறமும் 3 அடி தூரம் நீட்டப்படவேண்டும் என்பது தான் முதன் முதலாக வந்த விதியாகும்.

அப்பொழுது, கோட்டுக்குப் பதிலாக, புல்தரையை வெட்டிக்கோடுபோல ஆக்கிக்கொண்டிருந்தார்கள். அந்த முறை 1830ம் ஆண்டிலிருந்து மாறி வெள்ளை வண்ணம் அடித்து கோட்டைக் குறிக்க வேண்டும் என்ற முறையும் அமுலுக்கு வந்தது.

1821ம் ஆண்டு, அந்தக் கோடு 3 அடி 31/2 அங்குல தூரம் நீட்டப்படவேண்டும் என்ற விதிமுறை வந்தது.

அதற்குப் பிறகு 1902ம் ஆண்டு, மீண்டும் ஒரு புதிய விதி வந்தது. அதன்படி, விக்கெட்டுக்கு இருபுறமும் 4 அடி தூரம் கோட்டினை நீட்டிவிட வேண்டும் என்பதே!

1939ம் ஆண்டிலிருந்து பந்தெறியும் எல்லைக்கோட்டின் முழு நீளம் 8 அடி 8 அங்குலம் ஆகிவிட்டது. அதாவது விக்கெட்டுக்கு இருபுறமும் 4 அடி 4 அங்குலமாகும். தற்பொழுதுள்ள விதியும் இதுவேதான். விக்கெட்டில் உள்ள நடுகுறிக்கம்பிலிருந்து இருபுறமும் 4 அடி 4 அங்குல நீளம் அந்தக் கோடு விரிவுபடுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதே

பந்தாடும் தரையில் இத்தனை மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருந்த பொழுதே, பந்தாடும் தரையை எவ்வாறு பத்திரமாகப் பாதுகாக்கவேண்டும் என்றும் விதிகளில் அவ்வப்போது மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டுதான் வந்திருக்கின்றன.

ஆரம்ப நாட்களில் பந்தாடும் தரைபற்றி அவ்வளவாக யாரும் அக்கறை கொண்டிருக்கவில்லை. ஆட்டத்தில் வேகமும் போட்டியும் அதிகமாக ஆக, பந்தாடும் தரை பற்றிய நினைவும் மிகுதியாக இடம் பெறலாயிற்று. 1788ம் ஆண்டில் தோன்றிய

ஒரு விதியின்படி, பந்தாடும் தரையில் புல் செதுக்கல், தண்ணீர் விடுதல், உருளையால் உருட்டுதல், மூடிவைத்தல் போன்ற எல்லா காரியங்களுக்கும் இரு குழுத் தலைவர்களும் ஏகமனதாக சம்மதித்தால்தான் நிகழ்த்தலாம் என்பதாக வந்தது.

அதன் பின்னர், பந்தடித்தாடும் தரையில் ஈரப்பகுதியைப் போக்கிட, மரத்தூளைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அனுமதிக்கப்பட்டது. 1849ம் ஆண்டு மேலும் ஒரு மாற்றம். ஏதாவது ஒரு குழு விரும்பினாலும் ஒவ்வொரு 'முறை ஆட்டம்' (Innings) தொடங்குவதற்கு முன்னும் பந்தாடும் தரை கூட்டி உருட்டப்படவேண்டும் என்பதாக மலர்ந்தது.

பின்னர், இரண்டு 'முறை ஆட்டத்திற்கு' இடையில், பந்தடித்தாட விரும்பும் குழு விரும்பினால், பந்தாடும் தரை உருட்டப்படலாம் என்று 1860ம் ஆண்டு புதிய விதிமுறை புகுத்தப்பட்டது.

1863ம் ஆண்டு அந்த விதியில் மேலும் மாற்றம் ஏற்பட்டது. அதாவது, போட்டி ஆட்டம் தொடங்கும் ஒவ்வொரு நாள் ஆரம்பத்திலும் 10 நிமிடத்திற்குள் பந்தாடும் தரையை உருட்டிவிட வேண்டும் என்பதாக வந்தது. 1910ம் ஆண்டு, ஓடி வந்து பந்தெறிவோர் காலடியில் விழுகின்ற பள்ளத்தை நிரவிவிடவும், பந்தடித்தாடுபவர் நின்றாடும் இடத்தில் ஏற்படும் குழியையும் சரி செய்யவும் விதி மாற்றம் ஏற்பட்டது.

1931ம் ஆண்டு, 7 நிமிடத்திற்குள்ளே பந்தாடும் தரை உருட்டப்படவேண்டும் என்ற தற்போதைய விதிமுறை ஏற்பட்டது. இவ்வாறாக பந்தாடும் தரை, பல மாற்றங்களைப் பெற்று, ஆட்டத்தில் வேகமும் விறுவிறுப்பும் தோன்றிட வழிவகுத்துத் தந்தது.

## 9. ஆடையும் அணிமுறைகளும்

'ஆட்டமும் தொடக்கமும், அடித்தாடும் எல்லைக்கோடு' என்ற பகுதிகளுக்குரிய விளக்கங்கள், பந்தாடும் தரையின் வரலாற்றுடன் ஒன்றிப்போனதென்பதால், இவற்றிற்கான விளக்கங்களை, பந்தாடும் தரைப்பகுதியின் விளக்கத்திலேயே படித்துக் கொள்ளவும்.

இனி, ஆட்டக்காரர்களின் ஆடையும் அணிகலனும் காலத்திற்கேற்றவாறு எவ்வாறு மாற்றம் பெற்று மெருகேறி வந்தன எனும் விவரங்களைத் தொடர்ந்து காண்போம்.

இங்கிலாந்து நாடு குளிர் பிரதேசம் என்பதால், தங்கள் தேகத்தை சூடுபடுத்திக்கொள்வதற்காக, நாள் முழுவதும் விளையாடுகின்ற விளையாட்டாக, கிரிக்கெட்டைத் தேர்ந்தெடுத்து இங்கிலாந்து நாட்டினர் விளையாடி மகிழ்ந்தார்கள் என்பதாக, கிரிக்கெட் பற்றிக் குறிப்பிடும்போது பலர் குறிப்பிடுவார்கள்.

சூரியக் குளியல் (Sun Bath) என்பதாக, ஒரு சடங்கே நிகழும் அங்கே. முடியாதவர்கள் இதுபோல் வீட்டு மாடிகளில் சூரிய வெளிச்சத்தில் தேகத்தில் வெப்பம் ஏற்றிக் கொள்ள, வாய்ப்பும் வசதியும், உடல் திறமும் நிறைந்தவர்கள் ஓடி ஆடி, தங்கள் தேகத்தை சூடுபடுத்தி, குளிரை விரட்டிக் கொண்டார்கள் என்றும் குறிப்பிட்டுக் காட்டுவார்கள்.

நமது நாட்டில் அல்லது ஓட்டப் பந்தயங்களில் அணிந்து கொள்கின்ற அரைக் கால்சட்டை, கையில்லாத பனியன் போல, அதுவும் தவிர, வேறுபல முக்கிய விளையாட்டுக்களில் இடம் பெற்ற ஆடைகள் போல, கிரிக்கெட் ஆட்டத்தில் ஆடை இல்லாது போயிற்று.

முதல் காரணம்-நாள் முழுதும் தொடர்ந்து ஆடுகின்ற விளையாட்டாக அமைந்திருந்ததால், உடலுக்குப் பாதுகாப்பான

உடை தேவையாக இருந்தது. என்னதான் விளையாடினாலும், குளிரிலிருந்து தப்பிப் போக முடியுமா!

அதனால், உடல் முழுவதையும் மூடி மறைக்கின்ற, குளிரிலிருந்து காத்துக்கொள்கின்ற முழுக்கால்சட்டை, முழுக்கை சட்டை, தலைக்குத் தொப்பி என்பதாக அணிந்து கொண்டு ஆடினார்கள்.

அடுத்தாக, ஆட்டத்தில் பங்கு பெற்றவர்கள் எல்லாம் பிரபுக் குடும்பத்தினர் அரச பரம்பரையினர். வசதிபடைத்தவர்கள், இவர்கள் எல்லோரும் எப்படி இருப்பார்கள்! வசதிக்காகத்தான் விளையாட்டே தவிர, விளையாட்டுக்காக வாழ்க்கைமுறையை, வசதியை மாற்றிக் கொள்வார்களா! அவர்கள் அணிந்திருந்த உடையையே சற்று ஏற்றி இறக்கி, ஆடி மகிழ்ந்திருக்கின்றார்கள். அவ்வளவுதான்.

கிரிக்கெட் நன்கு வளர்கின்ற காலத்திலிருந்தே, ஆடைபற்றி அக்கறையை யாரும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. இயற்கையான அவர்களது முழுக்கால் சட்டை முழுக்கை சட்டை, தலைக்குத் தொப்பி என்பதாகவே அமைந்து விட்டிருந்தது.

அதன் பின்னர், ஆட்டத்தில் வளர்ச்சியும், மக்களிடையே ஆர்வமும் எழுச்சியும் பெற்றுக்கொண்டு, அந்த நிலையில் ஆட்டக்காரர்களின் ஆடைகள் சற்று மாற்றம் பெறத் தொடங்கின.

18-ம் நூற்றாண்டின் முற்பகுதியில், ஆடிய ஆட்டக்காரர் கள் மூன்று முனையாயிருக்கின்ற தலைத் தொப்பியை அணிந்திருந்தனர். அணிந்திருந்த சட்டைக்கு மேல், கையில்லாத வெள்ளைச் சட்டையை (Vest) போட்டுக்கொண்டு, போட்டிருந்த முழுக்கால் சட்டையில் முழங்கால் வரை ‘ஸ்டாக்கிங்ஸ்’ போட்டு இழுத்து, குதிரை

சவாரி செய்பவர்கள் போன்ற தோரணையில் ஆடினர். அவர்கள் இறுக்கும் கயிற்றால் முடியப்பெற்ற காலணியை அணிந்தும் ஆடினர். இவ்வாறு முதல் தர தோற்றமான ஆடை அலங்காரம், கிரிக்கெட்டில் தலைகாட்டத் தொடங்கியது.

அதனைத் தொடர்ந்து, ஹேம்பிள்டன் குழுவைச் சேர்ந்தவர்கள், தாங்கள் தலையில் அணிந்திருந்த தொப்பியை சுற்றிலும், தங்கச் சரிகை அல்லது வெள்ளிச் சரிகையை தைத்து, தங்கள் தனித்தன்மையை பறைசாற்றிக் கொண்டனர்.

அதே ஹேம்பிள்டன் சங்கத்தைச் சேர்ந்த மற்றொரு குழுவினர், நீலநிறக் கோட்டினை அணிந்து, அதற்கு நீலநிற வெல்வெட் காலரை அணிந்து, தாங்கள் அணிந்திருந்த கோட்பித்தான்களில் CC என்ற எழுத்துக்களையும் எழுதி, தங்கள் சீருடையைக் காட்டி வெளிப்படுத்தி மகிழ்ந்தனர்.

அதைத்தொடர்ந்து, 18ம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் ஆடிய ஆட்டக்காரர்களின் ஆசையும் எண்ணமும், இன்னும் சற்று முன்னேறத் தொடங்கியது. குதிரைப் பந்தயத்தில் குதிரை ஓட்டும் குதிரைக்காரர்களான 'ஜாக்கி' அணிகின்ற தலைக்குல்லாய் போல அணிய ஆசைப்பட்டு, அணிந்து கொண்டு ஆடினார்கள்.

அதன்பின், தலையில் உயரமான குல்லாய்களை (High Hat) அணிந்தார்கள். வைக்கோலினாலும் ஆன குல்லாய்களையும் (Straw Hat) அணிந்தும் ஆடி மகிழ்ந்தனர்.

வேட்டைக்குப் போகின்றவர் அணிவது போல, முழங்கால் வரை ஸ்டாக்கிங்ஸ் அணிந்து கொண்டிருந்த ஆடை அணி முறை, மாற்றம் பெறத்தொடங்கியது. அதில் சங்கடத்தையும், ஆடமுடியாத, ஓட முடியாத வசதியின்மையையும் உணர்ந்து, நீண்ட முழுக்கால் சட்டையை அணிந்தார்கள். அதில், இரும்பாலான பெரிய பக்கில் (Buckle) இருப்பது போன்று, இடைவாரும் அணிந்து கொண்டனர்.

விரைவாக ஆட்டம் வளர்ந்து கொண்டு வந்ததற்கேற்ப வசதியாக, ஆடையில் மாற்றம் ஏற்பட்டு, இடுப்பில் சரிவரப் பிடிப்புடன் இருக்கும் வண்ணம் இடைவாரும், (Belt) இடம் பெற்றது.

இதற்கிடையில், காலணிகளும் (Shoes) அடிக்கடி மாற்றம் பெற்றுக்கொண்டே வந்தன. ஏறத்தாழ 1860-ம் ஆண்டு காலத்தில், மாநிறமுள்ள (Brown) காலணிகளும், சில நேரங்களில் வெண்ணிற காலணிகளும் ஆட்டக்காரர்களால் விரும்பி அணியப்பட்டன.

ஆனால் 1850-ம் ஆண்டுக்குப் பிறகு, வெண்ணிற மான் தோலால் (Buck Skin) ஆனக் காலணிகளை அணிந்து ஆடும் பழக்கமே நடைமுறை மரபு வழக்கமாக அமைந்திருந்தது என்று வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றார்கள்.

கிரிக்கெட் சங்கத்தைச் சோந்த ஆட்டக்காரர்கள் நீண்ட அளவுள்ளதாக, முழுக்கால் சட்டை அணிந்து கொண்டிருந்த பொழுது, பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆட்டக்காரர்கள், வண்ண வண்ணக் குல்லாய்களை விரும்பி அணிந்து ஆடி வந்தனர். அந்தப் பழக்கம் இன்னொரு பழக்கத்தையும் அழைத்து வந்தது.

வண்ண வண்ண குல்லாய்கள் அணிந்தது போலவே, வண்ண வண்ண மேலுடைகளையும் அணிந்து ஆடும் பழக்கம், 19-ம் நூற்றாண்டில் பெருகி வந்தது.

ஆனாலும், 19-ம் நூற்றாண்டின் இறுதியில் ஆட்டக்காரர்கள், வெள்ளை நிற உடைகளையே அணிந்திடவேண்டும் என்ற மரபு எப்படியோ எழுந்து, அந்த ஆடை முறையே இன்றும் பின்பற்றப்பட்டு வருகிறது.

கீழே காணும் படத்தில், ஆடை மாறி வந்த விவரத்தின் தொகுப்பினை நீங்கள் காணலாம்.



அவ்வப்போது மாறி வந்த உடையின் விளக்கத்தை இனி காண்போம். படங்களை இடமிருந்து வலமாகப் பார்க்கவும்.

கிரிக்கெட் கிராமத்தில் தான் தோற்றம் பெற்றது என்பதற்கேற்ப முதல்படம் தோற்றமளிக்கிறது.

இரண்டாவது படம், வசதியுள்ளவர்கள் தான் ஆட்டக்காரர்கள் என்பது போல, நீண்ட கோட்டும், முழங்கால் வரை ஸ்டாக்கிங்ஸ் வந்து முழுக்கால் சட்டையை மறைக்கின்ற தன்மையிலும், தலைக்குல்லாய் மும்முனை உள்ளது போன்ற அமைப்பிலும் இருப்பதை காணலாம்.

அடுத்து, முழுக்கால் சட்டை முன்னர் போலவே தொடர்ந்தாலும், மேல் சட்டை மாறி, கையில்லாத மேல் சட்டையும் இடம் பெற்று வந்திருப்பதையும் அறியலாம்.

அடுத்து, ஐந்தாவது படத்தில், நீளத் தொப்பியிருப்பதைப் பாருங்கள். அதுவே அலங்காரம் என்று ஆசையுடன் அணிந்து ஆடியவிதத்தை முன்பக்கத்தில் நீங்கள் படித்திருப்பீர்கள்.

இவ்வாறு தொப்பியும், மேல் சட்டையும் மாறி மாறி வந்திருப்பதைத்தான் மேலே உள்ள படங்கள் விளக்குகின்றன.

## 10. ஓட்டத்தைக் குறித்த முறைகள்

எவ்வளவு வேகமாகப் பந்தை எறிந்தாலும், எத்தனை தான் பந்தை தூரப் போகும்படி அடித்து ஆடினாலும், எத்தனை ஓட்டங்கள் எடுக்கப்பட்டிருந்தன என்பதை இறுதியாக வைத்துத்தானே, ஆட்டத்தின் ஓட்டத்தைக் குறிக்க என்று, பலர் இந்த பணியில் இன்று ஈடுபடுத்தப்பட்டு வருகின்றார்கள்.

ஆனால் ஆரம்ப நாட்களில், ஓட்டங்களைக் குறித்திருக்கும் முறையே மிகவும் வேடிக்கையான ஒன்றாக அமைந்திருக்கிறது. பக்கம் 45ல் உள்ள படத்தைப் பாருங்கள். ஒருவர் தனியாக அமர்ந்து, ஓட்டங்களைக் கணக்கிடும் பணியிலே அமர்ந்திருக்கின்றார்.

அவர் ஒரு கையிலே கத்தியும், மற்றொரு கையில் நீண்ட குச்சி (Stick) ஒன்றும் இருக்கின்றது. ஓட்டக்காரர் ஒருவர் ஒரு ஓட்டம் எடுத்தால், அதைக் குறிக்க அந்தக் கம்பில் ஒரு கீறு கீறி (Notch) அடையாளம் செய்வார்.

ஸ்கோர் (Score) என்கிற ஆங்கில வார்த்தைக்கு 'அடையாளம் செய்' என்பதுதான் பொருள். இங்கே, ஓட்டத்தின் எண்ணிக்கையைக் குறிக்க, குச்சி ஒன்றில் கீறி அடையாளம் செய்து ஒன்று, இரண்டு என்று எண்ணியிருக்கின்றார்கள்.

ஒரு வட்டம் என்றால், 'ஒரு கீறு' என்று சாதாரணமாகக்கீறி அடையாளம் செய்வார். அந்தக் கீறலின் எண்ணிக்கை பத்து என்று வந்து விட்டால், அந்தப் பத்து என்பதனை உடனே தெரிந்து கொள்ள, அந்த இடத்தை நீளமாகவும், அகலமாகவும் ஆழமாகவும் குச்சியில் கீறி அடையாளம் செய்தனர்.

அதன் பிறகு, அதிகமான கீறல்கள் குச்சியில் விழத் தொடங்கியதும், பத்து என்ற நிலையை மாற்றி, இருபதுக்கு ஒரு அழுத்தமான கீறல் என்று குறித்தனர். அதனால்தான் ஸ்கோர் என்றால் இருபது என்று எண்ணிக்கையை, இன்று உலக வழக்காற்றில் குறித்துக் காட்டிக் கொண்டிருக்கிறது.

அதன் பிறகு, இவ்வாறு குச்சியில் கத்தி வைத்து கீறி ஓட்டங்களைக் கணக்கிடும் பணியில் இருவர் ஈடுபட்டனர். இதனை, 1706 ம் ஆண்டு, வில்லியம் கோல்டுவின் என்பவர் தனது கவிதையில் மிக அழகாகக் குறிப்பிட்டிருக்கின்றார்.

நாணயமாக, ஓட்டங்களின் எண்ணிக்கையை மாற்றி மறைக்காமல் குறிக்கின்றார் என்பதைத்தான் நம்பிக்கையான நண்பர்கள் என்று குறிப்பிட்டார். அதுவுமின்றி, அவர்கள் பார்வையாளர்கள் பத்திரிக்கையாளர்கள் பார்வையிலே தான் இதனை செய்ய வேண்டியிருந்ததும் ஒரு காரணம் என்பதால், இவ்வாறு அழகாகக் குறிப்பிட்டார்.

இவ்வாறு வளர்ந்து கொண்டே வந்த ஆட்ட செழுமையினைப் பின்பற்றி, ஆட்டத்தில் ஓட்டங்களைக் குறிக்கும் அமைப்பும் மாறிக்கொண்டே வந்தது. ஓட்டங்களை முறையாகக் குறித்தெடுத்தது, வரலாற்றில் முதன் முறையாக இடம் பெற்ற ஆணடு 1744 ஆகும். இந்த குறிப்பையும், 1744ம் ஆண்டு, ஜுன் மாதம், 8ந் தேதி, ஆர்டிலரி மைதானத்தில், கென்ட் மாகாணக் குழுவிற்கும், அகில இங்கிலாந்துக் குழுவிற்கும் இடையே நடந்த போட்டியில் எடுத்த ஓட்டங்களையே, முதன் முதலாகக் குறிக்கப்பெற்றவை என்று வரலாறு கூறுகிறது.

ஆனால், அந்த ஓட்டங்களைக் குறிப்பெடுத்தவர், விலாசம் தெரியாத ஒரு பத்திரிக்கையாளர் என்னும் வரலாறு தொடர்ந்து குறித்திருக்கிறது. அதை அடுத்து, 1772ம் ஆண்டு, முதன் முதலாக, பத்திரிக்கையில் போட்டி ஆட்டத்தின் ஓட்டங்கள் பற்றி விவரம் W. எப்ஸ் என்பவரால் பத்திரிக்கையில் வெளியிடப்பட்டது.

இதற்கிடையிலே, பிரேட் (Pratt) என்பவர், அச்சிட்ட (காகிதத்தில்) அட்டையில் ஓட்டங்களைக் குறிப்பிட்டு

கணக்கிட்டார். இவர் செவனோக்ஸ் கிளப்பின் ஓட்டக் குறிப்பாளராக (Scorer) இருந்தார். அவர் 1776ம் ஆண்டு, அச்சிட்ட அட்டையில் ஓட்டக்குறிப்புக்களை முதன் முதலில் குறித்த பெருமையைப் பெற்றார்.

பின்னர் 1791ம் ஆண்டு, சாமுவேல் பிரிட்சர் என்பவர் முக்கிய போட்டி ஆட்டங்களின் மொத்த ஓட்டம் மற்றும் விவரங்களைத் தொடர்ந்து தினசரிப் பத்திரிக்கையில் வெளியிட்டு வந்தார். அது 1805ம் ஆண்டு வரை நீடித்து, தொடர்ந்து வந்து கொண்டேயிருந்தது.

பிரட் லில்லி ஓய்ட் (Fred Lilly White) என்பவர், ஒரு அற்புத காரியத்தைச் செய்தார், 1848ம் ஆண்டு, அதாவது நடமாடும் அச்சகம் ஒன்றை போட்டி நடக்கும் இடங்களுக்கெல்லாம் எடுத்துச் சென்று, அங்கேயே ஓட்டக் குறிப்புக்கள் பற்றியதை அச்சிட்டுத்தந்தார்.

அத்துடன் நில்லாமல், அமெரிக்காவிலுள்ள கனடாவிற்கு 1859ம் ஆண்டு பயணம் சென்ற குழுவுடன், தனது நடமாடும் அச்சகத்துடன் சென்று, இந்தப் பணியை ஆற்றி பெரும் புகழ் பெற்றார், இத்தகைய ஆர்வம் உள்ளவர்களால்தான், கிரிக்கெட் ஆட்டம் மிகவும் பிரபல்ய மடைந்திருக்கிறது என்றால், இது மிகையான கூற்று அல்ல.

ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் ஆட்டச் செய்திகள், ஆட்டக்காரர்கள் பற்றிய தொகுப்புக்கள் 1862ம் ஆண்டு நான்கு பகுதிகளாக வெளியிடப்பட்டன.

அட்டையிலும், காகிதத்திலும் குறித்தால் மட்டும் போதுமா! பார்வையாளர்களுக்கும் அடிக்கடி ஆட்டம் பற்றி தெரிந்து கொள்ளவேண்டும் என்பதால், ஆட்டக்குறிப்புப் பலகை (Score Board) ஒன்று அமைக்க வேண்டும் என்கின்ற எண்ணம் உருவானது.

19ம் நூற்றாண்டின் மத்தியில், முதன் முதலாக ஆட்டக்குறிப்புப் பலகைகள் பொருத்தப்பட்டன. 1846ம் ஆண்டு, முதன் முதலாக லார்டு மைதானத்தில், தந்திமுறை குறிப்புப்

பலகைகள் பொருத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 1848ம் ஆண்டு ஓவல் மைதானத்தில் பொருத்தப்பட்டது.

பேகட் (Paget) என்பவர் ஆட்ட நேரத்தில் அவ்வப்போது, எடுக்கப்படுகின்ற ஓட்டங்கள், இரண்டு பந்தடி ஆட்டக்காரர்கள் எடுத்திருக்கின்ற, ஓட்டங்களைத் தனித்தனியே காட்டுகின்ற வகையில், புதிய முறையில் ஆட்டக் குறிப்புப் பலகையை 1884ம் ஆண்டு அமைத்தார்.

அதன்பின், பந்தெறிபவர்களின் எறியும் எண்ணிக்கையைக் கணக்கிடும் தன்மையில், பலகையில் குறிக்கப்படும் வகையில் மாற்றி அமைக்கப்பட்டு, பார்வையாளர்களுக்கு உதவுகின்ற பாங்கிலே பொருத்தப்பட்டது.

1884ம் ஆண்டு,ஆஸ்திரேலியாவில் உள்ள மெல்போர்ன் நகரில் உள்ள கிரிக்கெட் தைானத்தில், எல்லாவற்றையும் குறிக்கின்ற விரிவான அளவில் மிகப்பெரிய ஆட்டக்குறிப்புப் பலகை மின் உதவியால் இயங்கிடும் வண்ணம்அமைக்கப்பட்டு, உலகச் சிறப்பினைப் பெற்றது.

இதற்கு முன், பார்வையாளர்கள் யார் யார் எவ்வளவு ஓட்டங்கள் எடுத்திருக்கின்றார்கள் என்பதை அறியாமல், தங்களுக்குள்ளே 'கன்னாபின்னா' வென்று கணக்கிட்டுக் கொண்டிருந்தார்கள்.

இரண்டு குழுக்களும் சம அளவில் ஓட்டங்கள் எடுத்திருக்கும் பொழுது மட்டுமே, இரண்டு ஓட்டக் குறிப்பாளர்களும் (Scorers) எழுந்து நிற்பார்களாம். அப்படி நின்றால், இரண்டு குழுக்களும் சமமான ஓட்டங்கள் எடுத்திருக்கின்றன என்பது பொருளாகும்.

அந்த நிலையை அடியோடு மாற்றி, ஆட்டக்காரர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் அவ்வப்போது என்னென்ன நிலையில் ஓட்டங்களின் எண்ணிக்கை இருக்கின்றன என்பதை அறிந்து கொள்ள வழி வகுத்துத் தந்தது. இப்படி அமைக்கப்பட்ட ஆட்டக் குறிப்புப் பலகைகள்.

இந்நாளில் எல்லா விவரங்களையும் ஒரே இடத்தில் ஒரே சமயத்தில் பார்த்துத் தெரிந்து கொள்ளத்தக்க வகையில் ஆட்டக்குறிப்பேடுகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. இப்படி அமைந்திருப்பதானது, இவ்வளவு காலம் ஆட்ட நேரத்தில் ஏற்பட்ட அனுபவத்தின் சாரமேயாகும்.

## 11. இரு நாடுகளுக்கிடையே பெரும் போட்டிகள் (Test Matches)

ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த நாடுகளில் தான் கிரிக்கெட் ஆட்டம் அதிகமாக ஆடப்பெற்று வருகிறது. ஏறத்தாழ எட்டு நாடுகள்தான் இந்த ஆட்டத்தின் புகழ் பெற்ற நாடுகளாக விளங்குகின்றன.

இங்கிலாந்து, இந்தியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள், ஸ்ரீலங்கா, தென் ஆப்பிரிக்கா.

ஒவ்வொரு நாடும் தனது குழுவை, வேறொரு நாட்டிற்கு அனுப்பி, பல போட்டி ஆட்டங்களை ஆடச்செய்கின்ற முறையைத்தான் Test Match என்று அழைக்கின்றனர். ஒவ்வொரு நாடும் தனது ஆட்டக்காரர்களின் ஆடும் திறனை சோதித்துப் பார்த்து, எந்த நாட்டினர் சிறந்த அணியினர் என்று பார்த்து, பேசி பெருமைப் படுத்தவே இப்படி ஆடுகின்றனர் போலும்.

போட்டி மட்டும் முக்கியமல்ல, நாடுகளுக்கிடையே நடைபெறுகின்ற போட்டியானது, நாடுகளுக்கிடையே நல்லுறவை வளர்த்துக் கொள்ள வழிவகை செய்கிறது என்பதே அடிப்படை நோக்கமாகும்.

இந்தியாவும் உலகிலேயே சிறந்த கிரிக்கெட் ஆடும் நாடாகத் திகழ்கின்றது. பெரும் சோதனைப் போட்டியில் பல நாடுகளுக்கிடையே போட்டியிட்டு பலமுறை வென்றும் இருக்கிறது.

இந்த டெஸ்ட் போட்டி ஆட்டமானது முதன் முதலாக இங்கிலாந்திற்கும் ஆஸ்திரேலியாவிற்கும் 1877ம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் நடைபெற்றது. அந்தப் போட்டி அந்த ஆண்டு மார்ச்சு மாதம் 15-17ந் தேதி வரை, அதாவது மூன்று நாட்கள் நடைபெற்றன. இதுவே முதல் டெஸ்ட் போட்டியாகும்.

டெஸ்ட் போட்டி ஆட்டம் மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெற்று வந்தது. இந்தப் பழக்கம் 1930ம் ஆண்டு வரை நீடித்தது. பிறகு போட்டிகள் நான்கு நாட்கள் நடைபெற்றன. இது 1947ம் ஆண்டுவரை நீடித்தது. பின்னர் 1948ம் ஆண்டில், டெஸ்ட் போட்டிகள் 5 நாட்கள் வரை ஆடலாம் என்று நாட்களை அதிகப்படுத்தினர். அதுவே இன்று வரை நின்று நிலவி வருகிறது.

இந்தியா முதன் முதலாக இங்கிலாந்துடன் டெஸ்ட் போட்டியை 1932ம் ஆண்டு, இங்கிலாந்திலுள்ள ஓவல் மைதானத்தில் ஆடியது.

இலங்கையுடன் முதல் போட்டியை டெல்லி நகரில் 1932-33ம் ஆண்டில் தொடங்கியது.

ஆஸ்திரேலியாவுடன் முதல் டெஸ்ட் போட்டியை இந்தியா 1947-48ம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் ஆடியது.

இந்தியா மேற்கிந்தியத் தீவினருடன் டெஸ்ட் போட்டியை, 1948-49ம் ஆண்டு இந்தியாவில் ஆடினர்.

இந்தியாவும் நியூசிலாந்தும் 1955-56ம் ஆண்டு தங்களது முதல் டெஸ்ட் போட்டிகளை இந்தியாவில் ஆடினர்.

டெஸ்ட் போட்டியை முதன் முதலாக டெலிவிஷனில் காட்டி, இங்கிலாந்து நாடு பெரும் புகழை ஈட்டிக்கொண்டது.

இவ்வாறாக, இன்றைய நாளில் கிரிக்கெட் ஆட்டம், உலகப்புகழ்பெற்ற ஆட்டமாக, கோடிக்கணக்கான ரசிகப் பெருமக்களைத் தன்னகத்தே கொண்டு, கோலாகலமான சூழ்நிலையில் வளர்ந்து வருகிறது. மக்களை மகிழ்வித்து வருகிறது.

இன்றைய 'வளர்ச்சியைப் பார்த்தால்', கிரிக்கெட் ஆட்டத்தின் தோற்றத்திற்குரிய ஓர் எண்ணம், கடவுளின் 'எண்ணமே' என்று ஒரு ரசிகர் சொல்கிறார் என்றால்' அது உண்மை என்றே எண்ணத் தோன்றுகிறது.

## கலைச்சொற்கள்

| | |
|---|---|
| Appeal | ... முறையீடு |
| Bails | ... இணைப்பான்கள் |
| Ball Sense | ... பந்தறிவு |
| Bat | ... பந்தடித்தாடும் மட்டை |
| Batsman | ... பந்தடித்தாடும் ஆட்டக்காரர் |
| Bowl | ... பந்தெறி |
| Bowler | ... பந்தெறியாளர் |
| Bowled | ... பந்தெறியால் விக்கெட் விழுதல் |
| Bowling Crease | ... பந்தெறி எல்லைக்கோடு |
| Bowling Practice | ... பந்தெறிப்பயிற்சி |
| Boundary | ... மைதான எல்லை |
| Bye | ... பொய் ஓட்டம் |
| Catch | ... பிடித்தாடல் |
| Declaration | ... முறை ஆட்ட முடிவுநிலை அறிவிப்பு |
| Dead Ball | ... நிலைப் பந்து |
| Draw | ... சமநிலை |
| Fielding | ... தடுத்தாடல் |
| Fieldsman | ... தடுத்தாடும் ஆட்டக்காரர் |
| Fielding side | ... தடுத்தாடும் குழு |
| Fitness | ... தகுதி நிலை |
| Follow on | ... தொடர்ந்தாட விடுதல் |
| Ground | ... ஆடுகளம் அல்லது மைதானம் |
| Handled | ... தொட்டாடுதல் |
| Hit Twice | ... தானே தன் விக்கெட்டை வீழ்த்துதல் |
| Inning | ... முறை ஆட்டம் |
| Leg Bye | ... மெய்படு ஆட்டம் |
| L.B.W. | ... விக்கெட் முன்னே கால் |
| Lunch time | ... நண்பகல் உணவு |
| Maiden Over | ... ஓட்டம் தராத பந்தெறி தவணை |

| | |
|---|---|
| Match | ... போட்டி ஆட்டம் |
| No Ball | ... முறையிலா பந்தெறி |
| Over | ... பந்தெறி தவணை |
| Overthrow | ... வீண் எறி |
| Out | ... ஆட்டமிழத்தல் |
| Pitch | ... பந்தாடும் தரை |
| Popping Crease | ... அடித்தாடும் எல்லைக்கோடு |
| Position | ... நின்றாடும் இடம் |
| Regular Player | ... நிரந்தர ஆட்டக்காரர் |
| Retire | ... (ஆட்டத்திற்கிடையில் ஓய்வு பெறுதல்) |
| Return Crease | ... வந்தடையும் எல்லைக்கோடு |
| Run | ... ஓட்டம் |
| Run out | ... ஓட்டத்தில் ஆட்டமிழத்தல் |
| Scorer | ... குறிப்பாளர் |
| ScreenBoard | ... திரைப்பலகை |
| Seam | ... பந்தின் மேலுறைத் தையல் |
| Sign | ... (சைகை) குறிக்காட்டல் |
| Stump | ... குறிக்கம்பு |
| Stumped | ... விக்கெட் வீழ்த்தப்படல் |
| Striker | ... அடித்தாடும் ஆட்டக்காரர் |
| Substitute | ... மாற்றாட்டக்காரர் |
| Team Captain | ... குழுத்தலைவன் |
| Test Match | ... பெரும் போட்டி ஆட்டம் |
| Throw | ... வீசி எறி |
| Tie | ... ஆட்டத்தின் சமநிலை |
| Toss | ... நாணயம் சுண்டுதல் |
| Trial Ball | ... மாதிரிப்பந்தெறி |
| Umpire | ... நடுவர் |
| Unfair Play | ... முறையிலா ஆட்டம் |
| Vice-Captain | ... துணைத்தலைவன் |
| Wicket | ... விக்கெட் |
| Wideball | ... எட்டாப் பந்தெறி |

## டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா

M.A., M.P.ED., Ph.D., D.Litt., D.Ed., FUWAI

### எழுதிய உன்னத நூல்கள்

1. விளையாட்டுக்களின் கதைகள் (மத்திய அரசுபரிசு பெற்ற நூல்)
2. விளையாட்டுக்களின் வழிமுறைகளும் வரலாறும் "
3. ஒலிம்பிக் பந்தயத்தின் கதை "
4. உலக நாடுகளில் உடற்கல்வி
5. இந்தியாவில் ஆசிய விளையாட்டுக்கள்
6. கிரேக்க ஒலிம்பிக் பந்தயங்கள்
7. 1984-இல் ஒலிம்பிக் பந்தயங்கள்
8. சியோல் ஒலிம்பிக் பந்தயங்கள்
9. விளையாட்டு உலகில் வீரக் கதைகள்
10. விளையாட்டுக்களுக்குப்பெயர் வந்தது எப்படி?
11. கிரிக்கெட் ஆட்டத்தின் கதை
12. வழிகாட்டும் விளையாட்டு வீரர்கள்
13. விளையாட்டுத் துறையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி
14. ஒரு நூறு சிறு விளையாட்டுக்கள்
15. கூடி விளையாடும் குழு விளையாட்டுக்கள்
16. பொழுதுபோக்கு விளையாட்டுக்கள
17. விளையாட்டுக்களின் விதிகள்
18. கால்பந்தாட்டம்
19. கைப்பந்தாட்டம்
20. கூடைப்பந்தாட்டம்
21. வளைகோல் பந்தாட்டம்
22. பூப்பந்தாட்டம்
23. வளையப்பந்தாட்டம்
24. சடுகுடு ஆட்டம்
25. கோகோ ஆட்டம்
26. மென் பந்தாட்டம்
27. கிரிக்கெட் ஆட்டத்தில் கேள்வி பதில்
28. சதுரங்கம் விளையாடுவது எப்படி?
29. கேரம் விளையாடுவது எப்படி?
30. தேகத்தை தெரிந்து கொள்வோம்
31. நீங்களும் உடலழகு பெறலாம்
32. நீங்களும் உயரமாக வளரலாம்

33. உடலுக்கு அழகு தரும் எடைப்பயிற்சிகள்
34. உடலழகுப் பயிற்சி முறைகள்
35. உங்களுக்கு உதவும் உடற்பயிற்சிகள்
36. குண்டான உடம்பைக் குறைப்பது எப்படி?
37. தொந்தியைக் குறைக்க சுலபமான வழிகள்
38. பெண்களும் பேரழகு பெறலாம்
39. பலம் தரும் பத்து நிமிடப் பயிற்சிகள்
40. குழந்தைகளுக்கான உடற்பயிற்சியும் விளையாட்டும்
41. பயன் தரும் யோகாசனங்கள்
42. பேரின்பம் தரும் பிராணாயாமம்
43. நீங்களும் வலிமையோடு வாழலாம்
44. நீங்களும் நோயில்லாமல் வாழலாம்
45. நீங்களும் மகிழ்ச்சியாக வாழலாம்
46. நீங்களும் இளமையாக வாழலாம்.
47. உபயோகமுள்ள உடல்நலக் குறிப்புக்கள்
48. உடல் எடையும் உணவுக்கட்டுப்பாடும்.
49. உடம்பைக் காப்பாற்றும் ஒன்பது ரகசியங்கள்
50. நலமே நமது பலம்.
51. முக அழகை காப்பது எப்படி?
52. நமக்கு நாமே உதவி
53. அவமானமா? அஞ்சாதே!
54. நிமிர்ந்து நில்! துணிந்து செல்
55. மனைவியுடன் மகிழ்ச்சியாக வாழ்வது எப்படி?
56. திருக்குறள் புதிய உரை
57. குறளுக்குப் புதிய பொருள்
58. வள்ளுவரின் விளையாட்டுச் சிந்தனைகள்
59. வள்ளுவர் வணங்கிய கடவுள்
60. விளையாட்டுத்துறையில் பொது அறிவு நூல்
61. விளையாட்டுக்களில் வினாடி வினா விடை
62. தெரிந்தால் சமயத்தில் உதவும்
63. விளையாட்டு அமுதம்
64. விளையாட்டுச் சிந்தனைகள்
65. விளையாட்டு உலகம்
66. சிந்தனைச் சுற்றுலா
67. விளையாட்டு உலகில் சுவையான சம்பவங்கள்
68. அர்த்தமுள்ள விளையாட்டுக்கள்
69. விளையாட்டுக்களின் வினோதங்கள்
70. வானொலியில் விளையாட்டுக்கள்
71. அனுபவக்களஞ்சியம்
72. மறைந்து கிடக்கும் மனித சக்தி

73. புதுப்புது சிந்தனைகள்
74. உடற்கல்வி என்றால் என்ன?
75. உடற்கல்வியைக் கற்பிக்கும் முறைகள்
76. விளையாட்டு விழா நடத்துவது எப்படி?
77. நீங்களும் ஒலிம்பிக் வீரராகலாம்
78. விளையாட்டு விருந்து
79. வாழ்க்கை பந்தயம்
80. பல்கலைச் சிந்தனைக் களஞ்சியம்
81. இலக்கியம் சிந்தும் விளையாட்டு இன்பம்
82. கிரிக்கெட் விளையாடுவது எப்படி?
83. விளையாட்டுத் துறையில் ஆங்கிலம் தமிழ் அகராதி
84. விளையாட்டுத் துறையில் கலைச்சொல் அகராதி
85. விளையாட்டுத் துறையில் சொல்லும் பொருளும்.
86. G.K. for Competitive Exam.
87. How to Break Ties-in Sports and Games
88. G.K. in Sports and Games
89. Quotations on Sports and Games
90. General Knowlege in Sports and Games
91. Physical Fitness and Health
92. சிந்தனைப் பந்தாட்டம்
93. விளையாட்டு ஆத்திச்சூடி
94. செங்கரும்பு
95. நல்ல பாடல்கள் (சிறுவர்)
96. நல்ல நல்ல கதைப் பாடல்கள் (சிறுவர்)
97. நல்ல கதைகள் பாகம் - 1
98. நல்ல கதைகள் பாகம் - 2
99. நல்ல கதைகள் பாகம் - 3
100. பண்பு தரும் அன்புக் கதைகள்
101. கடவுள் கைவிடமாட்டார்
102. தெய்வமலர்
103. வெற்றி விளையாட்டு காட்டுகிறது
104. வேஷங்கள் விளையாடுகின்றன.
105. நல்ல நாடகங்கள் (இலக்கியம்)
106. நவனின் நாடகங்கள்
107. நவரச நாடகங்கள்
108. மாணவர்க்கேற்ற மேடை நாடகங்கள்
109. சுவையான நாடகங்கள்
110. சாந்தி தமிழ் வாசகம்
111. Shanthi's ABC Book
112. நன்னெறிக்கல்வி - 9-ஆம்வகுப்பு
113. நன்னெறிக்கல்வி -10-ஆம் வகுப்பு
114. நவனார் உரைநூல்-10-ஆம் வகுப்பு

உடல்நல உடற்கல்விப் பாடநூல் ஆங்கிலம், தமிழ் இருமொழிகளிலும்
எங்களிடம் 6 வகுப்பு முதல் 12 வகுப்பு வரை கிடைக்கும்.
6 முதல் 8 வகுப்பு வரை - விலை ரூ.18.00
9 முதல் 12 வகுப்பு வரை - விலை ரூ. 20.00



1937-2001

## ஆசிரியரைப்பற்றி

டாக்டர்.எஸ். நவராஜ் செல்லையா அவர்கள் தனது மாணவர் பருவத்தில் சிறந்த விளையாட்டு வீரராகத் திகழ்ந்தவர். சென்னை பல்கலைக்கழக அளவில் மும்முறைத்தாண்டும் போட்டியில் சாதனையாளர். மழலையர் பள்ளி குழந்தைகள் முதல் ஆய்வறிஞர் பட்டம் பெற்ற மாணவர் வரை பாடம் நடத்திடும் வாய்ப்பு பெற்றவர்.

சென்னை பல்கலைக்கழக வரலாற்றில் விளையாட்டுத்துறையில் ஆய்வறிஞர் பட்டம் பெற்ற முதல் மாணவர்.

விளையாட்டுத்துறையில் அதிகமான நூல்களை எழுதி, தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு துணை நின்றவர். எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பதில் அதிக ஈடுபாடு கொண்டவர்.

விளையாட்டுத்துறையை சார்ந்த 'விளையாட்டுக் களஞ்சியம்' மாத இதழை 25 ஆண்டுகள் தொடர்ந்து ஆசிரியர் பொறுப்பை ஏற்று வெளியிட்ட பெருமைக்குரிய மனிதர்.

விளையாட்டுக்களின் மேன்மையை சொல்லும் ஒலி நாடாக்களையும், 'ஓட்டப்பந்தயம்' என்னும் திரைப்படத்தையும் தயாரித்து, இயக்கி, நடித்து திரையிட்ட சாதனையாளர்.

மூன்று முறை தேசிய விருது பெற்றுள்ளார். ஒருமுறை தமிழ்நாடு அரசின் விருதையும் பெற்றுள்ளார்.

'திருக்குறள் புதிய உரை' என்னும் நூலில் திருக்குறள் (அறத்துப்பால் மட்டும்) ஒழுக்கம் பற்றி கூறும் உடலியல் நூல் என்னும் கருத்தை முதன்மையாகக் கொண்டு புத்துரைதந்து தமிழுக்கு தொண்டாற்றிய தமிழ்த்தொண்டர்.

ஆர். ஆடம் சாக்ரட்டீஸ்
பதிப்பாளர்.